அறைவு 03 இயம் 52 July 25-31, 2015
உள்ளத்திலே உண்மையொளி உண்டாயின், வாக்கினிலே ஒளி உண்டாகும்
மலைமுரசு
MALAIMURASU
Registered as a newspaper in Sri Lanka
பக்கங்கள் : 24 விலை : 30.00
பிரதி சனி தோறும் வெளியாகும் வார இதழ்
03 ஆண்டு நிறைவு

# தமிழ் சிவில் சமூகம் அறிவிப்பு

# "யாருக்கு வாக்களிக்க வேண்டும்"

"ஜனவரி 8ம் திகதிக்குப் பின் மேற்குலகம் மற்றும் இந்தியா தமது நலன்களோடு ஒத்துப்போகும் அரசாங்கமொன்றை காப்பாற்றுவதிலேயே மும்முரமாக இருக்கின்றன என்பதே கசப்பான உண்மை. தார்மீகம், அறம்சார் காரணங்களுக்காகவே எமது விடயத்தில் சர்வதேசம் காரியமாற்றும் என எதிர்பார்ப்பது எமது இதுவரைகாலப் பட்டறிவுக்கு முரணானது. இதை எதிர்கொள்ள நாம் எமது நலன்சார் அரசியலில் இருந்து பூகோள அரசியலை அணுகும் தமிழ்த் தரப்பை தெரிந்தெடுக்க வேண்டும்.

ஆகவே தான் அதிசிரத்தையுடன் ஆழமான பார்வை மற்றும அர்ப்பணிப்புடன் நாம் இத்தேர்தலில் தெரிவுகளைச் செய்ய வேண்டியவர்களாக உள்ளோம்.

சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளுக்கு அல்லது அவற்றிற்கு வெளிப்படையாகலோ அல்லது மறைமுகமாகவோ 21

**"நாடாளுமன்ற அரசியல் கடந்த காலத்தில் எமக்கு விடுதலையைப் பெற்றுத் தரவில்லை. தமிழர்களது சுயநிர்ணய உரிமைக்கான அரசியல் ஒரு சில அரசியல்வாதிகளின் நாடாளுமன்ற ஆசனங்களைப் பெறுவதற்கான சுயநல ஆசன அரசியலாக மாற்றப்படுவதை நாம் அனுமதிக்க முடியாது"**


## அதி. வண. நோயல் இமானுவேல் ஆண்டகை அவர்களின்

## "திருப்பொழிவு சிறப்புத் திருப்பலி"

**25.07.2015 (இன்று) காலை 8.30 மணிக்கு**
**புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் திருப்பொழிவு நிகழ்வு வெகு விமர்சையாக இடம்பெறுகின்றது.**

ஓய்வு பெற்ற அதி. வணக்கத்துக்குரிய கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகை அவர்களும், கொழும்பு மறை மாவட்ட பேராயர் கருதினால் மல்கம் ரஞ்சித் அவர்களும், பாப்பரசரின் பிரதிநிதி உயர் திரு பியர்ரே நுய்யேன் வான் டொற் அவர்களும், ஏனைய மறை மாவட்டங்களைச் சேர்ந்த ஆயர்களும் இணைந்து இந்நிகழ்வில் சிறப்பிக்கவுள்ளனர்.

**அனைவரும் வருக! வருக!!**






# "தேசத்தை வெல்பவர்களை தமிழர்களின் தெரிவாக்குங்கள்"

தமிழர்களின் நிரந்தரத் தீர்வாகத் தமிழ்த் தேசத்தைப் பெற்றுத்தரக்கூடிய கொள்கையுள்ள கட்சியின் பிரதிநிதிகளைத் தேர்தலிற் தெரிவுசெய்ய வேண்டும் என அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் திருகோணமலை மாவட்டத்திற்கான பிரதம வேட்பாளரும் மலைமுரசு பத்திரிகையின் முன்னாள் பிரதம ஆசிரியருமான இரா. ஸ்ரீஞானேஸ்வரன் மக்களிடம் கேட்டுக்கொண்டார். 21



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விருப்பு, வெறுப்பின்றி உண்மையை இயம்பும் கிழக்கின் வார இதழ்

மலைமுரசு
MALAIMURASU
இல 159ஏ. கடல்முக வீதி
திருகோணமலை
026 2227677
malaimurasu@hotmail.com 075 4252042

## முஸ்லிம்களுடன் கைகோர்ப்பு – அடிப்படை என்ன?

ஈழத்தின் தமிழ்த் தலைமைகள் முஸ்லிம் தரப்புடன் கைகோர்த்துச் செயற்படுவதற்கான தனது முயற்சிகளை கைவிடாமல் முன்னெடுத்து வருகின்றமை தமிழ்த் தரப்பின் முயற்சிகளில் இருந்து தெளிவாகப் புலனாகி வருகின்றது.

இதற்கான முதல் முயற்சியானது கிழக்கு மாகாண சபையின் இரண்டாவது ஆட்சிக் காலத்தின் போதே தமிழ்த் தலைமையினால் வெளியிடப்பட்டது.

2012ம் ஆண்டில் நடைபெற்ற கிழக்கு மாகாண சபைக்கான தேர்தலில் போட்டியிட்ட தமிழ்த் தெசியக் கூட்டமைப்பு தனிக்கட்சி என்ற அடிப்படையில் 11 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டது. மொத்த ஆசனங்களான 37 ஆசனங்களில் எந்தவொரு கட்சியும் ஐம்பது வீதத்திற்கு மேல் பெற்றுக்கொள்ளாத நிலையில் மற்றைய கட்சிகளுடன் இணைந்தே கிழக்கு மாகாண சபையில் ஆட்சியை நடத்தும் நிலை போட்டியிட்ட அனைத்துக் கட்சிகளுக்கும் ஏற்பட்டது.

இந்நிலையில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு 14 ஆசனங்களையும் முஸ்லிம் காங்கிரஸ் 7 ஆசனங்களையும் ஐக்கிய தேசியக் கட்சி 4 ஆசனங்களையும் தேசிய முன்னணி 1 ஆசனத்தையும் பெற்றுக்கொண்ட நிலையில் ஆட்சி அமைப்பானது ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு தமிழத் தேசியக் கூட்டமைப்பு மற்றும் முஸ்லிம் காங்கிரஸ் ஆகியவற்றிற்கிடையில் நிகழவேண்டிய தேவை எழுந்தது.

இதன்போது முஸ்லிம் காங்கிரஸ் உடன் கூட்டுச் சேரத் தயாரான தமிழ்த் தலைமை அதற்கான வேண்டுகோளை வெளிப்படுத்தியது. அவ் வேண்டுகோளிற் பல விட்டுக்கொடுப்பபுக்களையும் தமிழ்த் தலைமை வெளிப்படுத்தியதை அடுத்து ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தனது பேரம் பேசலுக்காக எறிந்த துருப்புச் சீட்டுக்களாக மத்திய அரசில் ஒரு அமைச்சுப் பதவி மற்றும் சில பிரதி அமைச்சர் பதவிகள் என்பவையாக இருந்தன.

முஸ்லிம் காங்கிரஸ் அந்தக் கணத்தில் தனக்கான நடப்பு நேர நன்மைகள் பலவற்றை எவருடன் சேர்ந்தால் அனுபவிக்க முடியும் எனக் கணக்கிட்டு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புடன் இணைந்து கொண்டது.

பின்னர் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு சனாதிபதி ஆட்சி அதிகாரத்தை இழந்தபோது பல குழறுபடிகளின் பின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இரண்டு அமைச்சுப் பதவிகளுடன் கிழக்கின் மாகாணசபையை அலங்கரிக்கின்றது.

தற்போது நாடாளுமன்றத் தேர்தலில் முஸ்லிம்களுடன் கூட்டுச் சேரும் முயற்சியை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்றப் உறுப்புரிமையைப் பெறப் பயன்படுத்தத் தொடங்கியுள்ளது.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பிற்கும் முஸ்லிம்களுக்கும் இடையிலான உறவிற்கு நிலையானதொரு திட்டமிடலும் அதன்பாற்பட்ட செயற்பாடுகளும் வகுக்கப்பட்ட பின்னரே அந்த உறவு கட்டியெழுப்பப்படவேண்டும்.

அதைவிடுத்து காலத்திற்குக் காலம் தேவைக்கேற்பச் சேர்வதும் பிரிவதும் ஒரு மொழியைப் பேசும் இரண்டு பிரிவுகளுக்கும் இடையில் நிரந்தரப் பிணைப்பை ஏற்படுத்தாது என்பதை அனைவரும் புரிந்துகொள்ள வேண்டும்.

தமிழ்த் தேசத்தில் நிரந்தர அமைதியொன்றுக்காகவும் அத் தேசத்தில் வாழும் இனங்களுக்கிடையே ஒற்றுமையை உருவாக்கவும் என்ற நோக்கத்துடன் அந்த இரு பிரிவு மக்களும் தம்மிடையேயான இணைவு தொடர்பாகத் தெளிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

அந்த ஆய்வுகளின் அடிப்படையில் இரண்டு பிரிவு மக்களும் ஒன்றுபட்டுத் தொடர்ந்து செய்ற்பட முடிவுகளை மேற்கொள்ள வேண்டும்.

வெறுமனே கிழக்கு மாகாண சபையின் ஆட்சிக்காகவும் நாடாளுமன்றத்தின் கதிரைக்காகவும் முஸ்லிம்களுடன் கூட்டுச் சேர்வது என்பது தமிழ்த் தேசிய இனத்தின் தீர்வைக் கண்டுகொள்ள முயற்சிக்கும் முன்நகர்விற்கு என்றுமே வலுச் சேர்க்காது.

தற்காலிகமாகச் சேர்ந்து பின் பிரியும் போது நிகழும் உடைவானது நிரந்தரப் பகையாகும் என்பதை கருத்திற்கொள்வார்களா?

### உரிமையோரின் பெயரிலே ஆதன வரி

திருகோணமலை நகரசபையால் வழங்கப்பட்ட காணிகளுக்கான ஆதனவரிகளை காணி உரிமையாளர்களான மக்களின் பெயரில் அறவிடுமாறு நகரசபைக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட் அறிவித்துள்ளார்.


2010ஆம் ஆண்டு 576 பேருக்கு காணி உறுதிகள் வழங்கப்பட்டு, அவை காணிப் பதிவாளர் திணைக்களத்தால் அங்கிகரிக்கப்-பட்டு நகரசபைப் பதிவேட்டிலும் பதியப்பட்டது. இக்காணிக்கான அறவிட-வேண்டிய வரிகளை சிலரிடம் நகரசபையின் பெயரிலேயே நகரசபை அறவிட்டு வந்தது. இதனையடுத்தே

### சீதனவெளி மக்களுறும் துயரம்

கிளிவெட்டி முகாமில் தங்கியிருந்த சம்பூரை பிறப்பிடமாகக் கொண்ட மக்கள் சீதனவெளியில் குடியேற்றங்கள் அமைக்கப்பட்டு குடியமர்த்தப்பட்டனர். இரண்டு கட்டங்களாக நடைபெற்ற இக்குடியேற்றம் 2012 மார்கழி மாதம் 1ம் கட்டமாகவும் 2013 ஜூன் மாதம் இரண்டாம் கட்டமாகவும் இடம்பெற்றது.

குடியேறி முழுமையாக 3 வருடங்களைக் கூட கடந்திருக்காத வீடுகளில் சுற்றி வர வெடிப்புக்கள் ஏற்படுகின்றன. சிறு காற்றுக்குக் கூட அவ்வீடுகளின் கூரைகளால் தாக்குப் பிடிக்க முடியவில்லை. எந்தவொரு பயிர்ச்செய்கையையும் அங்கு மேற்கொள்ள முடியவில்லை. மொத்தமாக 94 குடும்பங்கள் வாழும் அக்கிராமத்திற்கு ஒரே ஒரு கிணறு தான் உண்டு. அதுவும் கோடை காலத்தில் வற்றி விடக்கூடிய நிலையில் உள்ளது. குடியேற்றப்பட்டதன் பின்னர் எதுவித வாழ்வாதார உதவிகளும் அம்மக்களுக்கு சென்றடையவும் இல்லை. எந்தவொரு தலைவரும் சென்று பார்க்கவுமில்லை.

வீடுகள் எந்நேரத்திலும் சரிந்து விழும் அபாயத்தின் மத்தியிலேயே தாங்கள் வாழ்தாக மலைமுரசின் பிரதம ஆசிரியரும், த.தே.ம.முயின் பிரதம வேட்பாளருமாகிய திரு.இரா.ஸ்ரீஞானேஸ்ரன் அவர்களிடம் மக்கள் விசனம் தெரிவித்துள்ளனர்.





### தேசிய பட்டியலில் பா.உ என்ற கோரிக்கையுடன் மூதூர் முஸ்லிம்கள் சம்பந்தனுடன் கைச்சாத்து

அச்சுதன்

கடந்த வெள்ளிக்கிழமை மூதூர் மட்டக்களப்பு வீதியில் அமைந்துள்ள தனியார் விடுதியில் இரவு 08 மணியளவில் இடம் பெற்ற விசேட சந்திப்பு ஒன்றில் தமிழ் தேசிய கூட்டமைப்பின் தலைவர் மற்றும் வேட்பாளர்களும் உட்பட பலர் கலந்து கொண்டிருந்தனர்.

பிரதிநிதிகள் சார்பாக கருத்து தெரிவித்த இக்குழுவின் செயலாளர் ஆர்.சாராஜ் என்பவர் கருத்து தெரிவிக்கும் போது மூதூர் முஸ்லீம் மக்கள் கடந்த பல வருடங்களாக தமது ஆதரவை முஸ்லீம் காங்ரசுக்கு வழங்கி வருகின்றோம் ஆயினும் அவர்கள் எமக்கான பிரதிநிதிக்கு தமது கட்சியில் வேட்பாளர் பட்டியலில் தருமாறு கோரிய போது, அவர் எம்மை புறம் தள்ளினார். எனவே நாம் எமது ஆதரவை தமிழ் தேசிய கூட்டமைப்பிற்கு வழங்க தீர்மானித்துள்ளோம். எனவே எமது மக்களுக்கு பிரதி உபகாரமாக தமிழ் தேசிய கூட்டமைப்பு தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவரை எமக்கு வழங்குமாறு கோரினார்கள்.

இதன் போது கருத்து தெரிவித்த இரா.சம்பந்தன் அவர்கள் தமிழ் தேசிய கூட்டமைப்பு .இலங்கையில் உள்ள தமிழ் பேசும் மக்களின் உரிமைகளுக்காக போராடும் கட்சியாகும் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் இருப்பையும் உரிமைகளையும் பாதுகாக்க உருவாக்கபட்ட இந்த கட்சியில் அன்று முதல் இன்று வரை எந்த சலுகைகளுக்கும் விலை போகாமல் நாம் செயற்பட்டு வருகின்றோம் எனவே தற்போது எமது வேட்பாளர் நியமனம் மற்றும் தேசிய



பட்டியல் பிரதிநிதிகள் போன்ற விடயங்களை நிறைவு செய்து விட்டோம் எனினும் நாம் ஒரு போதும் உங்களை கைவிட மாட்டோம் உங்களுடைய விசுவாசத்தை வாக்குகளால் உறுதிப்படுத்தங்கள் நாம் உங்களுக்க்கு சாதகமான பலாபலனை பெற்று தருவோம் என்றும் தெரிவித்தார்.

### பாடசாலைகளுக்கான முதலுவிப் பெட்டி உதவி

(தம்பலகாம நிருபர்)

தம்பலகாமம் பிரதேச செயலாளர் ஜே.சிரிபதி தலைமையில் பிரதேச சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் எம்.எஸ்.றியால் அவர்களின்



உதவியுடன், செயலகத்துக்கு உட்பட்ட சுமார் பதிநான்கு பாடசாலைகளுக்கும் அதிபர்களிடம் சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையினால் ஒதுக்கீடு செய்யப்பட்ட பணத்தினை கொண்டு மாணவர்களின் அவசர நோய் சிகிச்சையை தீர்க்கும் முதலுதவி பெட்டி வழங்கும் நிகழ்வு அண்மையில் இடம் பெற்றது. இதன் போது முள்ளிபொத்தானை தாருஸ்ஸலாம் அதிபர் முகமட் மன்சூர் அவர்களிடம் பிரதேச செயலாளர் மற்றும் சிறுவர் பாதுகாப்பு உத்தியோகத்தர் முதல் உதவி பெட்டியை வழங்கி வைத்தார்.

### விபத்தில் சிறுமி மரணம்

(தம்பலகாம நிருபர்)

மாவனல்லவிலிருந்து திருகோணமலை நோக்கி பயணித்துக் கொண்டிருந்த வேளை கந்தளாய், 93 கட்டைப் பகுதியில் வைத்து சென்று



கொண்டிருந்த ஆட்டோ காரில் மோதி விபத்துக்குள்ளானது.

இவ்விபத்தில் 5 வயது சிறுமி சம்பவம் நடந்த இடத்திலேயே மரணமானார். பாத்திமா சபியா எனும் அச்சிறுமி மாவனல்ல பிரதேசத்தைச் சேர்ந்தவராகும். மேலும் பலர் காயத்திற்குள்ளாகினர்.

விரைந்து சென்ற போக்குவரத்து காவல்துறையினர் இச்சம்பவம் குறித்து மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர்கள் மூவர் கைகலப்பில்

## த.தே.கூ இன் கூட்டத்தில் நிகழ்ந்த அசம்பாவிதம்

காத்தான்குடி பிரிவுக்குட்பட்ட கிரான்குளத்தில் கடந்த புதன்கிழமை மாலை நடைபெற்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தின்போது, ஏற்பட்ட கைகலப்பில் காயமடைந்த மூன்று பேர் காத்தான்குடி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதாக காவல்துறையினர் தெரிவித்தனர். தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தேர்தலில் யாரை ஆதரிப்பது என்பது தொடர்பான கலந்துரையாடல் கிர்ரான்குளத்திலுள்ள கூட்டுறவுச் சங்க மண்டபத்தில் நடைபெற்றது. இதில் ஆரையம்பதி தொடக்கம் கிரான்குளம் வரையான பகுதிகளிலுள்ள கூட்டமைப்பு ஆதரவாளர்கள் கலந்துகொண்டனர். இந்தக் கூட்டத்தில் வேட்பாளர்களை ஆதரிப்பது தொடர்பில் மூன்று ஆசிரியர்களுக்கிடையில் கடும் வாக்குவாதம் இடம்பெற்று, அது இறுதியில் கைகலப்பாக மாறியது. இதிலேயே மேற்படி மூன்று பேரும் காயமடைந்துள்ளனர்.

## ஏறாவூரில் வைத்து ஒருவர் கடத்தப்பட்டதாக பதற்றம்

ஏறாவூருக்குட்பட்ட களுவன்கேணி கிராமம் சிங்காரத்தோப்பில் வசித்து வந்த தனது கணவனை கடந்த செவ்வாய்க்கிழமை இரவு முதல் காணவில்லை என மனைவி வைரமுத்து தங்கநேசம் ஏறாவூர் காவல் நிலையத்தில் கடந்த புதன்கிழமை முறைப்பாடு பதிவு செய்துள்ளார். முறைப்பாட்டில் தெரிவித்துள்ளதாவது, ஏறாவூரிலுள்ள ஹார்ட்வெயார் கடைக்கு வழமை போன்று வேலைக்குச் சென்ற தனது கணவன், புதன்கிழமை காலை வரை வீடு திரும்பவில்லை. விசாரித்தறிந்தபோது ஏறாவூரில் வைத்து செவ்வாய்க்கிழமை வேனில் கடத்திச் செல்லப்பட்டதாக தகவல் வெளியாகியுள்ளது. கண்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி என்பவர் 2004ம் ஆண்டு தன்னைத் திருமணம் செய்து கொண்டு குடும்பமாக வாழ்ந்து வந்ததாகவும் தனது முந்தைய திருமணத்தில் 3 பிள்ளைகள் உண்டு என்றும் தெரிவித்துள்ளார். ஆனால், விசாரணையின்போது முறைப்பாட்டாளரான பெண் குறித்த நபரின் சட்டப்படியான மனைவி இல்லை என்பது தெரியவந்திருப்பதாக காவல்துறையினர் தெரிவித்தனர்.

## சவால்களுக்கு முகங்கொடுக்கின்றோம்

தமிழ் மக்களின் அபிலாஷைகளை வென்றெடுக்க வேண்டுமென்பதற்காக முழுமையாக ஈடுபடுகின்ற தமது கட்சி பல சவால்களுக்கு முகங்கொடுக்க வேண்டியுள்ளதாக கிழக்கு மாகாண விவசாய அமைச்சரும் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச் செயலாளருமான கிருஸ்ணபிள்ளை துரைராசசிங்கம் தெரிவித்தார். இலங்கைத் தமிழரசுக் கட்சி இளைஞர் அணி உறுப்பினர்களுடன் மட்டக்களப்பு காரியாலயத்தில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சந்திப்பிலேயே, அவர் மேற்கண்டவாறு கூறினார். இங்கு மேலும் தெரிவித்த அவர், "இந்தத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை வெற்றி பெறச் செய்து தமிழ் மக்களின் உரிமைகளை வென்றெடுப்பதற்குரிய அடுத்த கட்டத்தை எட்டுவதற்கான ஆணையை மக்களிடமிருந்து நாம் மீண்டும் பெறுவதே எமது நோக்கமாகும்" என்றார்.

## திடீர் சோதனைகள்

மட்டக்களப்பு நகரின் பல்வேறு பகுதிகளிலும் உள்ள உணவு விடுதிகள் இன்று புதன்கிழமை அதிகாலை முதல் பொதுச்-சுகாதார பரிசோதகர்களினால் திடீர் சோதனைக்குட்படுத்தப்பட்டது. உணவு விடுதிகளில் காலையில் விற்பனை செய்யப்படும் உணவுகளின் தரம் தொடர்பில் பொதுமக்களினால் தெரிவிக்கப்பட்டுவரும் முறைப்பாடுகளை தொடர்ந்து இந்த சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

தொடர்ச்சியான இவ்வாறான திடீர் சோதனை நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஐந்தாண்டு திட்ட ஆய்வு

ஐரோப்பிய ஒன்றியத்தின் நிதியுதவியில் மட்டக்களப்பு மாவட்டத்தில் நடைமுறைப்படுத்தப்படும் ஐந்து ஆண்டு அபிவிருத்தித்திட்டத்தில் ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித்-திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் செயற்திட்டங்கள் தொடர்பான மீளாய்வுக் கூட்டம் கடந்த செவ்வாய்க்கிழமை மட்டக்களப்பு மாவட்ட செயலகத்தில் அரசாங்க அதிபரும் மாவட்டச் செயலாளருமான திருமதி.பி.ஸ்.எம்.சார்ள்ஸ் தலைமையில் நடைபெற்றது.



ஐக்கிய நாடுகள் அபிவிருத்தித் திட்டத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் அரச உத்தியோகத்தர்களுக்கான திறன் அபிவிருத்தி சம்பந்தமாக ஏற்கனவே புவிசார் தகவல் தொழில்நுட்பம், விளைவுசார் இலக்கு நோக்கிய திட்டமிடல் முகாமைத்துவம் உள்ளிட்ட பயிற்சிகள் நடத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# மலைமுரசு MALAIMURASU மட்டக்களப்புச் செய்திகள்

## பிரித்தானிய உயர்ஸ்தானிகர் மற்றும் பிரதிநிதிகள் சந்திப்பு

நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் பிரதிநிதிகளுக்கும் இலங்கை மற்றும் மாலைதீவுக்கான பிரித்தானிய உயர்ஸ்தானிகர் ஜேம்ஸ் டொரிஸுக்கும் இடையில் கடந்த புதன்கிழமை மாலை சந்திப்பு இடம்பெற்றது. நல்லாட்சிக்கான தேசிய முன்னணியின் காத்தான்குடி தலைமையகத்தில் இந்த சந்திப்பு இடம்பெற்றது. இதன்போது நல்லாட்சிக்கான தேசிய முன்னணி முன்னெடுத்துள்ள அரசியல் வேலைத்திட்டங்கள், இலங்கையின் எதிர்கால அரசியல் முன்னெடுப்புக்கள் தொடர்பில் கலந்துரையாடியதாக கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் அப்துர் ரஹ்மான் தெரிவித்தார்.

இச்சந்திப்பில் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் மற்றும் நல்லாட்சிக்கான தேசிய முன்னணி கூட்டணியின் மட்டக்களப்பு மாவட்ட வேட்பாளர் அப்துர் ரஹ்மான், தலைமைத்துவ சபை உறுப்பினர்களான பலுளுள் ஹக், எம்.ஏ.சி.எம். ஜவாஹிர், பிராந்திய செயற்குழு உறுப்பினர்களான ஏ.ஜி.எம். ஹாறூன், ஏ.எஸ்.எம். ஹில்மி உள்ளிடடோரும் மகளிர் அணி உறுப்பினர்களும் கலந்துகொண்டனர்.



## ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

தங்களுக்கான நிரந்தர நியமனத்தை வலியுறுத்தி காலவரையறையின்றி கடந்த ஆறாம் திகதியிலிருந்து கிழக்கு மாகாண சுகாதாரத் தொழிலாளர்கள் மேற்கொண்டுவந்த ஆர்ப்பாட்டம் வியாழக்கிழமை கைவிடப்பட்டது. ஆர்ப்பாட்ட இடத்துக்குச் சென்ற கிழக்கு மாகாண முதலமைச்சர் செய்னுலாப்தீன் நஸீர் அஹமட், சுகாதாரத் தொழிலாளர்களின் பிரச்சினைகளை கேட்டறிந்தார். தேர்தலின் பின்னர் நியமனம் வழங்கும் விபரம் கலந்துரையாடப்படும். இதன்போது, சுகாதாரத் தொழிலாளர்களின் கோரிக்கையை கவனத்திற்கொண்டு நியமனம் வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படுமென்று முதலமைச்சர் தெரிவித்ததை அடுத்து அனைவரும் கலைந்து சென்றனர்.

## கஞ்சாவுடன் ஒருவர் கைது

9,360 மில்லிகிராம் கஞ்சாவை வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் மட்டக்களப்பு, ஏறாவூரில் கடந்த வியாழக்கிழமை மாலை ஒருவரை கைதுசெய்ததாக ஏறாவூர் காவல்துறையினர் தெரிவித்தனர். தமக்கு கிடைத்த தகவலைத் தொடர்ந்து இந்த சந்தேக நபரை கைதுசெய-ததுடன், அவரிடமிருந்து கஞ்சாவை கைப்பற்றியதாகவும் மேலும் தெரியவந்துள்ளது.

## "போதைப் பொருளை முற்றாக தடுக்க வேண்டும்"

போதையற்ற நாட்டைக் கட்டியெழுப்பும் தேசிய வேலைத்-திட்டத்துக்கமைவாக போதைப்பொருள் தடுப்பு மாதத்தை முன்னிட்டு போதைப் பொருட்களை கிராம மட்டத்தில் ஒழிப்பதற்காக வேண்டி அரச உத்தியோகஸ்த்தர்களுக்கு விளக்க-மளிக்கும் நிகழ்வு, மட்டக்களப்பு மாவட்டம் போரதீவுப்பற்று பிரதேச செயலயத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது, அரச அதிகாரிகள் மக்களுடன் இணைந்து கிராம மட்டங்களில் காணப்படும் போதைவஸ்த்துக்களை எவ்வாறு ஒழித்தல்? மற்றும் கடைப்பிடிக்க வேண்டிய உபாயங்கள்? தொடர்பாக விளக்கமளிக்கப்பட்டன.

மற்றும் உள்நாட்டலுவல்கள் அமைச்சினால் வெளியிடப்பட்ட போதைப் பொருள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் தொடர்பான சுற்றறிக்கையும் போதைப்பொருள் பாவனையினால் ஏற்படும் தீமைகள் தொடர்பான பிரசுரங்களும் விநியோகிக்கப்பட்டன.

## ஜனா மீது விசாரணை

பாடசாலை அதிபரை துப்பாக்கி முனையில் அச்சுறுத்தி-யதாகவும், சக வேட்பாளர் சீ. யோகேஸ்வரன் அவர்களது ஆதரவாளர்-களுக்கும் கோவிந்தன் கருணாகரத்தின் ஆதரவாளர்க-ளுக்கும் இடையே மோதல் ஏற்பட்டதாகவும் வெளியான தகவல்கள் குறித்து கோவிந்தன் கருணாகரம் (ஜனா) விடம் தேர்தல் கண்காணிப்புக் குழு உறுப்பினர்கள் வினவியுள்ளர்.

இவ்விடயம் குறித்து தேர்தல் தொடர்பான வேலைப்பளுக்களுக்கு மத்தியில் இத்தகைய கீழ்தரமான செய்திகளுக்கு பதிலளிப்பது எனது நேரத்தை வீண்விரையம் செய்யும் என்பதனால் இது தொடர்பாக எத்தகைய கருத்தையும் இதுவரை தெரிவிக்கவில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போதைப்பொருளுடன் தொடர்புடையோர்

## இத்தேர்தலில் ஓரங்கட்டப்பட வேண்டும்

போதைப் பொருட்களுடன் தொடர்புபட்டவர்கள் இம்முறையும் தேர்தலில் போட்டியிடுவார்களாயின் அவர்கள் இனங்காணப்பட்டு ஓரங்கட்டப்பட வேண்டும் என தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் வன்னி தேர்தல் தொகுதி முதன்மை வேட்பாளர் சி.கஜேந்திரகுமார் தெரிவித்தார்.

தேர்தலில் தமது நிலைப்பாடு தொடர்பாக நேற்று வெள்ளிக்கிழமை வவுனியாவில் இடம்பெற்ற ஊடகவியலளார் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். மேலும் "எமது 60 வருட போராட்டத்தில் அஹிம்சை ஆயுதம் என்ற போராட்டங்களை சந்தித்து முள்ளிவாய்கலில் இடம்பெற்ற நிகழ்வுகளுக்கு பின்னர், எமது மக்கள் தீர்வு கிடைக்கும் கிடைக்கும் என்ற நம்பி ஏமாற்றப்பட்டு வரும் சூழலிலே நாம் இத்தேர்தலில் போட்டியிடுகின்றோம்.

தமிழ் தேசியத்திற்காக உருவாக்கப்பட்ட கட்சி இன்று அதனுடைய கொள்கையில் இருந்து விலகிச் செல்வதனால் இளம் தலைமைத்துவத்தை கொண்ட எமது கட்சி இத்தேர்தலை சந்திக்கின்றது. ஆனால் ஓய்வு பெற்றவர்களுக்கே இன்று சில கட்சிகள் சந்தர்ப்பத்தை வழங்கி வருகின்றது. வெறுமனே ஏமாற்றுபவர்களுக்கு பின்னால் சென்று எமது பட்டதாரிகளும் ஏமாற்றப்படுகின்றமை கவலையளிக்கின்றது" என தெரிவித்தார்.

# மலைமுரசு MALAIMURASU தேசிய செய்திகள்

### சஜின்வாஸ் குணவர்த்தனவின்

## அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிப்பு



முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சஜின்வாஸ் குணவர்த்தன உயர் நீதிமன்றில் தாக்கல் செய்த அடிப்படை உரிமை மீறல் மனு நிராகரிக்கப்பட்டுள்ளது.

தன்னை கைது செய்து தடுத்து வைத்திருப்பதன் மூலம் தனது அடிப்படை உரிமை மீறப்படுவதாக தெரிவித்து அவர் தாக்கல் செய்த மனு நேற்று உயர் நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்ட போதே குறித்த மனுவை நீதிமன்றம் நிராகரித்துள்ளது.

### 4500 போஸ்டர்ஸ்

## வெள்ளை கெப்பில் மீட்பு

இராணுவ இலக்கத் தகடு மற்றும் பிரிதொரு இலக்கத் தகடு பொறிக்கப்பட்ட வெள்ளை நிற கெப் வாகனத்தில் இருந்து அநுராதபுரம் ஐக்கிய மக்கள் சுதந்திர கூட்டமைப்பு வேட்பாளர் ஒருவரின் 4500 போஸ்டர்கள் மீட்கப்பட்டுள்ளதோடு இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கெபதிகொல்லாவ - கொன்கொல்லாவ பிரதேசத்தில் வைத்து நேற்று அதிகாலை 2.20 மணிக்கு குறித்த கெப் வாகனம் மீட்கப்பட்டுள்ளது. அநுராதபுரம் பரகஸ்வெவ்வெவ பகுதியில் வசிக்கும் ஒருவரது பெயரில் குறித்த கெப் பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் இராணுவ இலக்கத் தகடு தொடர்பில் காவல்துறையினர் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## "தேர்தல் விஞ்ஞாபனம் விரைவில்..."

இலங்கை நாடாளுமன்ற தேர்தலுக்கான தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனம் தமிழ் மக்களின் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு உள்ளிட்ட முக்கிய 3 விடயங்களை உள்ளடக்கியதாக இருக்குமென கட்சியின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், ஊடகப்பேச்சாளருமான சுரேஸ் பிறேமச்சந்திரன தெரிவித்துள்ளார்.

யாழ்.தேர்தல் மாவட்டத்தில் பருத்தித்துறை, தென்மராட்சி, உடுவில் பகுதிகளில் 25ம், 26ம் திகதிகளில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்மந்தன் தலைமையில் நடைபெறவுள்ள கூட்டங்களில் மக்களுக்கு கூட்டமைப்பின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அறிமுகம் செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ள-தாகவும் அவர் கூறினார்.

TNA
Tamil National Alliance
தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு

### 30.07.2015 இல்


## வாக்குச்சீட்டு வழங்கல் ஆரம்பம்

பாராளுமன்ற தேர்தலுக்கான வாக்குச்சீட்டுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளை ஜூலை மாதம் 30ஆம் திகதி ஆரம்பிக்க தீர்மானிக்கப்பட்டுள்ளது. ஒரு கோடியே 50 இலட்சத்து 44,491 வாக்குச்சீட்டுகள் இம்முறை அச்சிடப்படவுள்ளன. இந்த உத்தியோகபூர்வ வாக்குச்சீட்டுகளை எதிர்வரும் 29 ஆம் திகதி தபாலில் அனுப்பி வைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் செயலகம் குறிப்பிட்டுள்ளது அதற்கு மறுநாளான 30 ஆம் திகதி முதல் வாக்குச்சீட்டு விநியோகத்தை ஆரம்பிக்கவுள்ளதாக தபால் மாஅதிபர் ரோஹண அபேரத்ன தெரிவிக்கின்றார். பாராளுமன்ற தேர்தலுக்கான. தபால்மூல வாக்குச்சீட்டுகள் அடங்கிய காப்புறுதிப் பொதிகளை நேற்றைய தினம் தபால் திணைக்களத்திடம் ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

## 5வருக்கு மரணதண்டனை

லிந்துலை - கிறேட்வெஸ்டன் தோட்டத்தில் 2000ஆம் ஆண்டு இடம்பெற்ற கொலை சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேருக்கு நுவரெலியா மேல் நீதிமன்ற நீதிபதி லலித் ஏக்கநாயக்க மரண தண்டனை விதித்து தீர்ப்பளித்துள்ளார். இந்த கொலையுடன் தொடர்புடைய 8 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்ட போதும் மூவர் நிரபராதிகள் என அறிவித்து நீதிமன்றம் விடுதலை செய்தது.

பின் நேற்று நீதிமன்றத்தில் ஆஜராகியிருந்த கிறேட்வெஸ்டன் தோட்டத்தைச் சேர்ந்த சந்திரசேகரன் வேலுப்பிள்ளை, பெருமாள் லெட்சுமன், பெருமாள் மயில்வாகனம், பெருமாள் பாகர், ராஜேந்திரன் குணசேகரன் ஆகிய ஐந்து பேருக்கும் மரண தண்டனை வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## மீளச் செலவத்த பரிந்துரை

The Golden Key

கோல்டன் கீ நிறுவனத்தில் வைப்பீடு செய்தவர்களின் பணத்தை மீள-செலுத்தும் நடவடிக்கை நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது. மூன்று கட்டங்களின் கீழ் இந்த பணம் செலுத்தப்படவுள்ளது. இதன் பிரகாரம் 980 வைப்பீட்டாளர்களின் பணம் மீள் செலுத்தப்படவுள்ளது.

கோல்டன் கீ நிறுவனத்தில் வைப்பீடு செய்தவர்கள் நீண்டகாலமாக எதிர்நோக்கியிருந்த பிரச்சினைகளுக்கு தீர்வாக அவர்களின் வைப்பீட்டு தொகையை அரசாங்கத்தினால் மீள்செலுத்துவதற்காக நிதியமைச்சர் ரவி கருணாநாயக்கவினால் கடந்த வாரம் சமர்ப்பிக்கப்பட்ட பிரேரணைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியிருந்ததை அடுத்தே இது நடைமுறைப்படுத்தப்படுகிறது.

வைப்பீட்டு தொகையை மீளச் செலுத்துவதற்காக 7000 மில்லியன் ரூபாவிற்கும் அதிக நிதி செலவாகும் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

## லசந்த படுகொலை தொடர்பில் முக்கிய சாட்சி



ஊடகவியலாளர் லசந்த விக்ரமதுங்க 2009ஆம் ஆண்டு ஜனவரி 8ஆம் திகதி படுகொலை செய்யப்பட்டார். இந்தப் படுகொலை தொடர்பாக முக்கிய தகவல்களை வெளியிட்டுள்ள இந்த நபர் அப்போது வெலிக்கடை சிறையில் தடுத்து வைக்கப்பட்டிருந்தார். இரகசியப் பொலிஸார் கடந்த பெப்ரவரி மாதம் 25ஆம் திகதி லசந்தவின் படுகொலை தொடர்பான விசாரணைகளை பொறுப்பேற்றுக் கொண்டதை அடுத்து சம்பவம் 'தொடர்பிலான மிக முக்கிய தகவல்களை வழங்கக்கூடிய மேற்படி நபர் தொடர்பாகவும்' விபரங்களை இரகசிய காவல்துறையினர் திரட்டினர். இவரிடம் நடத்திய விசாரணைகளின் அடிப்படையில் குறிப்பிட்ட தகவல்கள் கிடைத்துள்ளதாக கொழும்பு ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

## சீன நிறுவனம் அரசியலில் தலையிடவில்லை

கடந்த ஜனாதிபதி தேர்தலின்போது எந்தவொரு அரசியல்வாதிக்கும் நிதியுதவி செய்யவில்லை என்று சீனாவின் ஹாபர் என்ஜினியரிங் கொம்பனி லிமிடெட் தெரிவித்துள்ளது.

இந்தச் செய்தி தொடர்பில் இலங்கை அதிகாரிகள் பிழையான கருத்தை ஏற்படுத்திக் கொள்ளக்கூடாதென சீன நிறுவனம் கேட்டுக் கொண்டுள்ளது. தமது நிறுவனம் அரசியல்வாதிகளுக்கு நிதி உதவி அளித்ததாக வெளியாகும் செய்திகளுக்கு சீன நிறுவனம் மறுப்பு தெரிவித்துள்ளது.

## கறுப்பு ஜூலை ஓவியக் கண்காட்சி

உலகப் பிரசித்தி பெற்ற இலங்கையின் காண்பியல் கலை படைப்பாளரான சந்திரகுப்த தேனுவரவினுடைய ஓவியங்கள் கடந்த வியாழக்கிழமை காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. 1983 ஜூலை 23ம் திகதி தமிழ் மக்களை சூழ்ந்து பரவலாக இடம்பெற்ற வன்முறைகளின், மனித அவலங்களின் பதிவுகளாகவே இவரின் ஓவியங்கள் காணப்படுகின்றன.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலைமுரசு
MALAIMURASU

# உலகச் செய்திகள்

## காங்கிரஸ் தலைவரை அம்பலப்படுத்துவேன் – சுஷ்மா



இந்தியன் பிறீமியர் லீக் அமைப்பின் முன்னாள் பணிப்பாளரான லலித் மோடிக்கு, வீசா பெறுவதற்கு உதவினார் எனவும், அது அதிகார துஷ்பிரயோகம் எனவும் குற்றஞ்சாட்டப்பட்டுவரும் இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா சுவராஜ், காங்கிரஸ் தலைவரொருவரை அம்பலப்படுத்தவுள்ளதாக அறிவித்துள்ளார். சுஷ்மா சுவராஜ் பதவி விலக வேண்டுமென தொடர்ச்சியான கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டுவரும் நிலையிலேயே, அவர் தற்போது இந்தக் கருத்தை வெளியிட்டுள்ளார். நிலக்கரி ஊழல் வழக்கில் குற்றஞ்சாட்டப்பட்ட சந்தோஷ் பக்ரோடியா என்பவருக்கு, கடவுச்சீட்டை வழங்குமாறு, சிரேஷ்ட காங்கிரஸ் தலைவரொருவர் தன்னிடம் தொடர்ந்தும் கோரிவந்ததாக அவர் தெரிவித்துள்ளார்.

## பாகிஸ்தானில் வெள்ளம்

வட பாகிஸ்தானில் அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ள அனர்த்தத்தில் சிக்கி குறைந்தது மூவர் பலியாகியுள்ளதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. கைபர் பகதுன்கவா மற்றும் பலுசிஸ்தான் பிராந்தியங்களிலுள்ள கிராமங்கள் இந்த வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளன.

கைபர் பகதுன்கவா மாகாணத்திலுள்ள சிட்ரல் நகர் வெள்ளத்தால் மிக மோசமாக பாதிக்கப்பட்டுள்ளதாகவும் அங்கு வீடுகள் பல இடிந்து விழுந்துள்ளத்தாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன.



## கொள்ளையிடப்பட்ட எண்ணெய் கப்பல் விடுவிப்பு

கடந்த வாரம் சிங்கப்பூரிலிருந்து வியட்னாமின் குவாங் ட்ரி துறைமுகத்தை நோக்கிக் கிளம்பிய சன்ரைஸ் 689 சிறிது நேரத்தில் காணாமல்போனது.

துப்பாக்கி மற்றும் கத்தியுடன் அக்கப்பலில் ஏறிய கடற்கொள்ளையர்கள் தங்களைத்தாக்கிவிட்டு தகவல்தொடர்பு சாதனங்களை நொறுக்கிவிட்டு அதிலிருந்த பொருட்களையும் ஒரு பகுதி எண்ணெயையும் களவு செய்ததாகவும், தப்பித்து செல்ல முயன்ற ஒரு ஊழியரின் கால் உடைந்துவிட்டதாகவும் எதிர்ப்புத் தெரிவித்தால் கொன்றுவிடுவோம எனவும் மிரட்டியுள்ளனர்.

கடந்த வியாழக்கிழமை கப்பலையும் ஊழியர்களையும் அவர்கள் விடுவித்தனர் 5,000 டன்னுக்கு மேல் எண்ணெய் ஏற்றிவந்த அந்த கப்பல் தற்போது வியட்னாமை நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது என வியட்னாமின் கப்பல்துறை இயக்குனர் என்க்யூயென் நாட் தெரிவித்துள்ளார்

## குடியேற்றும் முயற்சியில் சுவிஸ்

சுவிட்சர்லாந்தில் குடியேற்ற அனுமதிக்காக காத்திருக்கும் வெளிநாட்டு நபர்களின் எண்ணிக்கை அதிகரிப்பதால் அவர்களை ராணுவ முகாம்களில் தங்க வைக்க சிறப்பு ஏற்பாடுகள் நடந்து வருவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

குடியேற்ற அனுமதி கோரும் நபர்களுக்கு அந்நாட்டு ராணுவம் ஏற்கனவே உதவி வரும் நிலையில், சுவிஸ் வரலாற்றில் முதன் முதலாக பெரிய அளவில் ராணுவ முகாம்கள் (கூடாரங்கள்) அமைத்து அவற்றில் வெளிநாட்டினர்களை தங்க வைக்கும் முயற்சியில் தற்போது ஈடுப்பட்டு வருகிறது.

## கவலையில் இளவரசி



பிரித்தானிய இளவரசியான கேட் மிடில்டன் அணியும் உயரமான காலணிகள் மகாராணியை அதிருப்தி அடைய வைத்துள்ளதாக தற்போது பரபரப்பான தகவல்கள் வெளியாகியுள்ளன. அரச குடும்பத்தில் உள்ளவர்கள் வெளியே செல்லும்போதும் அல்லது பொது நிகழ்ச்சிகளில் கலந்துக்கொள்ளும்போது அரச பாரம்பரியத்தை காக்கும் விதத்தில் உடைகள் அணிய வேண்டும்.

சமீபகாலமாக, கேட் மிடில்டன் அணியும் காலணிகள் மகாராணியை முகம் சுளிக்க வைக்கும் அளவிற்கு உள்ளதாகவும் மகாராணியின் சில உத்தரவுகளுக்கு இளவரசி கேட் மிடில்டன் செவி சாய்ப்பது இல்லை என்றும் அவரது தாயாரின் அறிவுரைகளை கேட்டு அதன்படி நடந்துக்கொள்வதும் அரசு குடும்பத்தில் சலசலப்பை ஏற்படுத்திருந்தது. பல விமர்சனங்கள் எழுகின்றமையால் இளவரசியை கவலையில் ஆழ்த்தியுள்ளதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## நிச்சயதார்த்த படகு மோதி பலி

எகிப்திய கெய்ரோ நகரின் வடக்கே நைல் நதியில் படகொன்றில் புதன்கிழமை இரவு இடம்பெற்ற திருமண நிச்சயதார்த்த வைபவத்தின் போது, அந்தப் படகு சரக்குக் கப்பலொன்றுடன் மோதியதில் அதில் பயணம் செய்த குறைந்தது 21 பேர் பலியாகியுள்ளதாக அந்நாட்டு பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவித்தன.

மேற்படி படகில் பயணித்த 5 பேர் உயிருடன் மீட்கப்பட்டுள்ளனர். அதேசமயம் குறைந்தது 6 பேர் காணாமல் போயுள்ளனர். இந்நிலையில் காணாமல் போனவர்களை மீட்கும் பணி இருள் காரணமாக தாமதமடைந்ததாக பாதுகாப்பு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. பலியானவர்களில் குறைந்தது இரு சிறுவர்கள் உள்ளடங்குகின்றனர்.

## யன்னல் இல்லா விமானம்

இங்கிலாந்தை சேர்ந்த நிறுவனம் ஒன்று விரைவில் உலகின் முதல் ஜன்னல் இல்லாத விமானத்தை சோதனை ஓட்டம் மூலம் பரிசோதிக்கவிருப்பதாகவும், இந்த விமானத்தில் பயணிக்கும் பயணிகள் வெளியே உள்ள காட்சிகளை தெளிவாக பார்க்கும் வகையில் இந்த விமானம் வடிவமைக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளது. இவ்வகையான விமானங்களில் ஜன்னல்களுக்கு பதிலாக முழு நீள திரைகள் அமைக்கப்பட்டு அதன் வழியாக பயணிகள் பறக்கும் விமானத்தில் இருந்து வெளியே உள்ள காட்சிகளை பார்க்கலாம். பயணிகளுக்கு வெளிப்புற காட்சிகள் தெரியவேண்டாமென்றால் அதற்கேற்பவும் மற்றியமைத்துகொள்ளக் கூடிய வகையில் அமைக்கப்பட்டுள்ளது.

## யேர்மன் புயலால் அறுவர் பலி

மேற்கு ஜேர்மனியில் வீசிய புயல் காற்று காரணமாக 6 பேர் பலியானர். இந்தநிலையில், வீடொன்றின் மீது மரம் முறிந்து வீழ்ந்ததில் மூன்று பேர் பலியானதாக வெளிநாட்டு தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதனிடையே, புயல் காற்று காரணமாக, பலர் காயமடைந்துள்ளனர். இதன் காரணமாக, மேற்கு ஜேர்மனியின் தொடருந்து, தரைவழி, வானுர்தி சேவைகள் தற்காலிகமாக இடை நிறுத்தப்பட்டுள்ளன. இதேவேளை, அவசர சேவைகளுக்காக அதிகாரிகள் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளதாகவும் சர்வதேச செய்திகள் தெரிவிக்கின்றன.

## "இரத்தக் காட்டேரிகளின் வாழ்க்கை எனக்குப் பிடிக்கும்"

### இலவச இரத்த தானம்



மெக்சிகோ நாட்டின் லூசியானாவில் உள்ள ஸ்டிரீவ்போர்ட் பகுதியை சேர்ந்தவர் புளுட் கெட்சன். இவர் ரத்தம் குடிப்பவர்கள் தாராளமாக தன்னை தொடர்பு கொள்ளலாம் என்று அழைப்பு விடுத்துள்ளார். மேலும் கடந்த 10 ஆண்டுகளுக்கு மேலாக பலருக்கும் ரத்தம் வழங்கியுள்ளார்.

இது குறித்து புளுட் கூறியதாவது, நான் சிறு வயதில் எனது சகோதரியின் அலமாரியில் ரத்தக்காட்டேரி சம்பந்தமான புத்தகத்தை பார்த்தேன். பின்னர் அதை படிக்க தொடங்கினேன். அப்போதிலிருந்தே ரத்தக்-காட்டேரிகள் வாழ்க்கையை புரிந்துகொள்ள தொடங்கினேன் என்று தெரிவித்துள்ளார். மேலும் ரத்தத்தை தெரியாதவர்களுக்கு வழங்கக்கூடாது என்றும் ரத்தம் [illegible] இருக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## விபரீதமான தீர்ப்பு

கடந்த பிப்ரவரி மாதம் பிரான்ஸில் சொலிமனெ சிலா என்பவர் இரயிலில் பயணம் செய்ய முற்பட்ட போது செல்சியா கால்பந்து அணியின் ரசிகர்கள் 5 பேர் இன வேறுபாடு காரணமாக அவரை இரயிலின் உள்ளே ஏற அனுமதிக்கவில்லை. மேலும் அவரை இரயிலில் இருந்து கீழே தள்ளி விட்டனர். இது தொடர்பாக முன்னாள் காவல்துறை அதிகாரி உட்பட ஐந்து பேர் மீது குற்றம் சாட்டப்பட்டது. இந்நிலையில் கிழக்கு லண்டன் பகுதியில் உள்ள ஸ்டிராட்போர்ட் நீதிமன்றத்தில் இவர்கள் ஐந்து ஆண்டுகளுக்கு கால்பந்தாட்டம் பார்ப்பதற்கு தடை விதித்து தீர்ப்பு வழங்கினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீணையடி நீ எனக்கு...

25



– கவிஞர் வி.மைக்கல் கொலின்–

தொடர் நாவல்

**–தாபங்களின் காட்டில்**
**எரிந்தது காதல் தீ**
**மழை நாள்**
**மண்ணின் மணம் போல**
**இதயத் துவாரங்கள் எங்கும்**
**காதல் மணம்**
**விலை பேசா ஒரு முத்தம் தா**
**என் காதலா**
**இந்த உலகையே**
**உனக்குத் தருகிறேன்–**

– ப்ரபஞ்சப் ப்ரியன் –

பல்கலைக் கழக விடுமுறை நாட்கள் முடிவடைந்ததைத் தொடர்ந்து மாணவர்களும் மாணவிகளும் மீண்டும் பல்கலைக்கழகம் புறப்படத் தயாராகினர்.

அந்த இடைப்பட்ட காலங்களில்தான் திருமலையில் எத்தனை சுற்றி வளைப்புக்கள்? கைதுகள்? அதிகாலை ஐந்து மணிக்கு முன்னமே வீதிகளில் வந்து நிற்கும் காவல்துறையினரும் இராணுவத்தினரும் குறிப்பிட்ட இடத்தின் பெயரை சொல்லி அனைவரையும் அங்கு கூடும் படி ஒலிபெருக்கி மூலம் அறிவிப்பார்கள்.


அதனைத் தொடர்ந்து அனைவரும் அப் பிரதேசத்திற்கு சென்றவுடன் அங்கு முகமூடி சோதனையும், அடையாள அட்டை பரிசோதனையும் நடைபெறும். காலையில் தொடங்கும் இந்த சுற்றி வளைப்பு மதியத்திற்கு பின்னரே முடிவடையும். இது ஒவ்வொரு பிரதேசமாக நடைபெறும்.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்றுக் கொண்டிருந்த ராணுவ நடவடிக்கையின் காரணமாக பல்கலைக் கழக விடுமுறை இரண்டு வாரங்கள் நீடிக்கப்புட்டுள்ளது என பத்திரிகை வாயிலாக அறிவிக்கப்பட்டது. அந்த விடுமுறை நாட்களில் ரதனும் இரண்டு முறை அந்த சுற்றி வளைப்பு சோதனைக்கு ஆளாகியிருக்கிறான். ஒரு நாள் காலை ஒலிபெருக்கி மூலம் அறிவித்த காவல்துறையினர் அனைத்து ஆண்களையும் அவன் படித்த புனித சூசையப்பர் கல்லூரிக்கு மைதானத்துக்கு வரும் படி அழைத்திருந்தனர். அங்கு சென்று சோதனை முடித்து திரும்பி வர மாலை இரண்டு மணிக்கு மேல் ஆகிவிட்டது. அந்த சோதனையில் சில தமிழ் இளைஞர்கள் கைது செய்யப்பட்டது ரதனுக்கு கவலையாக இருந்தது. ரதன் வீடு வந்ததும் உடனே "வேறிடம் நோக்கி .." எனும் தலைப்பில் அவன் ஒரு கவிதை எழுதி பத்திரிகை ஒன்றுக்கு அனுப்பி வைத்தான். சொந்த மண்ணில் நிகழும் கைதுகள், சோதனைகள், சுற்றிவளைப்புக்கள், ஒரு இளைஞனிடம் வேறிடம் நோக்கிய சிந்தனைகளை எவ்வளவு இலகுவாகா ஏற்படுத்துகிறது என்பதை மிக நுண்ணிய முறையில் வெளிப்படுத்தியிருந்தான். அந்த வேறிடம் நோக்கிய சிந்தனைகளை விதைப்பவர்களாக இராணுவத்தினரும் காவல்துறையினரும் செயல்படுகின்றனர் என்ற மெல்லிய உணர்வு அந்த கவிதையில் இழையோடியது..

**"மீண்டும் எனது**
**சொந்த ஊர்**
**நேற்றைய மாலை**
**கால் பதித்தேன்**
**பயணக் களைப்பின்**
**இரவுத் தூக்கம்**
**விடிகாலை**
**"மக்கள் அனைவரும்**
**திறந்த வெளி மைதானத்தில் கூடுக"**
**ஒலி பெருக்கி அறிவிப்பு**
**காற்றில் மிதந்து வரும்**
**மீண்டும்**
**ஞாபகங்கள்**
**ராணுவம்–**
**முகமூடி–**
**கொடிகள் –**
**வாகனங்கள்**
**பிரேதக் களை புதைந்த**
**முகங்களை சுமந்து**
**மக்கள் கூட்டம்**
**வீதியில் செல்லும்**
**அறியாத எதிரிக்காய்**
**தெரியாத முகத்தின் முன் நின்று**
**அடையாளம் இடப்படும்**
**இங்கு அடையாள அட்டைகள்**
**தங்கள் பெறுமதி இழக்கும்**
**தலையாட்டி பொம்மையின்**
**ஆட்காட்டி விரலே**
**பெறுமதி சுமக்கும்**

**அதிர்வுகள் கூடி**
**எங்கோ கேட்கும் வெடிச்சத்தம்**
**குறைந்த பட்சம் இருந்த**
**நம்பிக்கைகளையும்**
**குழிதோண்டிப் புதைக்கும்**

**பயணங்கள்**
**பலருக்கு**
**இறுதியானவை**
**தலையாட்டி அருள் பெற்று**
**முதலில் வெளியே செல்லத் துடிக்கும்**
**கூட்டத்தொடர்**
**தாகம்!**
**என்னுள்**
**தாகம்!**
**நாளை நான் போக வேண்டும்**
**இந்த இடத்தை விட்டு வேறிடம் நோக்கி**
**அது எங்கே...?**
**அது எங்கே...?"**



வேறிடம் நோக்கி என்ற தலைப்பில் எழுதப்பட்ட அந்த கவிதையின் இறுதி வரிகள் தமிழ் இளைஞர்கள் எங்கு போவது என்ற கேள்வியை எழுப்பியிருந்தது.

நாளை மறுநாள் ரதனும், நிவேதாவும் பல்கலைக்கழகம் புறப்பட தயாராகியிருந்தனர். அன்று மாலை ரதன் நிவேதாவை சந்திக்கவென வந்தான்.

"ரதன்..... வாங்க.. பயணத்துக்கான ஆயத்தம் எல்லாம் முடிச்சிட்டீங்களா....?."

"நான் ரெடி... நிவேதா... நீர் என்ன மாதிரி ...?"

"எனக்கென்றா மாமியை விட்டுவிட்டு வாரத நினைக்க ஒரு மாதிரியா இருக்கு ரதன். அவ தனிய எப்பவும் மாமாவையே நினைச்சபடியே இருக்கா... சில நேரத்தில் சாப்பிடிறது கூட இல்ல....."

"என்ன செய்யுற நிவேதா..... கணவன் மனைவி உறவு என்பது தான் உலகத்திலேயே மிகச் சிறந்த உறவு...... எங்கேயோ யாருக்கோ பிறந்த ஒரு ஆணும் பெண்ணும் திருமண பந்தத்தில் இணைந்த பிறகு.... ஒருயிரும் ஈருடலுமாகி விடுகிறார்கள். இந்த சங்கமம் வேறு எந்த உறவிலயும் இல்லைதானே.... அப்படியான அந்த உறவுக்குரியவரின் மறைவு மாமியை பொறுத்தவரை மிகவும் மோசமான பாதிப்பாகத்தானே இருக்கும்..."

"அதுதான் ரதன்... எனக்கு கஷ்டமா இருக்கு..."

"நிவே ஒன்று செய்யலாம்... நாம மட்டக்களப்புக்கு போன பின்பு அங்கு ஒரு வீடு பார்த்து அங்கு மாமிய கூப்பிட்டு எடுப்பம். அது வரைக்கும் அவ இங்கேயே இருக்கட்டும் என்ன...."

"இல்ல ரதன்.. நான் அப்படி கதைச்சு பார்த்துட்டன். மாமா கட்டின இந்த வீட்ட விட்டுட்டு அவ எங்கேயும் வரமுடியாது என்று சொல்லிட்டா....."

**கிழக்குப் பல்கலைக் கழகத்தினை மைய நீரோட்டமாகக் கொண்டு தமிழ் மக்களின் கடந்தகால அரசியல் பேசும் முதல் காதல் காவியம்.**

"அப்படியென்றா என்ன செய்ய நிவே... நேற்றும் சுகுமார் சேர் இன்னும் சில தினங்களில் கம்பஸ் நாடக போட்டி நடக்குமாம் எனவே எங்க ரெண்டு பேரையும் சீக்கிரமா வரச் சொல்லி போன் எடுத்தவர்.."

ஜெயரதன் கதைத்துக்கொண்டிருக்கும் போதே அவ்விடம் தேநீர்க் கோப்பையுடன் வந்த நிவேதாவின் மாமி "தம்பி... குடிங்க. நிவேதா என்ன சொல்றா. எனக்கு விளங்குது என்னைப் பத்தி கவலைப்பட்டு படிப்பக் குழப்ப வேண்டாம் என்று அவளுக்கு சொன்னாலும் கேக்கிறாள் இல்ல. நீங்க சொல்லி எப்படியும் கூட்டிட்டு போங்க. நான் தனிய சமாளித்துக் கொள்ளுவன்."

மாமி என்னதான் தைரியம் சொன்னாலும் அவ நொந்து போன நிலைமையை பார்க்க பாவமாகவும் இருந்தது,

ஆனா நிவேதா கம்பசுக்கு போவதில் அவர் பிடிவாதமாக இருந்தார். இறுதியில் நிவேதாவும் ரதனுடன் நாளை மறுநாள் புறப்படுவதற்குரிய ஆயத்தங்களை செய்வதாக முடிவெடுக்கப்பட்டது.

கிழக்குப் பல்கலைக் கழக நாடக போட்டிகள் நடைபெறுவதற்கான ஆயத்தங்கள் வெகு சிறப்பாக நடந்தன. தமிழ் கலாசார முறைப்படி வாழைமரத் தோரணங்கள் கட்டி அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பிரதம விருந்தினர்களாகவும், சிறப்பு விருந்தினர்களாகவும், நடுவர்களாகவும் அழைக்கப்பட்டிருந்தவர்கள் தமிழ் வாத்திய மேள தாளங்களுடன் வரவேற்கப்பட்டு மெயின் ஹோலிற்கு அழைத்துச் செல்லப்பட்டனர். பிரதான மண்டப மேடையும் தமிழ் முறைப்படி தென்னங் கீற்றினால் வேயப்பட்டு அலங்கரிக்கப் பட்டிருந்தது.

வரிசையாக கதிரைகள் அடுக்கப்பட்டு மேடையின் கீழே பெரிய பித்தளைக் குத்து விளக்கு வைக்கப்பட்டு அதனைச் சுற்றி அழகிய மாக் கோலம் போடப்பட்டிருந்தது. குத்து விளக்கின் மீது அலங்கரிக்கப்பட்டிருந்த மல்லிகைப் பூச்சரத்தின் இதமான வாசனை மூக்கைத் துளைத்தது.

நுண் கலைத் துறையினரின் வாத்திய இசையுடன் வரவேற்கப் பட்டு அழைத்து வரப்பட்ட பிரதமவிருந்தினர்கள் அனைவரும் அரங்கிற்குள் நுழைந்ததைத் தொடர்ந்து பார்வையாளர்களாக வந்திருந்த இலக்கிய அபிமானிகளும், கலைஞர்களும், விரிவுரையாளர்களும், மாணவ, மாணவிகளும் உள்ளே சென்றனர். குத்து விளக்கேற்றலுடன் சம்பிரதாய பூர்வமான உரைகளைத் தொடர்ந்து நாடகப் போட்டி ஆரம்பமாகியது.

முதல் நாடகமாக விஞ்ஞான பீடத்தினரினதும், இரண்டாவதாக கலைப் பிரிவு மாணவர்களினதும், இறுதியாக வணிக முகாமைத்துவ பீடத்தினரினதும் நாடகங்கள் மேடையேறின

மூன்று நாடகங்களுமே வித்தியாசமான மூன்று கருப்பொருளை கொண்டமைந்திருந்தது. நவீன நாடக உத்தியுடன் மூன்று நாடகங்களும் சிறப்பாகவே அமைந்திருந்தன. தவறான பாலியல் தொடர்புகள் மூலமும், இளைஞரிடையே பரவும் போதைவஸ்து பாவனை மூலமும் ஏற்படும் "எயிட்ஸ்" நோய் அபாயம் குறித்து விஞ்ஞான பீட மாணவர்களின் நாடகம் கூற, நாட்டின் இன்றைய சமகால பிரச்சனையான யுத்தம் பற்றியும், யாழ் நகரில் இருந்து வெளியேறிய நான்கு இலட்சத்திற்கு மேற்பட்ட மக்களின் துன்ப துயரங்களையும் வெளிக்காட்டுவதாக கலை பிரிவினரின் நாடகம் அமைந்திருந்தது.

வணிக முகாமைத்துவ பீட மாணவர்கள் தமிழ் மக்களின் கலாச்சார சீரழிவு பற்றிய கருவை மையமாக வைத்து நாடகம் செய்திருந்தனர். வெளிநாட்டு பயணத்திற்காக வடகிழக்கு மண்ணில் இருந்து கொழும்புக்கு வரும் பெண்களின் நிலை பற்றியும், புலம் பெயர் வாழ்வின் அவலங்கள் பற்றியும் அந்நாடகம் அமைந்திருந்தது.

மூன்று நாடகங்களும் வெகு சிறப்பாக அமைந்திருந்தாலும் நடுவர்களின் தீர்ப்பின் படி கலைப்பிரிவு மாணவர்களின் நாடகம் முதலாவதாக தெரிவு செய்யப்பட்டது. கூத்து வடிவத்தையும் சேர்த்து நவீன பாணியில் மறைமுகமான அரசியல் விமர்சனத்தையும் முன்வைத்தது மட்டுமல்ல சில காட்சியமைப்புகளில் அந்த இடம்பெயர்வின் சோகம்... அனைவர் கண்களையும் கலங்கச் செய்வதாக அமைந்திருந்தது. சிறந்து நாடக நடிகர், நடிகை, ஒலி, ஒளி அமைப்பு நெறியாள்கை, காட்சித்தொகுப்பு, பிரதி ஆக்கம் என பல பரிசில்களுக்கு தேர்வுகள் நடைபெற்றன.

சிறந்த நடிகர், நடிகையாக கலைப்பிரிவினரின் நாடகத்தின் ரதனும், நிவேதாவும் தெரிவு செய்யப்பட்டனர். அத்துடன் சிறந்த நெறியாள்கையும் காட்சி தொகுப்புக்கும் அந்த நாடகத்தின் இயக்குனர் விரிவுரையாளர் சுகுமாருக்கு வழங்கப்பட்டது. சிறந்த ஒலி, ஒளி அமைப்புக்கான பரிசு விஞ்ஞான பீட மாணவர்களின் நாடகத்திற்கும், சிறந்த பிரதி ஆக்கம் வணிக முகாமைத்துவ பீட மாணவர்களின் நாடகத்திற்கும் கிடைத்தது.

பிரதம விருந்தினராக கலந்து கொண்டவரும் தனது உரையில் கலைப் பிரிவினரின் நாடகத்தை குறிப்பிட்டு ரதனினதும், நிவேதாவினதும் நடிப்பை அவர்கள் குறிப்பிட்ட பாத்திரமாகவே மாறிவிட்டதை பற்றி பாராட்டி பேசினார்.

நாடகப் போட்டிகள் முடிவடைந்து வெளியே வந்த ரதனையும், நிவேதாவையும் சக மாணவர்களும், மாணவிகளும் கரம் குலுக்கி பாராட்டினர்.

காலம் உருண்டு கொண்டிருந்தது.

யாழ் நகரில் மீண்டும் யுத்தம் ஆரம்பமாகி யாழ்ப்பாணத்தை பிடிக்க வேண்டும் என்ற முனைப்பில் இருந்த இராணுவம்.... மக்கள் இல்லாத பிரதேசங்களை கைப்பற்றி கொண்டதை தொடர்ந்து.... புதிய புதிய பெயர்களில் தமது இராணுவ நடவடிக்கைகளை முடுக்கிவிட்டது.

**மேவும்.. .. ..**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அழியும் என் எதிர்வாழ்வு

உன்னை
நினைவு கொள்தல்- என்பது
அடிக்கடி சாத்தியமாகின்றது

இப்போதும் கூட
* "ஜீவநதியின்" பக்கங்களில்
** "எதிர்நாவல்" பற்றிய
வாசிப்பின் போது
இடையில் அகப்பட்டுக்
கொள்கின்றாய் - நீ

சஞ்சிகைகளின் தாள்களின்
வெண்மையும்
எழுத்துக்களின்
கருமையும்
எதிர்நாவல் எனும் - வார்த்தையும்

உடைத்தெறியப்பட்ட
குடும்ப உடன்பாட்டின் போது
பிறந்து
ஊடாடும் - எம்
உறவுச் சிக்கலை

தாள்களின் நிறமாயும்
எழுத்துக்களின் இருளாயும்
வார்த்தைகளின் அர்த்தமாயும்
உனை
நினைவு கொள்தலைச்
சாத்தியமாக்கின்றன...


வாசிப்பைத் தொடர்வதா?
இன்றேல்
நினைவுகளில் பயணிப்பதா?
என்றோர்
திரிசங்கு நிலையில்
என் வாழ்வு
உயர்ந்தும்... வீழ்ந்தும்..
அமிழ்ந்தும்... அழிகின்றது.. .. ..

இறுதியில்
எழுகின்றதோர் கேள்வி.. .. ..

எண்ணமற்ற
அன்றேல்
வாசிப்பற்ற
உலகில் - ஓர்
இடம்
எனக்கெனக் கிடையாதோ?

* ஜீவநதி – சஞ்சிகை
** இதழ் 76இல் பக்கம் 14இல் வெளியான கட்டுரை "எதிர்நாவல்"

- மாயன் -



# வேண்டும்

காசு வந்து வீழவேண்டும் - அதனைக்
கட்டிக் கட்டி வைக்க வேண்டும்
கூசி வரும் வறியவர்க்கு - மடிக்குள்
கொட்டிக் கொட்டி விட வேண்டும் !

வந்து காலில் விழுபவர்கள் - என்னை
வள்ளல் என்று சொல்ல வெண்டும் !
நொந்தவர்கள் வாங்கி வாங்கி - என்னை
நூறு தரம் சுற்ற வேண்டும்.

உள்ள 'கொடாக்கண்டர்' எல்லாம் - எரிவால்
உடலை நனைக்க வேண்டும் !
மெல்ல ஆய்வு செய்த வண்ணம் - நிமிர்ந்து
மேல் முகட்டைப் பார்க்க வெண்டும் !

தூக்கம் பறந்திட வேண்டும் - 'கனவை'ச்
சொல்லி விடவும் கூச வேண்டும் !
ஊக்கம் எடுத்திட வேண்டும் - வெளியே
உழைக்கவும் போக வேண்டும் !

தாமரைத்தீவான்
(ஈச்சந்தீவு)

## எழுதி அனுப்புகிறேன் ஒரு கவிதை

மண்ணில் வீழ்ந்த விதைகள் முளைக்காமல்
விடாது!
கசக்கி எறிந்த பூக்கள் வீரிய விருட்சங்களாய்
வளராமல் விடாது!
செந்சோலையை இழந்த எம்மண்
உரிமை பெறும் வரை எம்மை உறங்கவிடாது!
எழுதிய கவிதை பேனா மையில் அல்ல
என் இரத்தத் துளிகளில் .....
அனுப்புகிறேன் கண்ணீர் துளிகளுடன்
கல்லாய் போன இறைவனுக்கு .....

... நிலா - பொன்நிலா ...
திருகோணமலை

# விறைப்பான இதயம்

உன் முகத்தில்
சிந்தனைச் சில்லறைகளும்
சோகச் சொந்தங்களும்
தொடர் வலம் வருகின்றன!



சோகங்களை சொல் கொண்டு
சொல்ல முடியாவிட்டாலும்
வில் கொண்டு எய்துவிடு
சோக அம்புகளாய்!

விறைப்பான இதயமதை
மனத்திரை மூடி மறைத்தாலும் - உன்
விழித்திரையில் விடியல்
தெரியவில்லை!

சந்தீசு, பள்ளத்தோட்டம்

# கண்கள்



சித்திரம் பேசும் கண்கள் கண்டால்
மந்திரம் வீசும் பெண் என்றே
தோன்றுதே. . .
வெட்டிடும் விழி பார்வையில்
விழுந்தால்
செத்திடும் நிலை என்றாகுதே . . .

சீ.வீ.லக்ஸ்

# ஈழமுரசு

## உறவுப்பாலம் உறுதி பெற

ஒற்றுமைக்கான உறவுப்பாலம்
சுற்றறிக்கை மூலம் தொடர்வதில்லை
பற்றுறுதியோடு அன்புப் பிணைப்பால்
பற்றிப் படர்வதுவே அது!

அற்புதமாகத் தோன்றும் புரிந்தணர்வு
ஆழமாக தொட்டு வளர்வதுவே
கற்றுணர்ந்தோர் கட்டும்
வேற்றுடையற்ற உறவுப்பாலம்!

இனமத வேறு பாகு பாடகற்றி
எல்லோரும் மனித இனமென்ற
இறையுணர்வு எழுச்சி பெற, புனித
மனத்தோடு புடம் போடுவதுதான்
அனர்த்தம் எது, எப்படி வந்தாலும்
அசையாதிருக்கும் உறவுப்பாலம்!

ஒற்றுமைக்கான உறவுப்பாலத்தை
சுற்றமற்ற அரசியல் வாதிகளால்
முற்று முழுதாக ஒரு போதும் இங்கு
அற்புதமாகக் கட்டி நிலைத்திருக்க
அடித்தளம் இட முடியாது ஏனெனில்
வேற்றுமையை வளர்த்து இன
ஒற்றுமையை குலைத்து அரசியலில்
நிற்பதும் உழைப்பதுமே
அவர்கள் செயற்பாடு!

கவிக்குயிலன்
சேனையூரான்

# வாழ்க்கை சிறக்க

..மலைநேயன்..



உலக நோக்கால் தாக்கம் தமக்கே - என
தடுமாறும் பதவி மோகம் கொண்ட
தலைமைகளால் தினம் வெறுப்பேறி - பலர்
வாடும் நிலை கொண்ட சமூக
நிலை கண்டும் துயர் தொடர்வதோ? மக்கள்
இனிமேலும் வழி ஏது நாம்வாழ
போர் முனை கண்ட நாளது மடிந்தும்
பயனேது தமிழ்பேசும் மறவர் குலம்

விழி வந்த பழங்குடியோர்கள் - கதி
கண்டும் திறவாதோ? பதில் ஏதும்
உரம் பெற்ற திடம் மிக்க தமிழர்கள்
தரம் - பெற்று வாழ தடை விதிக்கும் - இனவாதம்
நிலை கண்டும் தானறியா மதிப்பு மிக்க
சனாதிபதி பதிலேதும்
கிடையாதோ? ஆட்சி பீட
நாயகனே. . .

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வேட்பாளர்களுக்குரிய தகுதிகள்

ஓர் பார்வை

"நிலாந்தன்"

யாழ்ப்பாணத்தில் வசிக்கும் ஒரு மருத்துவ நிபுணர் அண்மையில் தனிப்பட்ட உரையாடல் ஒன்றின் போது சொன்னார். "கடந்த ஆறு ஆண்டுகால அரசியலில் எமது மிதவாதிகளிடம் நிறைய எதிர்பார்த்தோம். தமிழ் நாட்டு அரசியல்வாதிகளைப் போலன்றி இவர்கள் வித்தியாசமான புதிய போக்கு ஒன்றைக் காட்டுவார்கள் என்றும் எதிர்பார்த்தோம். ஆனால் இவர்களும் தமிழ் நாட்டு அரசியல்வாதிகளைப் போலவே ஆகிவிடுவார்கள் போலிருக்கிறதே" என்று.

அவர் ஏன் அப்படிச் சொன்னார்? சுமார் 38 ஆண்டுகால ஆயுதப் போராட்டத்தின் பின்னணியில் வைத்தே அவர் அப்படிச் சொல்லியிருந்திருக்கக் கூடும். ஏனெனில் முழு உலகிற்கும் ஒரு புதிய அனுபவமாகக் கிடைத்த ஆயுதப் போராட்டம் அது. அது தோற்கடிக்கப்பட்ட பின் அந்த வெற்றிடத்தை நிரப்பும் மிதவாதிகளைக் குறித்து தமிழ் மக்களிடம் அதிகரித்த எதிர்பார்ப்புக்கள் இருப்பது இயல்பானதே. ஆயுதப் போராட்டத்தில் இருந்து கற்ற படிப்பினைகளின் அடிப்படையில் கடந்த ஆறு ஆண்டுகால ஈழத்தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது இப்பிராந்தியத்தில் உள்ள ஏனைய மிதவாதப் போக்குகளில் இருந்து ஏதோ ஒரு விதத்தில் வேறுபட்டதாக இருக்க வேண்டும் என்ற ஓர் எதிர்பார்ப்பு இயல்பானதே. அந்த எதிர்பார்ப்பை தமிழ் மிதவாதிகள் நிறைவேற்றியிருக்கிறார்களா?

ஆயுத மோதல்கள் முடிவிற்கு வந்த பின் ஐந்து தேர்தல்கள் நடந்துவிட்டன. இப்பொழுது ஆறாவது தேர்தல் நடக்கவிருக்கிறது. இவ் ஆறு ஆண்டுகால பகுதிக்குள் தமிழ் மிதவாதிகள் தமது வாக்காளர்களின் எதிர்பார்ப்புக்களை எந்தளவு தூரம் பூர்த்தி செய்திருக்கிறார்கள்? வரவிருக்கும் தேர்தலுக்கு வேட்பாளர்களைத் தெரிவு செய்யும் போது கடந்த ஆறு ஆண்டு காலத்தைப் பற்றிய மதிப்பீடு எதுவும் அவர்களிடம் இருந்ததா?

தமிழ் வேட்பாள்ர்களை பிரதானமாக இரண்டு பெரும் பிரிவுகளாக்கலாம். ஒருபிரிவு ஏற்கனவே நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள். மற்றொரு பிரிவு புதிய முகங்கள். இவ்விரு பிரிவினரும் எந்த அடிப்படையில் தெரிவு செய்யப்பட்டார்கள்?

அவர்களைத் தெரிவு செய்த கட்சிகள் அதற்கான விளக்கங்கள் எதையும் வெளிப்படையாகக் கூறவில்லை. எனினும் தமிழ் வேட்பாளர் தெரிவைப் பொறுத்தவரை பிரதானமாக பின்வரும் தகுதிகளில் ஒன்றோ பலவோ கவனத்தில் கொள்ளப்பட்டிருப்பதாக அனுமானிக்க இடமுண்டு.

- கொள்கை அடிப்படையிலானது.
- வெற்றி பெறுவதற்கான வாய்ப்புக்களின் அடிப்படையிலானது.
- கல்வித் தகைமைகள்.
- பணபலம்.
- பால் அடிப்படையிலானது
- சமூகப் பிரிவு அல்லது சாதி அடிப்படையிலானது.

இவற்றைச் சற்று விரிவாகப் பார்க்கலாம்.

முதலாவதாக கொள்கை. பிரதானமாக மூன்று கொள்கைகள் தமிழ் தேர்தல் அரங்கில் காணப்படுகின்றன. ஒன்று தமிழ்த்தேசியக் கொள்கை, இரண்டு முழு இலங்கைக்குமான தேசியக் கொள்கை. மூன்று இடதுசாரிகள். இதில் இடதுசாரிகள் தீர்மானகரமான வாக்குப் பலத்தைக் கொண்டவர்கள் அல்ல. எனவே இரண்டு பிரதான கொள்கைகளையும் பார்க்கலாம்.

தமிழ்த்தேசியக் கொள்கையைப் பொறுத்தவரை இரண்டு பெரிய கட்சிகளும் தேசியம் என்ற வார்த்தையை கட்சிப் பெயர்களிலேயே வைத்திருக்கின்றன. ஆனால் அதை எத்தனை பேர் விளங்கிப் பிரயோகிக்கிறார்கள்? தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு தமிழ் அரசியல்வாதிகளில் எத்தனை பேர் பதில் கூறத்தக்க ஆளுமையோடு காணப்படுகிறார்கள்?

மேற்படி கேள்விக்கு சரியான பதிலைக் கூறினால் தான் இவர்கள் கருதும் இனவிடுதலைக்குள் சமூக விடுதலையும் அடங்குமா இல்லையா என்ற கேள்விக்கும் விடைகாண முடியும். சாதி அசமத்துவங்கள் குறித்தும், பால் அசமத்துவங்கள் குறித்தும் பிரதேச அசமத்துவங்கள் குறித்தும் முஸ்லிம்களுக்கான இறுதித் தீர்வு குறித்தும் பொருத்தமான ஓர் உரையாடலைத் தொடங்குவது என்றால் முதலில் தேசியம் என்றால் என்ன என்ற கேள்விக்கு விடை கிடைக்க வேண்டும். தமிழ் வேட்பாளர்கள் விடை கூறுவார்களா?

இம்முறை தேர்தல் களத்தில் தமிழ்த் தேசியத்துக்கு யார் அதிகம் உரித்துடையவர் என்ற வாதப் பிரதிவாதம் அதிகம் சூடுபிடித்திருப்பதைக் காணலாம். கூட்டமைப்பானது தன்னைத் தேசிய நீக்கம் செய்துவிட்டது என்று கூறும் அதன் எதிரிகள் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியே இது விடயத்தில் அதிகம் தேசியத்தன்மைமிக்க ஒரு கட்சி என்று வாதிடுகிறார்கள்.

தமிழ்த்தேசியக் கோசங்களை யாரும் பாவிக்கலாம் என்ற ஒரு நிலைமை தற்பொழுது காணப்படுகின்றது. அதற்குரிய வாழ்க்கை முறை உண்டோ இல்லையோ எந்தவொரு அரசியல்வாதியும் தனது வாக்குவேட்டை நோக்கங்களுக்காக தமிழ்த்தேசியக் கோசங்களை பயன்படுத்த முடியும் என்று நம்புவதாகத் தெரிகிறது. அண்மை நாட்களில் யாழ்ப்பாணத்தில் உள்ள யு.என்.பி பிரதானிகள் தமிழ்த்தேசிய கோசங்களை உச்சரித்து வருவதைக் காண முடிகிறது. இது கடந்த ஆறு ஆண்டுகளில் தங்களைத் தமிழ்த் தேசியவாதிகளாகக் காட்டிக்கொண்ட தலைவர்கள் பெற்ற தோல்விகளின் விளைவாக தோன்றிய ஒரு போக்குத்தான். அதாவது மிதவாதத் தலைவர்கள் பலருக்கு தமிழ்த்தேசியம் ஒரு வாழ்க்கை முறையாக இல்லை என்று பொருள்.

அதே சமயம் தமிழ்த்தேசியத்துக்கு எதிர்நிலையை எடுத்து முழு இலங்கைக்குமான தேசியத்தை முன்வைத்த தமிழ்க் கட்சிகள் கடந்த ஆறு ஆண்டுகளாகச் சாதித்தவை எவை? கடந்த ஆறு ஆண்டுகளில் அக்கட்சிகளின் வாக்கு வங்கி படிப்படியாக மெலிந்து போகக் காணலாம். கடந்த வடமாகாணசைபத் தேர்தல் முடிவுகள் இதை நிரூபித்திருக்கின்றன. அபிவிருத்தி மைய அரசியலா? அல்லது உரிமைமைய அரசியலா? என்ற கேள்வி எழும்போது தமிழ் மக்கள் உரிமையை அரசியலுக்கே வாக்களித்து வந்திருக்கிறார்கள். வேலை வாய்ப்புக்களுக்கும் ஏனைய தேவைகளுக்கும் அவர்கள் அரசாங்கத்திற்கு விசுவாசமான கட்சிகளைத் தேடிப் போவார்கள். ஆனால் வாக்களிப்பு என்று வரும் போது தமிழ்த்தேசியக் கட்சிகளுக்கே பெருமளவில் வாக்களிக்கிறார்கள். எனவே இங்கு கொள்கைப் போட்டி எனப்படுவது யார் தமிழ்தேசியக் கொள்கைக்கு அதிகம் உரித்துடையவர் என்ற போட்டிதான். இது முதலாவது.

இரண்டாவது வெற்றி பெறுவதற்கான அதிகரித்த வாய்ப்புக்களைக் கொண்டிருப்பது. ஏற்கனவே பிரபல்யம் அடைந்திருப்பவரைப் போட்டியிடவைப்பதன் மூலம் வெற்றிக்கான வாய்ப்புக்களை அதிகப்படுத்தலாம். முன்பு நாடாளுமன்றத்தில் உறுப்பினர்களாக இருந்தவர்கள் மறுபடியும் போட்டியிடுவதற்கான அடிப்படைகளில் இதுவும் ஒன்று. இதுதவிர வேறு துறைகளில் பிரபல்யம் அடைந்தவர்களும் தமது பிரபல்யத்தை அரசியலில் முதலீடு செய்வதுண்டு.

எனினும் இம்முறை தேர்தல் களத்தில் எல்லா வேட்பாளர்களும் வெற்றி பெறுவதற்காகத்தான் இறக்கப்பட்டிருக்கிறார்கள் என்று எடுத்துக்கொள்ள முடியாது. குறிப்பாகக் கூட்டமைப்பைப் பொறுத்தவரை தோற்பதற்காகவும் சில வேட்பாளர்கள் களமிறக்கப் பட்டிருப்பதாகத் தெரிகிறது. குறிப்பிட்ட தொகுதியில் ஒரு முதன்மை வேட்பாளரை வெற்றிபெற வைப்பதற்காக அவரைவிட பிரகாசம் குறைந்த சிலரும் களமிறக்கப் பட்டிருக்கிறார்கள். எனவே சில சமயங்களில் தோல்வியுறுவதற்கான வாய்ப்பும் ஒரு தகுதியாக எடுத்துக் கொள்ளப்படுகிறதோ? இது இரண்டாவது.

மூன்றாவது தகுதி – படிப்பு. கல்வித் தகைமைகளின் மூலம் ஒரு வேட்பாளர் தனக்குரிய சமூக அங்கீகாரத்தைப் பெற்றுக் கொள்ளலாம் என்று நம்பப்படுகிறது. ஆயுதப் போராட்டத்துக்கு முன்பு காணப்பட்ட இந்த நம்பிக்கைகள் 2009 இற்குப் பின் மறுபடியும் மேலெழத் தொடங்கிவிட்டன. குறிப்பாக சட்டத்துறை வல்லுனர்கள் நன்றாக அரசியல் செய்வார்கள் என்றும் நம்பிக்கையூட்டப்படுகிறது.

"அப்புக்காத்து" அரசியல் பற்றிய இக்கருதுகோளானது 70 களிலேயே பிழையானது என்று நிரூபிக்கப்பட்டதொன்று. ஆனால் ஆயுத மோதல்கள் முடிவுக்கு வந்த பின் சமூகம் பல விடயங்களிலும் பின்நோக்கிச் சறுக்கியபோது மேற்படி அப்புக்காத்து அரசியலும் மறுபடியும் அரங்கின் முன்னணிக்கு வரத் தொடங்கிவிட்டது. கிழக்கு பல்லைக்கழகத்தில் உள்ள எனது நண்பர் ஒருவர் சொல்வார். "சட்டத்துறை ஒழுக்கம் மட்டும் ஒருவரை அரசியல்வாதியாக்கிவிடாது. பதிலாக அரசியல் எனப்படுவது பல்வேறு அறிவியல் துறைககளினதும் கூட்டு ஒழுக்கமாகும். எமது சட்டத்துறை வல்லுனர்கள் அரசியலை மிகவும் குறுக்கி விளங்கி வைத்திருக்கிறார்கள் என்று." கடந்த ஆறு ஆண்டுகளில் இது தொடர்பில் ஒரு நடைமுறை உதாரணத்தைக் காட்ட முடியும். வடமாகாண முதலமைச்சர் சட்டத்துறை ஊடாகவே அரசியலுக்கு வந்தார். ஆனால் அவர் சட்டத்தரணியாகவோ அல்லது நீதிபதியாகவோ இருந்த காலங்களில் பேசியிராத அளவிற்கு தற்பொழுது மிகத் தீவிரமாகப் பேசிவருகிறார். அவருடைய சட்டத்துறை ஒழுக்கத்திற்கூடாக அவர் கற்றறிந்தவற்றை விடவும் ஓய்வு பெற்ற பின் ஓர் அரசியல்வாதியாக பட்டறிவுக்கூடாக அவர் பெற்றுக் கொண்டவைகளே அதிகம் என்று எடுத்துக்கொள்ளலாமா?

பண பலம். அரசியலில் ஈடுபடுவது என்பது ஏறக்குறைய ஒரு முதலீடுதான். ஒரு வேட்பாளர் பிரச்சாரப் பணிகளுக்காக இலட்சக்கணக்கில் செலவழிக்கவேண்டியிருக்கும். ஆளணிகளுக்கும், போக்குவரத்திற்கும் கூட்டங்களை ஒழுங்குபடுத்துவதற்கும், விளம்பரங்கள் போன்ற எல்லாவற்றுக்கும் காசை அள்ளி இறைக்கவேண்டியிருக்கும்.

தமிழ் புலம்பெயர்ந்த சமூகத்தின் பங்களிப்பு இந்த இடத்தில் பெரிதும் கவனிப்புக்குரியது. தமிழ் வேட்பாளர்கள் புலம்பெயர்ந்த தமிழர்களிடம் கடன்படும் இடம் இது. புலம்பெயர்ந்த தமிழர்கள் தேர்தல் களத்தின் மீது செல்வாக்குச் செலுத்தக் கூடிய வாய்ப்புக்களை இது ஏற்படுத்துகிறது. இது நான்காவது .

ஐந்தாவது தகுதி - பால் அடிப்படையிலான தகுதி. தமிழ் வேட்பாளர்கள் தெரிவில் என்றைக்குமே பால்சமத்துவம் பேணப்பட்டதில்லை. இம்முறையும் அப்படித்தான். எண்பதினாயிரத்துக்கும் அதிகமான விதவைகளைக் கொண்டிருக்கும் ஒரு சமூகத்தில் ஒரு பெண் வேட்பாளரைத் தெரிவு செய்யும் போது எது அடிப்படைத் தகுதியாக இருக்க வேண்டும்.? அவருடைய பால் நிலைப்பட்ட விழிப்புத்தான். அதாவது பெண் வேட்பாளர் முதலாவதாகவும் முக்கியமானதாகவும் பெண்ணியச் செயற்பாட்டாளராக இருக்க வேண்டும். தற்போதுள்ள வேட்பாளர்களில் எத்தனைபேர் அத்தனை தகுதிகளை உடையவர்கள்? பெண் வேட்பாளர்கள் வேண்டும் என்பதற்காக தெரிவு செய்யப்பட்ட பலரும் வெற்றிபெறுவதற்கான வாய்ப்புக்களை அதிகம் கொண்டிராதவர்கள் என்பதை இங்கு சுட்டிக்காட்ட வேண்டும். ஒப்பீட்டளவில் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியிடம்தான் இது தொடர்பில் ஓரளவிற்கேனும் செயற்பாட்டு ஆளுமைகளைக் காண முடிகிறது. ஆனால் அதுவும் போதாது.

ஆறாவது தகுதி - சாதி அல்லது சமூக அடிப்படையிலான தகுதி. முதலில் ஒன்றைச் சொல்ல வேண்டும் இது ஒரு வீழ்ச்சி. ஒரு சமூகத்தின் வாக்குகளைப் பெறுவதற்கு குறிப்பிட்ட சமூகத்தை பிரதிநிதித்துவம் செய்யும் ஒருவரையே நியமிக்க வேண்டியிருப்பது என்பது தமிழ்த்தேசியத்தின் கோட்பாட்டு அடிப்படைகளின் மீதும் அதன் உள்ளடக்க போதாமைகளின் மீதும் கேள்விகளை எழுப்புகின்றது.

38 ஆண்டுகால ஆயுதப் போராட்டமானது சாதியை முழுமையாகக் கடக்க உதவவில்லையா என்றும் கேட்கத் தோன்றுகின்றது. இம்முறை தமிழ்த்தேசியக் கட்சிகள் தமது வேட்பாளர்களைத் தெரிந்தபோது சில தெரிவுகளில் சாதிக்கும் ஒரு பங்கு இருந்தாகக் கூறப்படுகின்றது. அதாவது கொள்கையை முன்வைத்துவாக்குக் கேட்க முடியாத ஓரிடத்தில் சாதி அடையாளத்தை முன்வைத்து வாக்குக் கேட்கவேண்டிய ஒரு வங்குரோத்து நிலை.

மேற்கண்ட அனைத்துத் தகுதிகளையும் தொகுத்துப் பார்த்தால் ஒன்று தெளிவாகத் தெரியவரும். 2009 மே இற்குப் பின்னரான தமிழ் மிதவாத அரசியல் எனப்படுவது இறந்த காலத்தில் இருந்து குறிப்பாக ஆயுதப் போராட்டத்தின் வெற்றி தோல்விகளில் இருந்தும் கடந்த ஆறாண்டுகால தேக்கத்திலிருந்தும் போதியளவு படிப்பினைகளைப் பெறவில்லை என்பதே. ஆயுதப் போராட்டத்தை ஓர் அளவுகோலாக வைத்துக்கொண்டு மிதவாத அரசியலை அளக்க முடியாது என்பதை இக்கட்டுரை ஏற்றுக்கொள்கிறது. ஆனால் ஆயுதப் போராட்டத்தில் இருந்து எதைக் கற்கத் தவறினாலும் ஒரு விடயத்தை மிதவாதிகள் கற்றேயாகவேண்டும். அது என்னவெனில் தமது அரசியல் இலக்குகளுக்காக எத்தகைய உச்சமான அர்ப்பணிப்புக்களுக்கும் தயாராக இருக்க வேண்டும் என்பதே. ஓர் அரசியல் தலைமை மென்சக்தியா? அல்லது வன்சக்தியா என்பதல்ல இங்கு பிரச்சினை. அது கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைக்கிறதா அல்லது யதார்த்தத்தை நோக்கி கனவுகளை வளைக்கிறதா என்பதே இங்கு பிரச்சினை. மென் சக்தியோ அல்லது வன்சக்தியோ எதுவாயினும் உன்னதமான தலைமைகள் கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பவைதான். கனவுகளை நோக்கி யதார்த்தத்தை வளைப்பதற்காக அவை எத்தகைய அர்ப்பணிப்புக்களுக்கு தயாராக இருக்கின்றன என்பதே இங்கு அடிப்படைத் தகுதியாகும். தமிழ் வேட்பாளர்களில் எத்தனை பேரிடம் அந்தத் தகுதி இருக்கிறது?



- www.globalnewstamil.net -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்த் தேசிய சக்திகளுக்கு ஒரு அரசியல் தளம் தேவை

- -முத்துக்குமார்- -
- www.ithunamthesam.com -

பாராளுமன்றத் தேர்தல் களம் தமிழர் தாயகத்திலும் கொஞ்சம் கொஞ்சமாக சூடு பிடிக்கத் தொடங்கிவிட்டது. பல்வேறு அரசியற் கட்சிகள் சுயேட்சைக் குழுக்கள் போட்டியிட்டாலும் தமிழ்த் தேசியமக்கள் முன்னணிக்கும் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பிற்கும் இடையே தான் போட்டி இடம் பெறுகின்றது. முன்னர் எப்போதையும் விட முகப் புத்தகம், 'ருவிற்றர் உட்பட பல வலைத்தளங்களும் களத்தில் இறங்கியுள்ளன. தாயகத்திலும், புலத்திலும், தமிழகத்திலும் உள்ள தமிழ்த் தேசிய சக்திகள் இந்தத்தடவை தமிழ்த் தேசிய மக்கள் முன்னணிக்கு ஆதரவாக உள்ளனர். புலம்பெயர் நாடுகளில் "மாற்றத்தின் குரல்" என்ற அமைப்பு உருவாக்கப்பட்டு பிரச்சாரம் மேற்கொள்ளப்படுகின்றது. அவர்கள் தாயக மக்களுடன் தொலைபேசிமூலம் நேரடியாகத் தொடர்புகொண்டு தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியை ஏன் ஆதரிக்க வேண்டும் என்பதற்கான காரணங்களைக் கூறி வருகின்றனர். ஒருவர் ஒரு நாளைக்கு குறைந்தது 40 பேருடன் தொடர்புகொள்வதாக செய்திகள் வருகின்றன. ஆயிரக்கணக்கானவர்கள் இவ்வாறான முயற்சிகளில் ஈடுபடுகின்றனர்.

இவைதவிர முகப் புத்தகம், 'ருவிற்றர் போன்ற இணையத் தளங்களையும் அவர்கள் பயன்படுத்துகின்றனர். வலைத்தளங்களில் நாங்கள் புலவீனமாக இருக்கின்றோம் என்பதை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் பகிரங்கமாக ஏற்றிருக்கின்றார். தாயகத்தில் மாற்றத்திற்கான அலை கொஞ்சம் கொஞ்சமாகத் தற்போது சூடுபிடிக்கத் தொடங்கியுள்ளது. யாழ் பல்கலைக்கழக மாணவர்கள், கொழும்பு பல்கலைக்கழக சட்டபீட மாணவர்கள் இதில் அதிக அக்கறை காட்டி வருகின்றனர். கலைக்குழு ஒன்றும் களத்தில் இறங்கி இருக்கின்றது.

இந்தத் தேர்தலில் ஒரு மாற்றம் வேண்டும் என முன்னேறிய பிரிவினர் சிந்திப்பதற்கு பல காரணங்கள் உண்டு. அவற்றில் முதலாவது தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு தமிழ்த் தேசிய அரசியலை 40 களிற்கு இழுத்துச் செல்கின்றது. அதனை எப்படியாவது தடுக்க வேண்டும் என்பதாகும். ஒற்றையாட்சிக்குள் தீர்வை நாடி நின்ற கால கட்டமே நாற்பதுகளாகும். போராட்டங்கள் எதுவும் இல்லாது வெறுமனவே அரச பிரதி நிதிகளுடன் கலந்துரையாடுவதுதான். அணுகுமுறையாக இருந்தது 50கள், 60களில் கூட போராட்ட இயக்கம் செயற்பட்டது. போராட்டங்களை முன்னெடுக்காவிட்டாலும் பொறுத்துக் கொள்ளலாம். இதுவரை காலமும் இரத்தம் சிந்திப் பெற்ற முதலீடுகளை அழித்து பின்னுக்கு இழுத்துச் செல்வது தான் சகிக்க முடியாததாகும். இது அப்பன் சேர்த்து வைத்த சொத்தை பிள்ளை அழிப்பதற்கு சமமானது. இன்று இல்லாவிட்டாலும் எதிர்காலத்திலாவது அரசியல் தீர்வை அடைந்து கொள்வதற்கு தமிழ்த் தேசிய அரசியலைப் பாதுகாத்துத் தக்க வைத்துக் கொள்வது அவசியமாகும். கூட்டமைப்பு, இந்தியாவின் கட்டளையின் பேரில் தமிழ்த் தேசிய அரசியல் அடையாளங்களை ஒவ்வொன்றாக அழித்து வருகின்றது.

13 ஆவது திருத்தத்தை அரசியல் தீர்வாக ஏற்றமை, வடக்கு – கிழக்குப் பிரிப்பை ஏற்றுக் கொண்டு பிரிக்கப்பட்ட மாகாண சபைகளில் போட்டியிட்டமை, தமிழ் மக்களின் அடையாளங்களை மறுத்த சிங்கக் கொடியை தமிழின அழிப்பாளரான ரணிலுடன் சேர்ந்து ஏற்றியமை, தமிழ் மக்களை அரச அதிகாரக் கட்டமைப்பிலிருந்து தூக்கிவீசிய சுதந்திர தினத்தில் கலந்து கொண்டமை, எந்தவித பேரம்பேசலும் இல்லாமல் ஜனாதிபதி தேர்தலில் மைத்திரியை ஆதரித்தமை, மைத்திரி அரசில் நிறைவேற்றுக்குழுவின் அங்கத்தவராக சேர்ந்தமை, பிரக்ஞைபூர்வ அரசியலுக்கு பதிலாக சுகபோக அரசியலை முன்னெடுக்கின்றமை, போராட்டத்துடன் எந்த வித தொடர்புமில்லாத கொழும்பு மேட்டுக் குடியைச் சேர்ந்த சுமந்திரன் போன்றவர்களை தலைமை மட்டத்திற்கு கொண்டு வந்தமை என்பவற்றின் மூலம் தமிழ்த் தேசிய அரசியலை செங்குத்தாக கீழிறக்கி வருகின்றது.

இந்த கீழிறக்கலை எப்படியாவது தடுத்து நிறுத்தவேண்டும். முன்னோக்கிச் செல்வதைப் பற்றி பின்னர் யோசிக்கலாம். செங்குத்தான கீழிறக்கலை தடுப்புக்கட்டை போட்டு தடுத்து நிறுத்துவது தான் முக்கியமானது. இந்த தடுப்புக்கட்டை தான் தமிழ்த்தேசிய மக்கள் முன்னணியாகும்.

சிங்கள அரசினது தமிழர் தாயகத்தை சிங்களமயமாக்கும் செயற்பாடும், கூட்டமைப்பின் தமிழ்த்தேசியத்தை கீழிறக்கும் செயற்பாடும் ஒன்றிணைகின்றபோது தமிழ்த்தேசிய அரசியல் அதாளபாதாளத் திற்கு செல்கின்றது. தமிழ் மக்களும் பாதாளத்திற்குள் தள்ளப்பட்ட மீள் அடிமைகளாக மாறுகின்றனர்.

இரண்டாவது தமிழ்த் தேசிய சக்திகள் செயற்படுவதற்கு ஒரு அரசியல் தளம் தேவைப்படுவதாகும். கூட்டமைப்பின் அரசியல் தளம் என்பது தமிழ்த்தேசிய சக்திகள் பயன்படுத்தக்கூடிய தளமல்ல. இதுவரை காலமும் கூட்டமைப்பை திருத்தலாம் என்று பலர் நம்பியிருந்தனர். இன்று அதுவும் முடியாது என்ற நிலைக்கு வந்து நிற்கின்றனர். தமிழ்த் தேசிய சக்திகள் மேற்கொள்கின்ற ஒவ்வொரு நகர்வுகளையும் கூட்டமைப்பின் தலைமை கவிழ்த்து கொட்டி-விடுகின்றது. ஆயுதப்போராட்டம் இல்லாத சூழலில் மக்களினது வாக்குப்பலத்தினால் தான் அரசியற்தளம் கட்டியெழுப்பப்படுகின்றது.

மூன்றாவது புலம், நிலம் தமிழகம் என்பவற்றை ஒருங்கிணைந்த வேலைத் திட்டத்தின் கீழ் கொண்டு வருவதாகும். தாயகத்தில் பிரக்ஞை பூர்வதேசியத்தளம் ஒன்று செயற்படாமல் இவற்றிற்கிடையே ஒருங்கிணைந்த வேலைத்திட்டத்தைக் கட்டியெழுப்ப முடியாது. இன்று மிகத் துரதிஸ்டமான விடயம் புலம்பெயர்சக்திகளும் தமிழக சக்திகளும் அனாதையாகிப் போனமையாகும். அவர்களது இவ்வளவு கால உழைப்பையும் கூட்டமைப்பு கவிழ்த்து கொட்டியுள்ளது.

சுருக்கமாகச் சொன்னால் தமிழ்த்தேசிய அரசியலை மீண்டும் சரியான தண்டவாளத்தில் ஏற்றவேண்டும். மாற்றம் ஒன்றின் மூலமே அதனைச் சாத்தியமாக்கப்பட முடியும்.

**இதுவரை காலமும்**
**இரத்தம் சிந்திப் பெற்ற முதலீடுகளை**
**அழித்து பின்நோக்கி**
**இழுத்துச் செல்கிறது த.தே.கூ**




# ஆரம்பமாகிறது ஆட்சி மாற்றத்தின் இறுதி அத்தியாயம்

ஆட்சிமாற்றத்தின் இரண்டாம் அத்தியாயத்தில் காலடி எடுத்து வைத்திருக்கிறது இலங்கை அரசியல்.

மகிந்தரின் "நீடித்த" சனாதிபதி ஆசை ஜனவரி 9 இல் கனவாகிப்போக, புதிதாக வந்த மைத்திரி, 19 இன் ஊடாக சனாதிபதியின் நிறைவேற்று அதிகாரங்களை "மென்சக்தி" நிலைக்கு மாற்றி விட்டார்.

முதலாம் பாகத்தில், "தமிழ் பேசும் மக்கள்" மூலம் இழந்ததை, நாடாளுமன்றத் தேர்தலில் பெற்றுவிடலாமென்று மகிந்தர் நம்பிக்கை கொண்டுள்ளார்.

உள்ளூரில் நடக்கும் கட்சிக் காய்நகர்த்தல்கள், அணிமாற்றங்கள், ஊழல் குறித்த பெரிய "ஊதல்கள்" போன்ற எல்லாவற்றின் பின்னணியிலும் பிராந்திய மேற்குலக ஏகாதிபத்திய வல்லாளர்களின் வலிமையான மாயக் கரங்கள் இருப்பதை உணரக்கூடியதாகவுள்ளது.

சீனாவிற்கும் இந்திய-மேற்குலக கூட்டிற்கு-மிடையிலான தீவு பிடிக்கும் பனிப்போர் தென்சீனக் கடலில் இருந்து விரிவடைந்து, இந்துசமுத்திரப் பிராந்தியத்தில் நாடு பிடிக்கும் மென்போராக மாறுவதைக் காணலாம்.

மக்களின் பொதுப்பார்வையில், ஊழலிற்கு எதிரான ஐக்கிய தேசிய முன்னணி அணிக்கும், மகிந்தரின் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பிற்கும் இடையில் நிகழும் அக்கப்போர் போன்றதொரு தோற்றப்பாட்டினை இது கொடுத்தாலும், நிஜத்தில் இத்தேர்தலானது வல்லாதிக்கங்களின் போட்டிக்களம் என்பதே உண்மை.

"எதிர்வரும் பாராளுமன்றத் தேர்தலில் மகிந்த ராஜபக்ச வெற்றிபெற மாட்டார். நான் மகிந்த ராஜபக்சவின் ஆதரவாளர் இல்லை. அவருக்கு வேட்பு மனு வழங்கியதில் எனக்கு உடன்பாடு இல்லை" என்று கூறியுள்ளார்.

ஆகமொத்தம் இவருடைய பிரச்சினை, கட்சியை உடைத்தார் என்கிற பழி தன் மீது விழுந்து விடக்கூடாதென்பதுதான்.

ஆனால் வறுமைக்கோட்டின் கீழ் வாழும் மக்கள் குறித்து இங்கு போட்டியிடும் எவருக்கும் அக்கறையில்லை. மலையக மக்களின் தினக்கூலி உயர்விற்காக குரல் கொடுப்போர், மாதச் சம்பளம் பெற்றுக் கொடுக்க முற்படுவதில்லை. "குந்தியிருக்கச் சொந்த நிலம்" என்கிற வாழ்வுரிமைக் கோரிக்கை என்னவாச்சு என்று தெரியவில்லை.

இந்த நிலையில், வடக்கு அரசியலில், ஒரு காலத்தில் "ஊடகச் சமராடி" என்று எம்மால் விளிக்கப்பட்ட வித்தியாதரன் அவர்கள், சுயேட்சைக் குழுவொன்றின் முதன்மை வேட்பாளராக [illegible] தேர்தல் களத்தில் குதித்துள்ளார்.

வட மாகாணசபைத் தேர்தலில் வருவார் என்று எதிர்பார்க்கப்பட்ட வித்தியாதரன், நாடாளுமன்றத் தேர்தலில் போராளிகளுடன் இறங்கியிருப்பது, வட - கிழக்கு தமிழ் அரசியலில் சிறு அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ளது போல் தெரிகிறது.

மாவட்டத்திற்கு இரண்டு போராளிகளை சேர்த்துக்கொள்ளுமாறு வித்தியாதரன் விடுத்த வேண்டுகோளை, சம்பந்தர் அவர்கள் ஏற்க மறுத்து விட்டார். அதாவது, "சர்வதேச நாடுகள் இதனை விரும்பாது" என்கிற சம்பந்தரின் பதில், ஜனநாயகப் போராளிகள் மத்தியில் பெரும் விசனத்தை ஏற்படுத்தியுள்ளது.

லண்டன் தொலைகாட்சி ஒன்றில் தமது நிலைப்பாட்டினைத் தெரிவித்த முன்னாள் புலி உறுப்பினர்கள், தமிழ் தேசியக் கூட்டமைப்பின் மீது காட்டமான விமர்சனத்தை முன் வைத்திருந்தார்கள்.

கூட்டமைப்பினைப் பலப்படுத்த எடுத்த முயற்சி தோல்வியடைந்ததால், சுயேட்சையாக களமிறங்குகின்றோம் என்று தன்னிலை விளக்கமளிக்கும் ஜனநாயகப்போராளிகள் குழுவினரின் ஒருங்கிணைப்பாளர் வித்தி, "ஏனைய மாவட்டங்களில் போட்டியிடாமல் தவிர்த்தது அங்கு வாக்குகள் சிதறிவிடாமல் இருக்க வேண்டும்" என்கிறார்.

இங்கு கூட்டமைப்பின், தமிழ் தேசிய மக்கள் [illegible] வாக்கு வங்கியில் சரிவு [illegible] ஈ.பி.டி.பியும் பொதுஜன ஐக்கிய முன்னணியும் ஓரிரு ஆசனங்களைப் பெறும் வாய்ப்புண்டு.

அதேவேளை போராளிகளை உள்ளே அனுமதித்தால் "சர்வதேசம்" முகத்தைத் திருப்பிக் கொள்ளும் என்ற சம்பந்தன் அவர்களின் அரசியல் விளக்கத்தைக் கேட்கும் போது, வட மாகாணசபைத் தேர்தலில் திருக்கோணமலை மாவட்டத்தின் முன்னாள் அரசியல் துறைப் பொறுப்பாளர் எழிலனின் (சசிதரன்) மனைவி அனந்தியை, வற்புறுத்தி அழைத்து வந்த மாவை.சேனாதிராஜா மற்றும் ஸ்ரீதரனின் செயற்பாடுகளே நினைவிற்கு வருகிறது.

"அன்று சர்வதேசம் ஏன் முகத்தைத் திருப்பிக் கொள்ளவில்லை" என்கிற கேள்வியினை அவர்களிடமே விட்டுவிடுவோம்.

தமிழீழ விடுதலைப்புலிகளை அழிப்பதற்கு, தமிழ் மக்களின் எதிர்ப்பையும் மீறி உதவி செய்ததால், அக்குரலுக்கு தேசியப்பட்டியலில் இடமும் கட்சியில் உதவித் தலைமைப் பொறுப்பும் அன்று கிடைத்தது. இப்போது காட்சிகள் மாறிவிட்டன. அவருக்கு பேரினவாதத்தின் நிழல் வெளியில்கூட இளைப்பாற இடமில்லை.

இதயச்சந்திரன்
- www.ibctamil.com -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முடி வளர சில டிப்ஸ்

அழகு குறிப்பு



1. சாதம் வடித்த நீருடன் (வடிகஞ்சி) சிகைக்காய் பவுடரைக் கலந்து தேய்து வாரம் இருமுறை குளித்துவர, முடி அடர்த்தியாக வளரும்.
2. ஆலிவ் எண்ணெய் சிறிது சூடாக்கி, தினசரி தேய்த்து 6 மணி நேரம் கழித்து குளித்துவிடவும். முடி பளபளப்பாகவும் அடர்த்தி-யாகவும் வளரும்.
3. கூந்தல் வளர்ச்சிக்கு உடல் போஷாக்கு மிகமிக முக்கியம். விதவிதமான கூந்தல் தைலங்களை உபயோகிப்பதைவிட சத்தான ஆகாரங்கள் கூந்தல் வளர்ச்சிக்கு மிகவும் ஏற்றது.
4. கறிவேப்பிலை உணவில் தாராளமாய் சேர்த்துக்கொள்-ளுங்கள் தலைமுடி செழிப்பாய் வளரும்.
5. சப்பாத்திக் கள்ளிப் பூவை சேகரித்து விழுதாய் அரைத்து தேங்காய் எண்ணெயிலிட்டுக் காய்ச்சி உபயோகித்து வர முடி அடர்த்தியாய் வளரும். முடி கொட்டுதல் நீங்கும்.
6. செம்பருத்திப்பூவை கசக்கிச் சாறு எடுத்து முடி உதிர்ந்து சொட்டை-யாகியுள்ள இடத்தில் தேய்த்துவர முடி வளர ஆரம்பிக்கும்.
7. ஒரு லிட்டர் தேங்காய் எண்ணெய்யில் மூன்று ஸ்பூன் தேயிலையை கலந்து சூடாக்கி, தைலப் பதத்தில் இறக்கிவிடவும்,. இதனை தினசரி பயன்படுத்திட முடி கருமையாய் செழித்து வளரும்.
8. வேப்பம்பூவை அடுப்பில் சிறிது வதக்கி, கசக்கி இளஞ்சூட்டுடன் உச்சந்தலையில் தேய்த்துவர முடி தாராளமாய் வளரும்.

## நீர்க்கடுப்பு ஏன் உருவாகிறது?



நீர்க்கடுப்பு ஏற்பட்டால் தாங்க முடியாத வலியை அனுபவிக்க வேண்டிவரும். அதிகமாக கோடைக்காலத்தில் தான் நீர்க்கடுப்பு ஏற்படுகிறது. உடலுக்குத் தேவையான அளவுக்குத் தண்ணீர் குடிக்காததுதான் நீர்க்கடுப்பு ஏற்படுவதற்கு முக்கிய காரணம்.

கோடைக் காலத்தில் தினமும் குறைந்தது 4 லிட்டர் தண்ணீர் கண்டிப்பாக குடிக்க வேண்டும். தாகம் அடங்கும்வரை தண்ணீர் குடிக்க வேண்டும். தண்ணீர் சரியாகக் குடிக்காவிட்டால், சிறுநீரில் தாதுகள் அதிகமாகச் சேர்ந்து படிகமாகி, சிறுநீரின் அடர்த்தி அதிகரித்துவிடும். இதனால்தான் சிறுநீர் போகும்போது எரிச்சல் ஏற்படுகிறது, கடுக்கிறது. நம் உடலில் போதுமான அளவு திரவம் இல்லையென்றால், சிறுநீர்ப் பாதையில் தொற்று ஏற்படும் வாய்ப்பு அதிகரிக்கும்.



நீண்ட நேரம் சிறுநீரை அடக்கி வைத்தால், அதன் அடர்த்தி அதிகமாகி, தொற்று ஏற்பட்டு நீர்க்கடுப்புக்கு வழிவகுக்கும். இவை தவிர மன அழுத்தம், பரபரப்பான வாழ்க்கைமுறை காரணமாகவும் இன்றைய இளைஞர்களுக்கும் இளம்பெண்களுக்கும் நீர்க்கடுப்பு அடிக்கடி தொல்லை தருவதாக ஒரு மருத்துவ ஆய்வு தெரிவிக்கிறது. வலி நிவாரணி மாத்திரைகள், ஆக்சாலிக் அமிலம் கலந்த மருந்துகள், வீரியம் மிகுந்த ஆண்ட்டிபயாடிக் மாத்திரைகள் போன்றவை நீர்க்கடுப்பை ஏற்படுத்தும்.

( திருமலை வி.என்.சந்திரகாந்தி )

# ஏழ்மையும் தாம்பத்தியமும்

குட்டிக் கதை

செக்கலுக்குள் தான் வள்ளம் கரை தட்டியது. இப்போதெல்லாம் கடல் முன்னர் போல இல்லை. உடம்பை முறித்துவிடுகின்றது. வெய்யில் அகோரம் ஒரு பக்கம். பொக்குணிக்கு தெரியும் எங்கு நல்ல வடிசாராயம் கிடைக்குமென்று. உடம்பு அலுப்புக்கு மாற்று ஏது? சாராயத்தால் தொண்டைக்குளியை நனைத்தபடியே கொட்டாபெட்டிக்குள் இருந்த மாசி கருவாட்டை எடுத்து கடித்துக்கொண்டதில் எல்லையற்ற சுகம்.

தள்ளாடிய படியே நடந்தான். கையில் ஒரு மணலை மீன். 'மண்ணை விற்றும் மணலை மீன் தின்' என்பார்களே... அதே மீன்தான். மறுகையில் போத்தல்.

இருட்டில் பூதங்களை போல நெருக்கமாக தெரியும் குடிசைகளை எல்லாம் தள்ளாடும் கால்களால் கடந்து செல்லும் போதே பொக்குணி அந்த குடிசைகளை அடையாளம் கண்டு தனக்கும் அவ்வவ் குடிசையில் இருக்கும் மனிதர்களுக்கும் இடையே இருக்க கூடிய பகைமைக்கும் நட்புக்கும் ஏற்ப புலம்பியபடி சென்றான்.

"டேய் மண்டாடி ... நான் தானடா... உனக்கு யமன்" என்று கூறியும். "தூ..." காறி உமிழ்ந்தும் செல்வான்.

ஏய் ராசாத்தி நீ நல்லவள். நான் குடிக்கேல்லை. குடிக்கவேயில்லை. கண்ணனை கேட்டதாய் 'சொல்லு'.. என்று சரணடைவான்.

அந்த வெறியிலும் அவனுடைய கால்கள் எந்த இலக்கை நோக்கி சென்றனவோ அந்த இலக்கை எய்தின. குடிசை வாசலிலிருந்து 'பிய்ந்துப்பிடுங்கி விடுவதாக படலையை நோக்கி பாய்ந்து வந்த வீமன் நாய், மோப்பசக்தி காரணமாக பொக்குணியை அடையாளம் கண்டு "ங்... ங்...." என்று அனுங்கியபடி அவனது கால்களுக்கிடையே விழுந்து புரண்டு எஜமான் விசுவாசத்தை உணர்த்தியது.

தெய்விக்கு முப்பதுக்கு மேல் இருக்காது. கட்டழகி! ஆனால் அதற்குள்ளகவே அவள் அந்த வாழ்கையின் மேடு பள்ளங்களை நன்கு அனுபவித்து சலித்துவிட்டாள். தனது தெய்வம் என்று தலையில் தூக்கி வைத்துகொண்டாடிய அவள் கணவன் மண்டாடியின் மகளோடு ஓடிவிட்டபின் அவள் எதிர்கொண்ட அவமானங்கள் எண்ணிலடங்கா. அதன் காரணமாகவே ஆண்களை மதிக்காத தன்மை ஒன்று அவளுள் முகிழ்த்து எழுந்தது.

அவளுக்கு பொக்குணி யார்? யாருமல்ல... வெறுமனே அவளுக்கு உழைத்துப்போட வேண்டியவன்... அவளை கட்டாகாலிகள் மேய்துவிடாதபடி காவலிருக்க வேண்டியவன். சில வேளைகளில் அவளது வக்கிரத்துக்கு தீனி போடவேண்டியவன். மற்றும் படி அவளுக்கு அவன் வெறும் தூசு...' தெய்வி ... என்னடி செய்யிறாய்?" குப்பிவிளக்கு குடிசைக்குள் சிணுங்கி கொண்டிருந்தது. எனவே தான் தெய்வி எங்கிருக்கிறாள் என்று வினாவால் துளாவினான் அவன். "நான் என்ன செய்யிறது... வாற வழியிலை எந்த குடிசை தடக்கி எங்க மல்லாந்து கிடக்கிறியோ எண்டு தான் கவலைப்பட்டுக் கொண்டிருக்கிறன்." தெய்வி உக்கிரம் ஏற்றினாள்.

"என்னத்தை இழந்தாலும் உன்னுடைய வாய்கொழுப்பு போகாதே!" என்று கூறியபடி கையில் வைத்திருந்த மீனை அவளிடம் நீட்டினான். தெய்வி உடுப்பு மாற்றும் மறைப்புக்கும் பின் தட்டிக்குமிடையே அந்த வடிசாராய போத்தல் மறைக்கப்பட்டது.

தெய்வி, உலையை ஏற்றினாள். பின் அரிவாளை எடுத்து குப்பி விளக்கிற்கு முன்னால் வைத்தாள். மீனின் கழுத்து பகுதியில் அரிவாளை ஏற்றினாள். விரல்களை வெட்டுண்ட பகுதிக்குள் செலுத்தி நுங்கு தோண்டுவதை போல எதையோ பிதுக்கினாள் குடலும் ஏனைய பகுதிகளும் விரலில் சிக்குண்டு வந்தன. அந்த மீனுடைய இருப்பே அவ்வளவுதான்.

பொக்குணிக்கு அவளுடைய குத்தல் பேச்சு விளங்காமல் இல்லை. வடிசாராயம் விற்கும் கயல் விழிக்கும் அவனுக்கும் தொடுப்பு இருக்க கூடும்... இல்லாமலும் இருக்க கூடும். அது பற்றி அவளுக்கு எந்த ருசுவும் கிடையாது. ஆனால் பொக்குணியின் பலவீனங்களை ஒரு புறமும் கயல் விழியின் எடுப்புச் சாய்ப்பை மறுபுறமும் அறிந்தவள் அவள். அதை வைத்து அவள் மானசீகமாக வளர்த்துக்கொண்ட கற்பனை கதைதான் அதிகம்.

பொக்குணி பொறுத்துப் பார்ப்பான். அவளுடைய வாய் அடங்கும் வாயல்ல. "போனாய்...." என்று கூறுவாள். சிறிது நேரம் கழித்து கதைத்தாய் என்று கூறுவாள். பின் "தொட்டாய்" என்றும் கதை வளருமே தவிர முற்றுப்பெறாது.

"போனால்தான் என்னடி?" என்று பொக்குணி அதட்டினான். அதற்கு மேல் தெய்வியின் கற்பனை கரைபுரண்டோடியது. "ஓ... என்று குரல் வைத்தாள். ஊரைக்கூட்டுவது போல கூப்பாடு போட்டாள்... திட்டினாள். பின் இடுப்பு சேலையை உருவி உதறிவிட்டாள். உடுப்பு மாற்றும் அறைக்குள் வந்தாள். பொக்குணி மௌனம் காத்தான். அவனுக்கு தெரியும். அவளுக்கு கோபம் எல்லை மீறும்போது அவனுக்கு தெரியாமல் வடிசாராயத்தில் ஒரு மிடறு பருகி வைப்பாள்.

"நீ போனாலென்ன கிடந்தாலென்ன நான்தான் என் புருஷன் சரியாக இருந்திருந்தால் நான் இக்கேடு கெடுவேனா?" தெய்வி குரல் வைத்தாள்.

பச்சை மிளகாய் வெங்காயம் சேர்த்து மிளகாய்ப் பொடியும் மஞ்சளும் தடவி வைத்த மணலை மீன் குழம்பு குமிழியிட்டு பொடுபொடுத்தது. உலையும் உவிந்து மணம் வீசியது. அவள் தனது ஓடிப்போய்விட்ட புருசனை இழுத்து புகழ்ந்தது பொக்குணிக்கு பெரும் கோபத்தையே உண்டு பண்ணியது.

இருந்தபடியே எட்டிகாலால் உதைந்தான் அவளை. தெய்வி விலகிக்கொண்டாள். இவளுடனான வாழ்கையே வேண்டாம் என்று அவனுக்கு தோன்றியது. போத்தலை திறந்து வடிசாராயத்தை சிறிதளவு ஊற்றிக்கொண்டான். பின் குடிசை முற்றத்தில் குடம் வைக்கும் தென்னங் கன்றுடன் சாய்ந்து நின்றபடி யோசித்தான்" போய்விடலாமா?"

அப்போதென்று மீன் குழம்பு அதிக அளவு வாசத்தை வீசியது, சினிமாக்காரிகள் போன்று அவளது மாரப்பு எடுப்பு நினைவுக்கு வந்தது. நிலவும் எழுந்து வந்தது.

"ஏய்.. தென்னங்கன்று ஒன்றும் சாய்ந்து விடாது. வந்து சாப்பிட்டு விட்டு தூங்கு" தெய்வி குரல் கொடுத்தாள். பாத்திரங்கள் கழுவுவதற்கென வைத்த குடத்து நீரை சரித்து கைகால் அலம்பிவிட்டு பொக்குணி குடிசை மத்தியில் அமர்ந்தான். அவனது இடது கால் தொடையோரம் அமர்ந்து மீனுக்கு முள் உடைத்து சோற்றை குழம்புடன் திரட்டி அவனது வலது கையில் வைத்தாள். அவர்களுக்கிடையே சண்டை மூளாத இரண்டு சந்தர்ப்பங்களில் ஒன்று அது! தெய்வியும் உணவருந்தி கையலம்பிய பின் கூறினாள்.

"இனிமேல் கயல்விழியை தேடி அலையாதே... அப்படி அலைந்தாய் புழுப்பிடித்துதான் சாவாய்' பொக்குணிக்கு கோபம் சிரசைத்தட்டியது.

உனக்கு உன்புருஷன் தான்ரி சரி." என்று ஓடிப்போன அவளது கணவனை இழுத்தான். தெய்வியின் பெண்மைக்கு அது சவாலாக அமைந்தது போலும்! எழுந்தாள்.... அரிவாளை வலது கையில் உயர்த்தி பிடித்தாள். பின் அதட்டினாள். ''ஏய் மற்ற பொம்பிளைகளுக்கு எல்லாம் அகப்பைதான் ஆயுதமாக இருக்கலாம். எனக்கு இந்த அரிவாள் தான் ஆயுதம்."


பொக்குணியும் அடங்கிப்போய்விடவில்லை. இப்போது தான் அவனுக்கு அந்த வடி சாராயம் அதிகளவு வேலை செய்தது. புலம்புவது போலவே அவளை மடக்கினான்.

"ஏய்... யாரை விரட்டுகிறாய். நான் கேட்கிறதுக்கு பதில் சொல்லு... அண்டைக்கு நான் விரால் மீன் கொண்டுவந்த தினம்... கண்ணன்ரை மனுசி ராசாத்தி உன்னை ஏன் ஏசினவள்?

தெய்வி "ங்" என்று ஓலமிட்டு அழத்தொடங்கினாள். பொக்குணி மீண்டும் கேட்டான். "கண்ணன்ரை மனுசி ஏன் உன்னை ஏசினவள்?

தெய்வி வாயடைத்து போனாள்! அவளது ஓலம் படிப்படியாக குறைந்தது. பதில் மட்டுமில்லை...! பொக்குணி அந்த அமைதியில் அரைத்தூக்க நிலைக்கு போய்கொண்டிருந்தான்.

தெய்வி இலாவாகமாக மாராப்பை அவிழ்த்து வீசியதில் குப்பி விளக்கு அணைந்தது...!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வாழ்வியல் 63

# "அத்தியாவசிய வெலவுகளும் அநாவசிய செலவுகளும்"


(வி.என்.சந்திரகாந்தி)



அத்தியாவசிய செலவுகள் என்னும் போது அது அவரவர் பண வரவினைப் பொறுத்து மாறுபட்டு அமைவதாக இருக்கும். பெரும் கோடீஸ்வரர்கள், வைர வியாபாரிகள், பணம் புரட்டும் அரசியல்வாதிகள், கட்டட ஒப்பந்தக்காரர்கள் போன்றோர் நாளொன்றுக்கு பல மில்லியன் ரூபாக்களை எடுத்தெறிந்து செலவு செய்துவிட்டு 'ஜம்' என்று இருந்து விடுகிறார்கள். ஒரு கோடீஸ்வரர் தனது அழகான புதுமணப் பெண்ணுடன் தேன் நிலவு செல்வதற்காக ஒரு தீவை விலைக்கு வாங்கி அங்கு அழகான பங்களா உட்பட சகல ஆடம்பர வசதிகளையும் கோடிக்கணக்கில் பணம் செலவு செய்து நிர்மாணித்தபின் தனது சகி சகிதம் சொந்த விமானத்தில் சென்று தரை இறங்கியதாக செய்திகள் வெளியாகியிருந்தன. அப்படியானவர்களுக்கெல்லாம் அத்தியாவசிய செலவு அநாவசிய செலவு என்ற வேறுபாடே கிடையாது. அவர்களுடைய பண விரயம் உடனுக்குடன் நிரப்பப்படும்.

ஆனால் உலகில் மிகப்பெரும்பான்மையானோர் நடுத்தர வருமானத்தைக் கொண்ட அலுவலர்கள், தொழிலாளர்கள், உழவர்கள் போன்றவர்களேயாவார். அம் மக்கள் அனைவருமே தமது வருமானத்தையும், செலவீனத்தையும் 'பட்ஜெட்' செய்தே வாழ்க்கை நடாத்த வேண்டிய கட்டாயத்தில் இருக்கின்றார்கள். தவறின் காலக்கிரமத்தில் அவர்கள் 'வங்குரோத்து' (Bankrupt) நிலையை எய்த வேண்டி நேரும்.

சாதாரணமாக பெரும்பான்மையான வீடுகளில் தமது உணவுத் தேவைகளுக்காக தாமே சமையல் செய்கின்றார்கள்.



அதனால் ஆடம்பர உணவு வகைகளைத் தவிர்த்து அத்தியாவசிய உணவு தேவையை நிறைவு செய்வதுடன் சிக்கனத்தையும் கடைப்பிடிக்கலாம்.

அதே போன்று தண்ணீர் கட்டணம், மின்சார கட்டணம், 'இணைய'கட்டணம் போன்றவை அத்தியாவசிய செலவுகளேயாகும். அவற்றை நாம் செலுத்த வேண்டி இருப்பினும் சிக்கனமும் எமது கையில் இருக்கிறது. ஆனால் முகட்டுவரி, காப்புறுதி, வாகன பதிவு வரிகளில் நாம் சேமிப்பை செய்ய முடியாது.

வீட்டில் அனைவரினதும் தவிர்க்கப்பட முடியாத செலவீனமாக இருப்பது புதினப்பத்திரிகைகள், சஞ்சிகைகள்!

எமக்கென்று ஒரு வீட்டினை செலவு செய்து கட்டி முடித்து விட்டால் பிரச்சனை தீர்ந்தது என்று இல்லை. எமது தேவைக்கேற்ப அதனை திருத்தியமைக்க வேண்டும். பராமரிப்பினை மேற்கொள்ள ஒரு தொகை ஒதுக்க வேண்டும்.

வீடு மட்டும் அல்லாது. எதற்குமே தேய்மானம் உண்டு. எமது உடல் நோய்வாய்ப்படுகின்றது. பரிகாரத்தை தள்ளிப்போட முடியாது. சாதனங்களுக்கு போன்றே எமது உடல் சார்ந்த பிரச்சனைகளுக்காக வைத்தியரை நாட வேண்டும்! அவர் கூறும்படியெல்லாம் செலவு செய்ய வேண்டும். இரத்தப் பரிசோதனை 'ஸ்கானிங்', எக்ஸ்ரே' சத்திர சிகிச்சைகள் எல்லாமே தவிர்க்க முடியாததும் எமது கட்டுப்பாட்டில் இல்லாததுமான அத்தியாவசிய செலவுகளே.

எம்மில் பலருக்கு ஒரு குடும்ப வாகனம் அத்தியாவசியமாக உள்ளது. மொத்த பணத்தையும் செலுத்த வசதி இல்லை. தவணைக்கட்டண முறையில் கொள்வனவு செய்கின்றோம். மாதாந்தம் கட்டணத்தை செலுத்தியே ஆக வேண்டும்.

இனி மனித நேயம் எம் வாழ்வில் மதிக்கப்படவேண்டியதொரு முக்கிய அம்சமாக உள்ளது. எத்தனை எத்தனை அநாதை சிறுவர் இல்லங்கள் எத்தனை எத்தனை முதியோர் இல்லங்கள். இன்னும் தனிப்பட்ட ஏழ்மையில் வாழும் குடும்பங்கள், கல்விக்காகவும், உணவுக்காகவும், உடைக்காகவும் எத்தனை சிறார்கள் அல்லலபடுகின்றார்கள். அவர்களுடைய தேவைகள் நாளாந்த தேவைகளாக உள்ளன. சரி, எம்மால் மாதாந்தமாயினும் அவர்களுக்காக ஒரு நன்கொடையை ஒதுக்க முடியாதா? அதைக்காட்டிலும் அத்தியாவசிய செலவீனம் எமக்கு வேறு ஒன்று இருக்க முடியுமா?

இனி வருடம் ஓரிரு முறையாவது குடும்பமாக உல்லாச பிரயாணம் மேற்கொள்வது மனதுக்கு மகிழ்ச்சியை உண்டு பண்ணுகின்றது. அப்படியில்லாவிட்டாலும் கூட உறவினர்களை சந்திக்கவும் குடும்ப விசேஷங்களில் பங்கு பற்றவும் பிரயாணங்களை மேற்கொள்ள வேண்டியே உள்ளது. பலர் தமது நேர்த்திக்கடன்களை பூர்த்தி செய்வதற்காக இந்தியா போன்ற தூர இடங்களில் உள்ள கோயில்களுக்கு யாத்திரை செல்கின்றார்கள். இவையெல்லாம் நாம் வாழ்வில் சாதிக்க வேண்டிய குறிக்கோள்களேயல்லவா?

வீட்டில் சாப்பிட்டு சாப்பிட்டு பலருக்கு அலுத்து விடுகின்றது. சிக்கனம் சிக்கனம் என்று சலித்தும் விடுகின்றது. அதனால் எங்களுக்கு வேண்டியவர்களுடன் கூடி ஒரு "காப்பி பாருக்கு" போவதை அநாவசிய செலவு என்று ஒதுக்க முடியாது.

இனி, மற்றவர்களிடமிருந்து எமக்கு கிடைக்க வேண்டிய மரியாதையை பெற்றுக்கொள்ள வேண்டுமானால் தரமான ஆடைகளை அணிந்து நாம் தோற்றமளிக்க வேண்டும்.

ஒரு மனிதனின் தேவைகளை இவை இவை என்று வார்த்தைகளில் அடக்குவது கடினமே. சந்தர்ப்ப சூழ்நிலைகள், எமது பழக்க வழக்கங்கள், உடல் ஆரோக்கியம் என்று பல காரணிகள் எமக்கு எதிர்பாராத செலவுகளை உண்டு பண்ணிவிடும். எனவே நாம் எமது வருவாயை கருத்தில் கொண்டு எமது செலவுகளை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருப்பது அவசியம். அநாவசிய செலவுகளை இனம் கண்டு அவற்றை தவிர்க்க வேண்டும்.

உதாரணமாக கார் எமக்கு பயன்படுவதை-விட பணத்தை அதிகம் விழுங்குகின்ற-தென்று தெரிந்தால் அதை உடனடியாக விற்று விடுவது நல்லது. அதனால் காருக்கான செலவுகளை தவிர்த்து விடலாம். எமது பயணங்களுக்கு பேரூந்து, தொடரூந்து போன்ற பொது வாகனங்களை பயன்படுத்திக் கொள்ள முடியும்.

தவிர, நாம் விடும் பெரும் தவறு கடனட்டை பாவிப்பதாகும். மாதாந்தம் எம்மை அறியாமலே ஒரு தொகை வட்டியாக அறவிடப்படுகின்றது. முத்திரை வரி வேறு. அது எதற்காக என்று கேட்டால் மத்திய வங்கியின் வரி என்று கூறுவர். இனி, வருடாந்தம் கடனட்டையை புதுப்பிக்கும் செலவாக எமது அனுமதி-யின்றியே ஆயிரம் ரூபா கழிக்கப்படுகி-ன்றது. கடனட்டை எமது தேவைகளுக்கு அவசியமாக இருக்கலாம். நாம்தான் வட்டியும், கட்டணமும் குறைந்த கடனட்டைகளை விநியோ-கிக்கும் வங்கிகளைக் கண்டு பிடிக்க வேண்டும்.

இந் நாட்களில் மின்சாரம் 90 யூனிற்களுக்கு மேல் இரு மடங்கு கட்டண அதிகரிப்பை விதிக்கின்றது. குளிர்சாதனப்பெட்டி, தொலைக்காட்சி, கணணி, சலவை இயந்திரம் போன்ற மிக மிக அத்தியாவசிய சாதனங்களை பாவித்தாலே போதும். அது 90 யூனிற்களை தாண்டிவிடும். தொலைக்காட்சி சனல்களில் அவசியமற்றவையை தவிர்ப்பதன் மூலம் பணத்தை மீதப்படுத்த முடியும்.

அவசியமற்ற கழகங்களிலிருந்து விலகிக் கொண்டால் மாதாந்த அங்கத்துவ கட்டுப் பணத்தை தவிர்க்கலாம்.

கட்டாயமாக வீட்டில் சமைக்க வேண்டும். உணவு பொருட்களை சில்லறையாக அன்றி மொத்தமாக வாங்க வேண்டும். சில பொருட்களுக்கு நன்மதிப்பு இருப்பதனால் விலையும் அதிகமாக இருக்கும். தரமான விலை குறைந்த பொருட்களை நாம்தான் கண்டுபிடித்து வாங்க வேண்டும்.

எனது நண்பரொருவர் எதிர்பாராத விதமாக வெளிநாட்டு பயணி ஒருவரை சந்தித்தார். பயணி கேட்டுக்கொண்டதற்கிணங்க தனது வீட்டு மேல்மாடியில் அவருக்கு ஒரு அறையை ஒதுக்கி சர்வதேச தொலைபேசி சேவையொன்றையும் தனது பெயரில் S.L.T யில் பெற்றுக் கொடுத்தார். ஒரு சில நாட்களில் பயணியை காணக்கிடைக்கவில்லை. அம்மாத முடிவில் நண்பரின் பெயரில் பதிவு செய்து, பயணியால் பயன்படுத்திய சர்வதேச தொலைபேசிக்கு 62 இலட்சம் ரூபா கட்டணம் விதிக்கப்பட்டிருந்தது. எமது கவனயீனம் எம்மை எப்படி மாட்டிவிடக்கூடும் என்பதை பாருங்கள்!

# எங்கும் எவரும் தனிமையில் இல்லை

சஞ்சயன் செல்வமாணிக்கம்

அன்று காலை நிலக்கீழ் தொடரூந்தில் எதையோ சிந்தித்தபடி பயணித்துக்கொண்டிருந்தேன். எனக்கருகில் ஒரு குழந்தையின் மழலைச் சத்தம் கேட்டது. நிமிர்ந்து பார்த்தேன். ஒரு சீனக் கண்களுடன் ஒரு ஆண் குழந்தை தனது பாட்டியுடன் மழலை மொழியில் ஏதேதோ பேசியபடி விளையாடிக்கொண்டிருந்தது. ஏறத்தாள ஒரு வயதிருக்கலாம் அவனுக்கு. சொற்கள் அற்ற ஒரு வித மழலை மொழியில் மழலை ஒலிகளால் பாட்டியுடன் உரையாடிக் கொண்டிருந்தான். பாட்டியும் தன்னை மறந்து குழந்தையாய் மாறி குழந்தையுடன் பேசியபடியே விளையாடிக்கொண்டிருந்தார். தொடரூந்து தனது கடமையில் கண்ணாயிருந்தது.

குழும உணர்வு, இன உணர்வு, மொழி உணர்வு என்பன யாவும் ஒரு வித சொந்தம் என்ற பதத்தையே குறிக்கின்றன. எனது குடும்பம், எனது சந்ததி, உறவுகள் என்று எம்மை நாம் எங்கெல்லாம் மற்றவர்களுடன் இனைத்துக்கொள்கிறோமோ அங்கெல்லாம் இந்த சொந்தம் உருவாகிறது.

எனக்கும் இப்படியான சில சொந்தங்கள் இருக்கின்றன. சில இடங்களில் நான் தனிமையை உணர்ந்த நேரங்களில் என்னருகில் மேற்குறிப்பிட்ட எந்த சொந்தமும் இருக்கவில்லை. பெரும் வெளியில் தனியே அலைவது போலிருந்தது மனநிலை.

அந் நேரங்களில் ஒரு நோர்வேஜியரைச் சந்தித்தால் மனம் குழும உணர்வை உணர்ந்தது. தனிமையுணர்வுகள் அகன்று போயின. நோர்வேஜியர் இல்லாதவிடத்து சுவீடன் நாட்டவர்கள் எனினும் கூட அவர்களுடன் நோர்வேஜிய மொழியில் உரையாட முடிவதால் அந்த குழும எண்ணம் உருவாகி மனதை ஆறுதல்படுத்தியது.

கால்பந்து விளையாட்டுக் குழுக்களின் ரசிகர்கள், ஒரே பாடசாலையில் கல்விகற்றவர்கள், ஒரே ஊரைச் சேர்ந்தவர்கள், இப்படி மனிதர்கள் குழும உணர்வினை உணர்வதன் மூலமாக



தங்களை மற்றவர்களுடன் இணைத்து ஒரு வித குடும்ப உணர்வினைப் பெற்றுக்கொள்கிறார்கள்.

சிலர் இந்த குழும உணர்வுகளுக்கு அப்பாற்பட்டு வாழவும் செய்கிறார்கள். அவர்களின் வாழ்வு தனிமையிலும், வெறுமையிலும் கழிந்து போவதாகவே உணரமுடிகிறது. சிலர் வாழ்வின் அனுபவங்களினால் இப்படியான குழும உறவுகளை தவிர்த்து தனிமையில் வாழ்ந்தாலும் அவர்களும் பல இடங்களில் தம்மை மற்றவர்களுடன் இணைத்து பாதுகாப்புணர்வை உணர்ந்துகொண்டிருக்கிறார்கள்.

ஒஸ்லோவில், பிச்சைக்காரர்கள் கூடும் இடம், போதைவஸ்துப் பாவனையாளர்கள் கூடுமிடம், வெளிநாட்டவர்கள் கூடுமிடம், மதுபான நிலையங்கள் என்று பல இடங்கள் இருக்கின்றன. சமூகத்தில் தங்களென்று ஒரு இடமில்லாத பலர் தம்மை இப்படியான இடங்களில் அடையாளப்படுத்திக்கொள்வதன் மூலம் குழும உணர்வு கொடுக்கும் பாதுகாப்புணர்வை பெறுகிறார்கள் என்றால் அது மிகையில்லை.

இந்த பாதுகாப்புணர்வை உணராதவர்களே தனிமையில் சிக்கித்தவிக்கிறார்கள். வாழ்க்கை அவர்களை புறட்டிப்போட்டு பந்தாடிக்கொண்டே இருக்கிறது.

குழும உணர்வுக்காக பலர் பலவித செய்கைகளைச் செய்கிறார்கள், அவை மிகச் சிறந்த மனிதத்தன்மையான செயல்களில் இருந்து குழும உணர்வுக்காக இன்னொரு மனிதனின் உயிரை பறிப்பது வரை விரிந்து கிடக்கிறது.

அதேவேளை குழும உணர்வு இல்லாது போகும் போது மனிதர்களிடையே ஒற்றுமையும் இல்லாது போகிறது. இதற்கு உதாரணமாக புலம்பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழ்ர்களை எடுத்துக்கொள்ளலாம். 2009ம் ஆண்டு வைகாசி மாதத்துக்கு முன்பு ஒரே குழுமமமாக இருந்த பெரும்பான்மை புலம்பெயர் தமிழர்கள் இன்று அவர்களின் குழும அடையாளத்தை இழந்ததனால், அவர்களுக்கிடையில் பலவிதமான சிக்கல்களுடனும், பூசல்களுடனும் வாழ்வதை அவதானிக்க முடிகிறதல்லவா?

அந்த தொடரூந்தில் அமர்ந்திருந்த குழந்தையும் பாட்டியும் குடும்பம் என்னும் குழும உறவின் பாதுகாப்புணர்வில் தம்மை மறந்து வாழ்ந்து கொண்டிருந்தார்கள். அதே தொடரூந்தில் குடும்பம் என்றும் குழும உறவு அற்ற சிலரும் இருக்கலாம். குடும்ப உறவில் மட்டும் தான் குழும உறவு தந்து போகும் பாதுகாப்புணர்வும், நம்பிக்கையும் இருக்குமென்பதில்லை.

**மனிதர்கள் எங்கெல்லாம் இன்னொரு மனிதனிடம் பாதுகாப்பையும், நம்பிக்கையையும் உணர்கிறார்களோ அங்கு தனிமை தோற்றுக் கொண்டே இருக்கிறது. அப்படியே இருக்கக் கடவதாக.**

**இன்றைய நாளும் நல்லதே ...**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சினிமுரசு

## திரை விமர்சனம் ராஜ மௌலியின் இயக்கத்தில் பிரபாஸ், ராணா, தமன்னா நடிக்கும் "பாகுபலி"



ராஜா கதை என்றாலே நம் நினைவிற்கு வருவது அரியனைக்கு போட்டிபோடும் அண்ணன், தம்பி பின் அவர்களுக்குள் வரும் மோதல் இது தான். அதேபோல் தான் இந்த பாகுபலியும். படத்தின் முதல் காட்சியிலேயே ரம்யா கிருஷ்ணன், ஒரு குழந்தையை கையில் ஏந்திகொண்டு, நீரில் மூழ்கி அந்த குழந்தையை மலைவாழ் மக்களிடம் ஒப்படைத்து ஒரு மலையை காட்டி இறக்கிறார். பிரபாஸிற்கு எப்போதும் அந்த மலை மேல் என்ன இருக்கின்றது என்ற ஆர்வம், வளர்ப்பு அம்மா அங்கு நீயெல்லாம் போக கூடாது என்று மிரட்ட, அதையும் மீறி அங்கு செல்கின்றார். கொள்கைக்காக போராடும் பெண்ணாக தமன்னா, இவரை பார்த்தவுடன் பிரபாஸிற்கு காதல் பற்றிக்கொள்ள, அந்த கொள்கையை உனக்காக நான் செய்கிறேன் என பிரபாஸ் அங்கு செல்ல, இவரை அந்த ஊர் மக்கள் கடவுளாக பார்க்கின்றனர். பாகுபலி என்றும் அழைக்கிறார்கள். ஏன் இவர்கள் பிரபாஸை இப்படி பார்க்கின்றார்கள், யார் அந்த பாகுபலி என்பதை மிக பிரமாண்டமான பிளாஷ்பேக்கில் சொல்லியிருப்பது தான் மீதிக்கதை.

படத்தின் முதல் ஹீரோ ராஜமௌலி தான், எப்படி இந்த படத்தை இவர் எடுத்து முடித்தார் என, பார்த்த நமக்கும் தலை சுற்றி போய் விடும், நான் ஈயில் குட்டியாக பிரமாண்டத்தை காட்டி இதில் யானை அளவிற்கு தன் திறமையை வெளிபடுத்தியுள்ளார். பிரபாஸ் இந்த படத்திற்காக 3 வருடம் தன் உயிரை கொடுத்து தான் நடித்துள்ளார், அவருக்கு இணையாக 6 ½ அடி உயரத்தில் ராணா மிரட்டியிருக்கிறார். தமன்னாவுக்கு நீண்ட இடைவேளைக்கு பிறகு நடிப்பிற்கு தீனி போடும் கதாபாத்திரம். சத்யராஜ் ஹீரோவிற்கு இணையான பாத்திரம், ஒரு படைத்தலைவனாக ஒவ்வொரு காட்சியிலும் தான் ஒரு மூத்த நடிகர் என நிருபித்துள்ளார். அதிலும் பிரபாஸ் காலை தன் தலையில் தாங்கும் காட்சி. அப்பறம் அனுஷ்காவுக்கு இந்த படத்தில் எந்த பெரிதாக பாத்திரம் ஒன்றுமில்லை, இரண்டாம் பாகம் அடுத்த வருடம் வருகின்றது, அதில் தான் அனுஷ்கா கதாபாத்திரம் முழுமையாக வெளிப்படுமாம். இந்த மாதிரி படத்திற்கு எதற்கு குறை கூற வேண்டும்?.

மொத்தத்தில் இந்த பாகுபலி இந்திய சினிமாவின் தவிர்க்க முடியாத சாதனையாளன்.



## பாகுபலிக்கு போட்டி ஆரம்பம்

பாபலிக்கு போட்டியாக வட இந்தியாவில் ரன்வீர் சிங், தீபிகா படுகோன் நடிப்பில் ஒரு சரித்திர படம் உருவாகியுள்ளது. தற்போது புரட்சி இயக்குனர் எஸ்.பி.ஜனநாதன் பாகுபலி படத்தை போன்றே தமிழில் ஒரு பிரமாண்ட படத்தை இயக்கவுள்ளாராம். இது குறித்து அவர் கூறுகையில் 'பாகுபலி வெற்றி எனக்கு ஒரு சரித்திர படத்தை இயக்கலாம் என்ற தைரியத்தை கொடுத்துள்ளது. தமிழர்களை அடிப்படையாக கொண்டு உலக மனித நாகரீகத்தை பிரதிபலிக்கும் படமாக அது அமையும் என்றுள்ளார்.

**தனுஷின் இயக்கத்தில் வெளியான "மாரி" திரைப்படத்தின் திரைவிமர்சனம் அடுத்த வார இயத்தில்......**



## சூர்யாவிற்கு பிறந்தநாள் வாழ்த்து

தென்னிந்திய சினிமாவின் முன்னணி நடிகர் சூர்யாவின் 40வது பிறந்தநாள் இன்று, இதை முன்னிட்டு ரசிகர்கள் டுவிட்டரில் தங்கள் வாழ்த்துக்களை கூறி வருகின்றனர்.



## அஜித்தான் தீர்மானிக்க வேணும்

சமீபத்தில் வந்த தகவலின் படி இயக்குனர் சுரேஷ் கிருஷ்ணா அஜித்திற்காக ஒரு கதை ரெடி செய்து விட்டாராம். அது வேறு ஒன்றும் இல்லை பாட்ஷா2 எடுப்பதாக இருந்த இவர், அதை ரஜினி மறுக்க, தற்போது அதே கதையை அஜித்திற்காக ரெடி செய்து விட்டாராம்.

இது உண்மையா? வதந்தியா? என்று தெரியவில்லை. முருகதாஸ், சுசீந்திரன், கே.வி.ஆனந்த், சுரேஷ் கிருஷ்ணா இதில் அஜித்தின் விருப்பம் யார்? பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

## தனுஷின் அடுத்த கட்டம்

தனுஷ் தற்போது விஐபி-2 படத்தில் நடித்து வருவது அனைவரும் அறிந்ததே, இப்படத்தை முடித்த கையோடு அடுத்து வெற்றிமாறன் இயக்கத்தில் வட சென்னை படத்தில் நடிக்கவிருக்கின்றாராம்.

## புலிக்கு அதிக ஹிட்ஸ்

இளைய தளபதி விஜய் நடிப்பில் புலி திரைப்படம் விரைவில் திரைக்கு வரவிருக்கின்றது, இப்படத்தின் முதன் முறையாக விஜய் பல கெட்டப்புகளில் தோன்றவுள்ளார். இப்படத்தின் டீசர் ஒரு சில வாரங்களுக்கு முன் வெளிவந்தது. இந்த டீசர் தற்போது வரை 6 மில்லியன் ஹிட்ஸை எட்டியுள்ளது. ஐ படத்தின் டீசருக்கு பிறகு தென்னிந்தியாவில் அதிக ஹிட்ஸை எட்டியது புலி தான்.

## 500 கோடியில் எந்திரன் 2

ஷங்கர் என்றாலே பிரமாண்டம் என்று தான் பொருள், அப்படியிருக்க ராஜமௌலி இந்த பெயரை எளிதில் பிடித்து விட்டார், இவர் அடுத்து ரஜினிகாந்த் நடிப்பில் எந்திரன் 2 இயக்கவிருப்பது கிட்டத்தட்ட உறுதியாகிவிட்டது, இந்நிலையில் இப்படத்தில் வில்லன் கதாபாத்திரத்தில் விக்ரம், அமீர், ஷாருக் என யாரை நடிக்க வைக்கலாம் என்று பேச்சு வார்த்தை நடந்து வருகின்றது. இப்படத்தின் பட்ஜெட் குறைந்தது ரூ 500 கோடி இருக்கும் என கூறப்படுகின்றது.

## 10 நாட்களில் 355 கோடி வசூல்

பாகுபலி படமும் எப்படியும் ஹிட் ஆகும் என்று தான் எல்லோரும் எண்ணினார்களே தவிர வசூலில் ஓர் அசுரப் பாய்ச்சலை நிகழ்த்தும் என்று யாரும் கணிக்கவில்லை. நாளுக்கு நாள், இதன் வசூல் விவரங்கள் மிரட்டும் விதத்தில் அமைகின்றன. முதல் 10 நாளில் 355 கோடி ரூபாயை வசூலித்துவிட்டது பாகுபலி! எந்திரன் வசூலை முறியடித்து அதிகம் வசூலித்த தென்னிந்திய படம் என்கிற சாதனையை நிகழ்த்தியது.

அமீர் கானின் பிகே 740 கோடி ரூபாய் வசூலித்ததுதான் இதுவரை அதிகம் வசூலித்த இந்தியப் படமாக உள்ளமை குறிப்பிடத்தக்கது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விளையாட்டுப் பையன்

INFOMATION TECHNOLOGY

MOBILE

## அடுப்புக்குள் கமெரா

மைக்ரோவேவ் ஓவனுக்குள் வைக்கப்பட்டுள்ள உணவுப் பொருட்களின் பதத்தை தெரிந்து கொள்வதற்காக ஒரு புதிய செயலியை கண்டுபிடித்துள்ளனர்.




இதன் மூலம் மைக்ரோவேவ ஓவனுக்குள் வைத்த பொருட்களின் நிலைமையை ஒவ்வொரு முறையும் திறந்து பார்க்காமல் அறிந்து கொள்ள முடியும். இதற்காக உள்ளே ஒரு கமெராவும் வைக்கப்பட்டுள்ளது.

## விண்டோஸ் 10

மைக்ரோசொப்ட் நிறுவனம் இம் மாத இறுதியில் தனது புதிய இயங்குதளப் பதிப்பான விண்டோஸ் 10 இனை அறிமுகம் செய்யவுள்ளதாக உத்தியோகபூர்வ அறிவிப்பை அண்மையில் வெளியிட்டிருந்தது.

இந்நிலையில் வழக்கமாக இறுவட்டுக்களில் விற்பனைக்கு விடப்படும் இயங்குதளமானது தற்போது USB சாதனங்களிலும் விற்பனைக்கு வரவுள்ளதாக தகவல் வெளியாகியுள்ளது. இதேவேளை டிஜிட்டல் டவுண்லோட் முறையிலும் மைக்ரோசொப்ட் இணையத்தளத்திலிருந்து தரவிறக்கம் செய்துகொள்ள முடியும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

OTHER

## பிளாஸ்ரிக்கைக் கொண்டு வீதிகள்

தற்போது வீதிகளை அமைப்பதற்குப் பயன்படுத்தப்படும் மூலப் பொருட்கள் நீண்ட காலம் நிலைத்திருக்காமையினால் வீதிகளை அடிக்கடி செப்பனிட வேண்டிய அவசியம் காணப்படுகின்றது. இதனை தவிர்த்து புதிய பயண அனுபவங்களை வழங்கக்கூடிய வகையில் எதிர்காலத்தில் பிளாஸ்டிக் பாதைகள் அமைக்கப்படவுள்ளன.


மீள்சுழற்சிக்கு உட்படுத்தப்படும் பிளாஸ்டிக்கினை பயன்படுத்தி உருவாக்கப்படும் வீதிகள் உயர் மற்றும் குறைந்த வெப்பநிலைகளுக்கு தாக்குப் பிடிக்கக்கூடியதாக இருக்கும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. தவிர வீதிகளை விரைவாக அமைப்பதற்கும் இந்த பிளாஸ்டி பாதைகள் உதவும் என மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.



## அன்ரொயிட்டுக்கான ஸ்கைப்

இலவசமாகவும், கட்டணம் செலுத்தப்பட்டதுமான இரு வகையான வீடியோ மற்றும் குரல்வழி தொடர்பாடல் சேவையை வழங்கி வரும் ஸ்கைப் ஆனது அன்ரோயிட் சாதனங்களுக்கான புதிய பதிப்பினை வெளியிட்டுள்ளது. இப் பதிப்பானது மின்கலத்தின் ஆயுட்காலத்தினை பாதிக்காததுடன், ஸ்கைப் கணக்கினுள் உள்நுழைந்த தகவல்களை சேமித்து வைத்திருக்கும் வசதி தரப்பட்டுள்ளது. இவை தவிர மேலும் சில புதிய அம்சங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளதுடன், முன்னைய பதிப்பில் காணப்பட்ட குறைபாடுகள் நீக்கப்பட்டுள்ளன.

## ஸ்கேன் கண்ணாடி




மைக்ரோசொப்ட் நிறுவனத்தோடு இணைந்துள்ள கேஸ் வெஸ்டர்ன் ரிசர்வ் பல்கலைக்கழகம் சமீபத்தில் ஒரு வீடியோவை வெளியிட்டுள்ளது. மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் ஹோலோலென்ஸ் கண்ணாடியை பயன்படுத்தி மனித உடலின் அனைத்து பாகங்களையும் கண்காணிக்கலாம் என அந்த வீடியோவில் கூறப்பட்டுள்ளது.

இதை அணிந்து கொண்டு எலும்பு மண்டலம், நரம்பு மண்டலம், தசைகள், இதயம், மூளை அனைத்தையும் தனித்தனியாக கவனிக்கலாம். பல கட்ட சோதனைகளில் கண்டுபிடிக்கும் பிரச்சனைகளை இந்த கண்ணாடியை அணிந்து கொண்டால் எளிதாகக் கண்டு பிடித்துவிடலாம்.

## இமோஜிகளைக் கொண்டு பாஸ்கோடு

ஸ்மார்ட்போனில் பெருமளவில் பயன்படுத்தப்படும் இமோஜிகளை பாஸ்வேர்டாக பயன்படுத்தும் காலம் நெருங்கி கொண்டிருக்கிறது. ஸ்மைலி எனப்படுவதன் மேம்படுத்தப்பட்ட வசதியான இமோஜிகள், கணனி, ஸ்மார்ட்போன் உரையாடலின் போது அனைவராலும் பொதுவாக பயன்படுத்தப்படுவது. இந்நிலையில், இனி வரும் காலங்களில், பாஸ்வேர்டிலும் இமோஜிகளைப் பயன்படுத்தும் வாய்ப்பு உருவாக இருப்பதாக தகவல் வெளியாகியுள்ளது.

பிரித்தானியாவைச் சேர்ந்த இண்டெலிஜெண்ட் என்விரான்மெண்ட்ஸ் எனும் நிறுவனம் வங்கி சேவைக்குப் பயன்படுத்தும் பாஸ்கோடுகளில் எண்களுக்குப் பதிலாக இமோஜி எழுத்துக்களைப் பயன்படுத்தும் யோசனையை தற்போது முன்வைத்துள்ளது. இவற்றைக் கண்டுபிடிப்பதோ களவாடுவதோ ஹேக்கர்களுக்கு இயலாத காரியமாக இருக்கும் என்று சொல்கிறது.



## அன்ரொயிட் தானியங்கி கார்



மென்பொருள் பொறியியலாளரும் அவரது குழுவினரும் இணைந்து அன்ரோயிட் இயங்குதளத்தினை அடிப்படையாகக் கொண்டு இயங்கக்கூடிய தானியங்கி மொடல் காரினை வடிவமைத்துள்ளனர். இவ் வாரத்தினுள் அறிமுகம் செய்யப்படவுள்ள இக்காரானது நிரந்தரமாக இணைக்கப்பட்டுள்ள சென்சார்களிடமிருந்து தரவுகளைப் பெற்றும், விசேட புரோகிராம் மூலமும் வீதியிலுள்ள கோடுகளை இனம் கண்டு தானாகவே இயங்கக்கூடிய முறையில் வடிவமைக்கப்பட்டுள்ளது.

## ரிவி யை கணனி மானிட்டராக மாற்றலாம்

தொலைக்காட்சியை கணனியின் மானிட்டராக மாற்றிக் கொள்ளும் வசதி வந்து விட்டது. ஆனால் கணனியின் மானிட்டருக்குப் பழக்கப்பட்டவர்களுக்கு தொலைக்காட்சி திரையில் மெனுவைப் பார்த்துப் பயன்படுத்துவது சிக்கலாக இருக்கலாம். ஆனால் தொலைக்காட்சி திரையில் யூடியூப் வீட்டியோக்களைப் பார்க்க விரும்பினால் இந்தப் பிரச்சினைக்குச் சுலபமான தீர்வு இருக்கிறது.

https://goo.gl/goCC2n எனும் முகவரிக்குச் சென்று தொலைக்காட்சிக்கு பொருத்தமான இடைமுகத்தைத் தேர்வு செய்து பயன்படுத்தலாம்.

## SAMSUNG GALAXY TAB S2

Samsung Galaxy Tab S2 எனும் புதிய டேப்பினை அறிமுகம் செய்யவுள்ளது.

இது 9.7 அங்குல அளவு, 2048 x 1536 Pixel Resolution உடைய Super AMOLED தொடுதிரையினைக் கொண்டுள்ளதுடன், 1.9GHz வேகத்தில் செயலாற்றக்கூடிய Samsung Exynos 5433 Processor, பிரதான நினைவகமாக 3GB RAM, 32GB சேமிப்பு நினைவகம் என்பவற்றினைக் கொண்டுள்ளது.

---

## கணனி பற்றி கண்ணோட்டம் - அதன் வரலாறும், ஏற்பட்ட மாற்றங்களும்

கி.பி.1622-ல் வில்லியம் ஆல்ட்ரெட் என்பவர் "ஸ்லைட்'ரூல்" என்கிற கருவியை கண்டுபிடித்திருந்தார். கால்குலேட்டர் கண்டுபிடிப்பதற்கு முன்னர் இந்த கருவியேதான் கணித பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்பட்டதாகவும், பெருக்கல் குறியீட்டுக்கு முதன் முதலில் "ஒ" -ஐ பயன்படுத்தியதும் இவர்தான் எனவும் வரலாற்று அறிஞர்கள் கூறுகின்றனர். இவ்வாறாக தொழில்நுட்பத்தின் வளர்ச்சி குறித்து தமது நண்பர்களுடன் விவாதித்து கொண்டிருக்கும்போது சக்கரத்திலிருந்து ஆரம்பித்த விவாதம் முடிவில் கணனியகம் வரை சென்று முடிந்திருக்கிறது. சக்கரம் கண்டுபிடித்த பிறகுதான் மனித நாகரிகம் மிக வேகமாக வளர்ந்ததாகவும் கூறப்படுகின்றது. உண்மைதான்! உலகினை ஆட்டிப்படைக்கும் மனிதனது கண்டு பிடிப்புக்களில் மிகவும் அசாத்தியமிக்கதான னுளைிடயலபை துாழயெிீநைச.திபகண்டுபிடிப்பு என்றால் அது கணனியேதான் என்பதில் மாற்றுக் கருத்துக்கு இடமிருக்காது.

கணனியானது கண்டுபிடிக்கப்பட்டு சுமார் 40 ஆண்டுகளில் அசுர வளர்ச்சிகண்டுள்ளது. இப்போது மனிதன் கண்டுபிடித்துக் கொண்டிருக்கின்ற, ஏலவே கண்டுபிடித்த அத்தனைக்கும் கணினியின் பங்கு ஏதோர் வகையில் பயன்பட்டுகொண்டிருக்கிறது என்றுதான் கூறவேண்டும். மனிதனது தோற்றுவாய், உலகின்தோற்றுவாய், நாகரிகத்தின் தோற்றுவாய், எதிர்காலத்தின் தோற்றப்பாடுகள், ஆகாயத்தின் அத்தனை ஆய்வுகளுக்கும், கடலின் ஆழம் தொடக்கம் பூமியின் உள்ளே வரையிலான அத்தனை பரப்புகளிலும் கணனி புகுந்து விளையாடுகிறது.

அப்படியானால் இன்று இருக்கின்ற, எதிர்காலத்தில் ஏற்படவிருக்கின்ற அத்தனை விடயங்களுக்கும், அதாவது உணவு சமைப்பதிலிருந்து வாய்க்குள் உணவைக் கொண்டு செல்லும் வரையிலான சகலவிதமான தொழிற்பாட்டையும் இன்று ரோபோக்கள் இந்த கணனியின் ஊடாக செயற்படுத்த முடியுமாக இருந்தால் கணனியுகம் மனிதனது சிந்தனையை இன்னும் அதிகரிக்கச் செய்யும் என்பதில் எவ்விதமான சந்தேகத்திற்கும் இடமிருக்காது. அந்தவகையில் கணனி முக்கியமிக்க கண்டுபிடிப்பு என்பதுதான் அனைவரினதும் ஏகோபித்த முடிவு.



தொடரும்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாட்டு நடப்பு

இலங்கையில் போதை வஸ்து பாவனை மிக அசுர வேகத்தில் முன்னோக்கிச் செல்வதாக பல ஆய்வுகள் ஊர்ஜிதப்படுத்தியுள்ளன. அதேவேளை பாடசாலை மாணவர்கள் மத்தியிலும் போதைப் பொருளின் ஆதிக்கம் என்றும் இல்லாதவாறு அதிகரித்த வண்ணம் உள்ளதாக போதைப் பொருள் தடுப்புப் பிரிவு கூறி வருகின்றது.

சமூகத்தை சீரழித்து சின்னாபின்னமாக்குவதை சிலர் தம் தொழிலாக கொண்டுள்ளதுடன் எப்படியும் பணம் சம்பாதித்தால் அதுவே போதும் என்பதே அவர்களுடைய அடிப்படை கொள்கையாக உள்ளது.

இந்நாட்டின் அரசியலில் தாமிறக்கும் வரை நிலைத்திருக்க வேண்டுமானால் எமது அரசியல் வாதிகளுக்கு கொள்கலன் அளவுக்கு பணம் வேண்டும். அதனால் அவர்கள் பல பாரிய கொள்கலன்கள் மூலம் போதைப் பொருட்களை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்கிறார்கள்.

மேலும் இந்த நாட்டு அப்பாவி மக்களின் விலைமதிக்க முடியாத உயிர்களைப் பற்றி அந்த அரசியல்வாதிகள் எள்ளளவும் கவலை கொள்வதே இல்லை.

அந்த அரசியல்வாதிகள் தங்களது அரசியலை நடத்த போதைப் பொருட்களை கடத்துவதில் மாத்திரம் நின்றுகொள்ளவில்லை. தத்தமது ஆதரவாளர்களையும் அது தொடர்பில் ஊக்குவித்து வருகிறார்கள். அதனால் நாடு பூராகவும் மிக துரித விரிவாக்கமடைந்து வருகிறது இப்போதைப் பொருள் பாவனையும் விற்பனையும்.

மேலும் நாம் வாழ்வதற்கு பணம் மிக முக்கிய தேவை என்பதை ஏற்றுக் கொள்ளத்தான் வேண்டும். அதற்காக இன்னுமொருவரின் உயிரை வீணே போக்க வைத்து சம்பாதிக்கும் பணம் உண்மையில் தேவை தானா? பாவத்தின் மூலம் சம்பாதிக்கும் பணம் எத்தனை நாட்களுக்கு நிலைத்து நிற்கப் போகின்றது?

அண்மையில் கூட சப்ரகமுவ மாகாண சபை தலைவரின் சாரதி ஒருவர் 3கிலோ கஞ்சா பார்சலுடன் காவல்துறையினரால் கைது செய்யப்பட்டார். அவ்விடயத்தில் கூட குறித்த தலைவர் அதற்கும் தனக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என காவல்துறையிடம் வாக்குமூலம் அளித்திருந்தார்.

அவ்விடயத்தில் அகப்பட்டுக் கொண்டவர் அந்த அப்பாவி சாரதியே! அவர் சிறை சென்றாலும் அவரின் குடும்பம் நடுத்தெருவுக்கு செல்லாது என அவர் நம்பிக்கை வைத்திருந்ததால் அவர் துணிந்து செயல்பட்டுள்ளார்.

இது போன்ற விடயங்களில் வடக்குப் பகுதி அமைதியாக கடந்த காலங்களில் செயல்பட்டாலும் தற்பொழுது அங்கும் போதைப் பொருள் பாவனையும், விற்பனையும் அதிகரித்துக் காணப்பட்டதாக சம்பந்தப்பட்ட அதிகாரிகளாலும் ஊடகங்களாலும் அடிக்கடி சுட்டிக் காட்டப்பட்டு வருகின்றது. ஓர் இனத்தினை சீரழிப்பதற்காகவே இவ்வாறு போதைப்பொருள் பாவனை அதிகரிக்கப்படுகின்றது என்பது ஆண்வாளர்களின் கருத்தாக காணப்படுகின்றது. ஆனால் புலிகளின் காலப்பகுதியில் போதைப் பொருளை நினைத்துப் பார்க்கக் கூட அந்தப் பிரியர்களுக்கு இடமிருக்கவில்லை.

அமெரிக்கா, ரஷ்யா, இந்தியா, ஜப்பான் உள்ளிட்ட பல உலக வல்லரசுகள் விண்வெளியை பற்றியும் நாட்டின் அபிவிருத்தியை பற்றியும் அன்றுதொட்டு இன்று வரை சிந்தித்து செயல்பட்டுக் கொண்டிருக்கும் வேளையில் நம்நாட்டவர்கள் எப்படி போதைப்பொருளை உற்பத்தி செய்து விற்பனை செய்யலாம் என சிந்திக்கிறார்கள்.

முன்னால் ஜனாதிபதியான சந்திரிக்கா எப்போதும் கூறி வருவது எனக்கு எனது கட்சியை விட எனது நாடே முக்கியம் என்பதாகும். அவர் நாடு சீரழிவதை என்றுமே பொறுத்துக்கொள்ள மாட்டார். ஆனால் இன்றைய தலைவர்கள் தமது கட்சியையும் ஆதரவாளர்களையும் வளர்த்துக் கொள்வதற்காகவே தேர்ந்தெடுத்த வழி போதைப் பொருள் கடத்தலும் விற்பனையுமே.

## இது தான் வியாபார இராச தந்திரமோ?

**– பாலையூற்றான் –**

தங்கொட்டுவ அன்று தொட்டு இன்று வரை கள்ளச் சாராயத்திற்கு பெயர் போன இடமாகும். அது தரத்திலும் ஏனைய கள்ளச் சாராயங்களை விட முன்னிலை வகிக்கின்றமையை மதுப்பிரியர்களின் ஏகோபித்த சிபார்சு உறுதிப்படுத்துகின்றது.

அப்பிரதேசத்திலிருந்தே பல இடங்களுக்கு கள்ளச்சாராயம் விநியோகம் செய்யப்படுவது வழமை. சட்டத்தின் வலைக்குள் அகப்பட்டால் மரண தண்டனையா கிடைக்கப்போகிறது? சிறிய தொகையிலான தண்டத்தை நீதிமன்றிற்கு செலுத்திவிட்டு மீண்டும் அந்த சட்டத்திற்கு முரணான தொழிலில் ஈடுபடுபவர்களே அப்பகுதியைச் சார்ந்தவர்கள்.

அதனால் கள்ளச்சாராயம் எனும் கசிப்பு தயாரிப்பு தொழில் என்றுமே வீழ்ச்சியடையவதில்லை. இன்று கூட இரகசிய அனுமதியுடன் நாட்டில் பல இடங்களில் சட்டவிரோத மது உற்பத்தி நடவடிக்கைகள் இடம்பெறுவதை எவரும் மறுக்கமுடியாது. யாதும் அழுத்தங்கள் ஏற்பட்டால் மாத்திரமே சட்டவிரோதகாரர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படுவது வழமையாகும்.

மாலா சிலாபத்தை பிறப்பிடமாகக் கொண்ட ஒரு விதவை. அங்குள்ள தும்புத் தொழிலக உரிமையாளர் அவளை அங்கு மதிய உணவு விற்பதற்கு அனுமதித்திருந்தார். அவளின் மதிய உணவு மிகவும் சுத்தமாகவும், சுவையாகவும் இருப்பதால் அங்குள்ள ஊழியர்கள் முண்டியடித்து அவ்வுணவுப் பார்சலை வாங்கிச் சாப்பிட்டு வருவது வழமை.



சுமார் 3 வருட காலமாக அவள் அந்த வியாபாரத்தில் ஈடுபட்டு வந்தாலும் திடீரென அவளின் வியாபாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. தும்பத் தொழிலகத்தின் பல தொழிலாளர்கள் தொழிலகத்திற்கு வெளியே உள்ள மரத்தடியில் புதிதாக வியாபாரத்தில் ஈடுபட்டு வரும் கமலாவிடம் மதிய உணவை உண்ணத் தொடங்கியதே அதற்குக் காரணம். அவள் தங்கொட்டுவ பிரதேசத்தைச் சார்ந்தவள். அத்துடன் சற்று அழகானவளும் கூட. துடிப்பு மிகு இளம் வயதைக் கொண்ட அவளின் மதிய உணவை மரத்தடியிலே இருந்து சுவைத்து சாப்பிட தொழிகத்திற்கு வெளியேயும், உள்ளேயும் பலர் போட்டி போட்டு முன்வந்தனர்.

சிறிது காலத்தினுள் மாலாவின் சாப்பாட்டு வியாபாரம் அடியோடு சரிந்தது. அவளால் மேற்கொண்டு ஒன்றும் செய்ய முடியவில்லை. மேலும் விலையுயர்ந்த சமையல் பொருட்களைக் கொண்டு மிக சுவையாக சமைத்தும் குறைந்த விலையில் மதிய உணவுப் பார்சல்களை விற்பனை செய்தும் அங்கு பயனளிக்கவில்லை. ஆனால் கமலாவின் உணவுப் பார்சலின் விலை சற்று அதிகமாக இருந்தாலும் அவளிடமே அனைவரும் வாங்கத் தொடங்கியதால் அவள் வண்டியில் மதிய உணவு வியாபாரம் செய்யுமளவிற்கு முன்னேறினாள். இதற்கு ஈடு கொடுக்க முடியாத மாலா தனது தொழிலை முற்றாக கைவிட்டாள்.

அன்று திங்கட்கிழமை குறித்த தொழிற்சாலையில் ஒரே அமளிதுமளியாக இருந்தது. அதற்குக் காரணம் மதிய உணவு கொடுக்க இரண்டு வியாபாரிகளும் அங்கு இல்லாததே.

கமலா வியாபாரத்திற்கு வராமைக்கு அவள் கைது செய்யப்பட்டு 14 நாட்கள் விளக்கமறியலில் வைக்கப்பட்டதே காரணமாகும். அவளின் மதிய உணவிற்கு அவ்வளவு தூரம் கிராக்கி ஏற்பட்டமைக்கு அவளது மதிய உணவுப் பார்சலுக்குள் இலவச இணைப்பாக இருந்த தங்கொட்டுவ கசிப்பை உள்ளடக்கிய சிறிய அளவிலான பொலித்தீன் பொதியே காரணம். எப்படியோ காவல்துறையிடம் அவள் வசமாக மாட்டிக்கொண்டாள்.

இதனால் தொழிலை நேர்மையாக செய்து வந்த மாலாவும் பாதிக்கப்பட்டமை தான் மிச்சம். இறுதியில் கிடைத்து வந்த சுகாதாரமான உணவினை இழந்தனர் தொழிலாளர்கள்.

---

## இதுவல்லவோ பாசம்

இங்கு ஒரு அரபிக்கு திருமணம் முடிந்து 20 வருடங்கள் கழித்து ஒரு ஆண் குழந்தை பிறந்தது. பல கம்பனிகளுக்கு சொந்தக்காரர். அனைத்து சொத்துக்கும் வாரிசு இல்லாமல் போய்விடுமோ என்ற கவலையில் இருந்த அந்த குடும்பத்திற்கு பொக்கிசமாக வந்த குழந்தை. இந்த வீட்டில் ஒரு இலங்கையை சேர்ந்த ஒரு பெண்மணி வேலைக்காரியாக பணிபுரிந்து வருகிறார். இந்த அம்மணிக்கு 3 குழந்தைகள். சிறு வியாபாரம் செய்து குழந்தைகளையும் கவனித்து வருகிறார் அவரின் கணவர். இந்த வேலைக்காரி அம்மணி தான் இந்த குழந்தைக்கு எல்லாமே. தாய்பாலை தவிர அனைத்து தேவைகளையும் பூர்த்தி செய்வது இவள் தான்.

தூங்கக் கூட இந்த குழந்தை பெற்றோரிடம் செல்லாது. தூங்கிய பின்பு, தூக்கிக்கொண்டு அவர்களின் ரூமுக்கு கொண்டு செல்லுவார்களாம் பெற்றோர்கள். குழந்தைக்கு 2 வருடம் ஆகி இருக்கும். அப்பெண்மணி 3 மாதம் விடுமுறையில் இலங்கை சென்றார்.

தன்னை பிரிந்த அடுத்த நிமிடத்தில் அழ ஆரம்பித்து விட்டது குழந்தை. சரி, சிறிது நேரத்தில் சரியாகிவிடும் என்று இருந்து விட்டார்கள். இரவு உணவு உண்ணவில்லை. ஒரே அழுகை. அழுது.. அழுது.. துவண்டு தூங்கி விட்டது. அப்படியே தூங்கட்டும். காலையில் விழித்ததும் பசிக்கும், சாப்பிடும் என்று விட்டு விட்டார்கள்.

காலையில் விழித்ததும் ஈனக்குரலில் அழ ஆரம்பித்து விட்டது. சாப்பாட்டு ஊஹும். அருகில் இருக்கும் சாமான்களை பலம் இல்லாத கையால் தூக்கி எறிவதும், துவண்டு விழுவதுமாக இருந்தது. சில மணித்துளியில் மயங்கி விழுந்து விட்டது.

அடித்துப்பிடித்து மருத்துவமனையில் அட்மிட் பண்ணி விட்டார்கள். மூன்று நாட்களாக ட்ரிப் மூலம் தான் அனைத்தும் நடந்து வந்தது. டாக்டர்களுக்கு ஒன்றும் ஓடவில்லை. எந்த மருத்துவமும் கைகொடுக்க வில்லை. மருத்துவர்கள் கையை விரித்து விட்டார்கள். ஒரே மருந்து.. அந்த பெண்மணி இங்கு வந்தே ஆகணும்.

அந்த அரபி அந்த அம்மணியை தொடர்பு கொள்ள எவ்வளவோ முயன்றும் முடியாமல் ஒட்டு மொத்த குடும்பமும் உருக்குலைந்து இருந்தது.

பல வருடங்களுக்கு முன்பு, அப்பெண்மணி ஜதுசியாவின் கம்பனிக்கு அடுத்து இருக்கும் ஒரு வேலைக்கு ஆட்கள் எடுக்கும் நிறுவனம் மூலம் வந்தவர். முதல் நாள் அவளை அழைத்து செல்ல வந்த சௌதி அவள் பேசும் தமிழ் புரியாமல் ஜதுசியாவிடம் அனுப்பி வைக்கப்பட்டார். அதை நினைவில் வைத்துக் கொண்டு ஜதுசியாவின் ஊராக இருக்கும் என்று அவரிடம் சென்று விபரங்கள் கூறினார்.

நான் அவரிடம், தமிழ் மொழி பல நாடுகளில் பேசுகிறார்கள். நான் இந்தியா, அவள் ஸ்ரீலங்கா. என்று விவரித்தார் அவர். பின் அம்மணி கூறிய அவளுடைய ஊரும், இவருக்கு பழக்கமான ஒரு ஸ்ரீலங்கா டிரைவரின் ஊரும் ஒன்று. அவர் மூலமாக அம்மணியை தொடர்பு எல்லைக்குள் கொண்டு வந்து, சௌதியிடம் பேச வைத்துள்ளார்.

ஆனால் அந்த அம்மணியோ

தொடரும்




தொகுப்பு - தன்யா முகப்புத்தகத்திலிருந்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தீன் முரசு

# இஸ்லாம் கூறும் குற்றப் பரிகாரங்கள்

### அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்

4. மனைவியை ஒப்பிட்ட குற்றம் (ளிகார்) செய்தவருக்குரிய பரிகாரம்



அறியாமைக் காலத்தில் தன் மனைவியை விவாகவிடுதலை (தலாக்) இடுவதற்கு பயன்படுத்தும் வார்த்தைகளில் ஒன்றுதான் ளிகார். அதாவது ஒருவர் தன் மனைவியை நீ என் தாயின் முதுகைப் போல் என்று கூறினால், அந்த பெண் தலாக் இடப்பட்டவளாக கருதப்படுவாள். அதாவது என் தாய் எனக்கு ஹராம் என்பது போல, நீயும் என் மீது. ஹராம் என்பதே அவ்வார்த்தையின் அர்த்தமாகும். நம்மில் யாராவது அப்படிக் கூறினால் அது தலாக்காக கணக்கிடப்படமாட்டாது. ஆனால் அவ்வாறு கூறியவர் அதற்குரிய பரிகாரத்தை செலுத்தாதவரை அந்த மனைவியுடன் ஒன்று சேர்வது ஹராமாகும். பின்வரும் பரிகாரங்களை முறைப்படி நிறைவேற்ற வேண்டும்.

- அடிமையை உரிமை விடுதல். அதற்கு முடியாதவர்
- இரண்டு மாதங்கள் தொடர்ந்து நோன்பு நோற்க வேண்டும். அதற்கு முடியாதவர்
- அறுபது ஏழைகளுக்கு உணவளிக்க வேண்டும்.


"மேலும் எவர் தன் மனைவியரைத் தாயெனக் கூறிய பின் (வருந்தித்)தாம் கூறியதை விட்டும் திரும்பி (மீண்டும் தாம்பத்திய வாழ்வை நாடி)னால் அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன்னர் ஓர் அடிமையை விடுவிக்க வேண்டும். அதனைக் கொண்டே நீங்கள் உபதேசிக்கப்படுகிறீர்கள். மேலும் அல்லாஹ் நீங்கள் செய்பவற்றை நன்கறிபவனாக இருக்கின்றான். ஆனால் அடிமையை விடுதலை செய்ய எவர் வசதி பெறவில்லையோ அவ்விருவரும் ஒருவரை ஒருவர் தீண்டுவதற்கு முன் இரண்டு மாதங்கள் தொடர்ச்சியாக நோன்பு நோற்க வேண்டும்.

தொடரும் .. .. – ஆசிரியர் : ஆரிஃப் –

# கத்தோலிக்கம் ஒரு மேலோட்டம்

கடந்தவர தொடர்ச்சி .. ..

சரி கிறிஸ்த்துமஸ"க்கு லீவ் கிடைக்கும் ஆனா ஈஸ்டருக்கு? யோசியுங்க.



சரி இந்திய நாட்டுக்குப் பாதுகாவல் புனிதர் யார்? மாதாதான். ஆகஸ்ட் பதினைந்து மாதா விண்ணேற்றமடைந்த திருநாள். பரலோகம்(சுவர்க்கம்), நரகம் மற்றும் உத்தரிக்கஸ்த்தலம் எனும் மூன்று இடங்களை இறப்புக்குப் பின் வருமென நம்புகிறது திருச்சபை. உத்தரிக்கஸ்த்தலம் திரிசங்கு சொர்க்கம்போல. நவீன சிந்தனையில் நரகம் என்பது நித்தியத்துக்கும்(நுவநசயெடல) கடவுளைக் காணமுடியாமல் ஒருவித ஆன்மீக வேட்கையுடன் ஆன்மா ஏங்கும் நிலை என நம்மப் படுகிறது. பிறந்து ஞானஸ்னானம் பெறாமல் இறந்து போகும் குழந்தைகளுக்கான லிம்போ எனும் இடம் ஒன்று இருந்தது சில மாதங்களுக்கு முன் இது இல்லை என முடிவு செய்யப்பட்டுள்ளது.

கத்தோலிக்க திருச்சபை அடிப்படையில் ஒரு ஆன்மீக "நிறுவனம்". போப் தலைமையில் இயங்கும் ஒரு அமைப்பு. போப்பின் கீழ் கர்தினால்கள், பிஷப், பிஷப்பின் கீழ் பங்கு குருக்கள், குருக்கள் தலைமையில் மக்கள் என இந்த அமைப்பு செயல்படுகிறது. மேலிருந்து கீழ் என சீராக வரயறுக்கப்பட்ட ஒரு ஆட்சியமைப்பைக் கொண்டியங்குகிறது திருச்சபை. இப்போது இந்தத் தகவல்கள் போதும் என நினைக்கிறேன்.

இயேசுவின் போதனைகளின் அடிப்படையிலே பிறந்து வளர்ந்த அமைப்பாகினும் சில நேரங்களில் அவர் எதிர்த்த அமைப்பு சார்ந்த பல மதிப்பீடுகளைக் கொண்டுள்ளதாக கத்தோலிக்கம் காணப்படுகிற-தென்பதுண்மை. தலைமை (போப்) மாறும்போது சில நேரங்களில் நிலமையும் கொஞ்சம் மாறுகிறது.

இரண்டாயிரம் ஆண்டுகளாக பல குறைகளை நிவர்த்திசெய்தும், சிலநேரங்களில் மூடிமறைத்தும் பல தடைகளையும் தாண்டி இருபத்தொன்றாம் நூற்றாண்டின் பிரமாண்டமான உலகளவிலான ஒரு ஆன்மீக அமைப்பாக கத்தோலிக்க திருச்சபை வளர்ந்திருக்கிறது என்பதை மறுக்கமுடியாது.

முற்றும் .. ..

www.tamiloviam.com

# முத்தமிடுதல்

மனிதர்கள் முத்தமிடுவது எதற்காக என்பது குறித்து 168 பண்பாட்டுக் குழுவைச் சேர்ந்தவர்களிடம் ஆய்வு நடத்தப்பட்டது. வெறும் 46 பண்பாட்டுக் குழுக்களைச் சேர்ந்தவர்களே காதலைத் தெரிவிக்கும் வகையில் முத்தம் கொடுக்கிறார்கள் என்றார்கள்.

பெரும்பாலான சமூகங்களில் இம்மாதிரி முத்தம் என்பதே கிடையாது. அம்மாதிரி விருப்பமும்கூட அவர்களுக்குக் கிடையாது. வேட்டையாடி உணவைச் சேகரிக்கும் சமூகங்களில் முத்தமிடுதல் என்பது கிடையாது.

முத்தமிடுவது எல்லா மனிதர்களிடமுமே இருக்கும் வழக்கம் என்ற நம்பிக்கையை இந்த ஆய்வு புரட்டிப்போட்டிருக்கிறது. நாம் இப்போது முத்தமிடுவதைப் போல முத்தமிடுவது என்பது ரொம்பவுமே சமீபத்திய பழக்கம்போலத் தெரிகிறது என்கிறார்கள். ஆனால் 3,500 வருடங்களுக்கு முந்தைய, சமஸ்கிருதத்தில் எழுதப்பட்ட வேதங்களில் முத்தம் பற்றிய குறிப்புகள் இருக்கின்றன. ஒருவரின் ஆன்மாவை உறிஞ்சுவது என முத்தம் குறிப்பிடப்படுகிறது. ஆனால், எகிப்திய சித்திர எழுத்துகளில் ஆட்கள் மிக நெருக்கமாக இருப்பது போன்ற காட்சிகள் இருக்கிறதே தவிர, உதட்டோடு முத்தமிடும் காட்சிகள் இல்லை என தெரியவருகின்றது. 2013ல் முத்தமிடுதல் குறித்து வ்லோடர்ஸ்கி விரிவாக ஆராய்ந்தார். ஒருவரை முத்தமிடும்போது,



எது முக்கியம் எனப் பலரிடம் அவர் கேட்டார். அவர்களிடமிருந்து வரும் வாசனைதான் மிக முக்கியமான விடயமாக இருந்தது. தற்போது மனிதர்கள் முத்தமிடும் முறை மிக சமீபத்தில் உருவான முறை என்கிறார்கள் ஆய்வாளர்கள்.

---

## சிரியுங்கோவன்.. ..



ஜட்ஜ் : ஆடர். ஆடர்... ஆடர்..

குற்றவாளி : 1பீட்ஸா, 2 தோசை, 3 இட்லி

ஜட்ஜ் : ஷட் அப்!

குற்றவாளி : இல்லை, இல்லை செவன் அப் தாங்க!!

*என் கணவருக்கு தூரப்-பார்வை இருக்கு!*

எப்படி தெரியும்?

*பக்கத்தில் இருக்கும் என்னை தெரிய மாட்டேங்குது, ஆனால் தூரத்தில் இருக்கும் பெண்-களையெல்லாம் பளிச்சின்னு தெரியுது*

*ஒருவர் : அவர் திடீர் பணக்காரனா ஆன பிறகு கூட ஆள் மாறலைங்க....*

மற்றையவர் : நிஜமாகவா?

*ஒருவர் : ம்... அவர் எனக்கு தரவேண்டிய நூறு ரூபாய் கடனை இன்னும் தரலை!*

# பிறந்த எண் பலன்கள் 4

4, 13, 22, 31ம் தேதிகளில் பிறந்தவர்கள் நான்காம் எண்ணுக்குரியவர்களாகிறார்கள். இவர்கள் அதிக பிடிவாத குணம் இருக்கும். அடக்கமாகவோ, விட்டுக் கொடுக்கும் பண்பாகவோ பேசத் தெரியாது. எப்பொழுதும் வெட்டு ஒன்று துண்டு இரண்டாக பேசுவார்கள். அழுத்தம் திருத்தமாகவும் திட்ட வட்டமாகவும் இவர்களின் பேச்சு அமையும். பிறருடைய அந்தஸ்தையோ, செல்வத்தையோ, பின்னால் இருக்கும் பலத்தையே பற்றி சற்றும் தயக்கம் காட்டாமல் மனதில் பட்டதை தைரியமாக, வெளிப்படையாக கூறக்கூடிய இயல்பு கொண்டவர்களாக இருப்பார்கள். எல்லா இடங்களிலும் தங்கள் கருத்துக்களையே நிலை நிறுத்த முயற்சிப்பார்களே தவிர பிறருடைய கருத்தை செவி கொடுத்தும் கேட்க மாட்டார்கள். சண்டை போடுவது போல எப்பொழுதும் குரல் உச்ச ஸ்தானியில் ஒலிக்கும். எவ்வளவுதான் நல்ல பயன்கள் இருந்தாலும் பிறர் சொல்வதை அப்படியே ஏற்றுக்

## இவ்வார ராசிபலன்கள்



**மேஷம்** : எதிரிகளால் இருந்த தொல்லை விலகும். வாகனத்தில் பராமரிப்பு தேவைப்படும். குடும்பத்தில் மங்கள நிகழ்ச்சி நடந்தேறும்.



**ரிஷபம்** : சுய கௌரவத்தைக் காப்பாற்றும் வகையில் செயல்படுவீர்கள். உறவினர்களின் உதவி கிடைக்கும். நிகழ்வுகள் இனிதாக அமையும்.



**மிதுனம்** : தகுதிக்கு மீறிய திட்டங்களில் கால் வைக்க வேண்டாம். புதியவர்களின் அன்பு, ஆதரவு கிடைக்கும். வீடு, வாகனத்தில் கூடுதல் பாதுகாப்பு வேண்டும்.



**கடகம்** : வார்த்தையின் வசீகரம் புதியவர்களின் அன்பை பெற்றுத் தரும். செயல்கள் நல்லவிதமாக அமைந்து புகழ் பெறுவீர்கள். வாகன பராமரிப்பு செலவு அதிகரிக்கும்.



**சிம்மம்**: பாக்கிப் பணம் வசூலாகும். உடல்நலம் ஆரோக்கியம் பெறும். நடை, உடை, செயலில் வசீகரம் ஏற்படும்.



**கன்னி** : நற்பெயரும், புகழும் தேடி வரும். வரவை விட செலவு கூடும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். ஆன்மிகஈடுபாடு உண்டாகும்



**துலாம்** : குநல்ல முயற்சி முழுஅளவில் நன்மை தரும். மனதில் நிம்மதி நிலைத்திருக்கும். புத்திரர்கள் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள்.



**விருச்சிகம்** : எதிர்பார்த்த சுப செய்தி வந்து சேரும். தாமதமான பணி முன்னேற்ற பாதையில் நடைபோடும். உடன்பிறப்பின் கருத்தை உதாசீனம் செய்ய வேண்டாம்.



**தனுசு** : எண்ணமும், செயலும் ஒருமுகத்தன்மையுடன் இருக்கும். முக்கியஸ்தரின் உதவி கிடைக்கும். பொது இடங்களில் நடக்கும் வாக்குவாதங்களைக் கண்டால் ஒதுங்கிப் போகவும்.



**மகரம்** : உறவினர்கள் பாசத்துடன் நடந்து கொள்வர். பொதுப்-பணியில் ஈடுபாடு வளரும். பயணங்கள் இனிதாக அமையும். இல்லறத்துணை உங்கள் திட்டங்கள் நிறைவேற உதவுவார்.



**கும்பம்** : சுய திறமையை வளர்த்துக் கொள்வீர்கள். பண-வரவைப் பெருக்க பல வழிகள் உருவாகும். தவறாமல் பயன்படுத்துங்கள்



**மீனம்** : ஆன்மிக நம்பிக்கையை மனஉறுதியுடன் பின்பற்றுவீர்கள். அதிர்'டகரமான வாய்ப்பு வர அனுகூலம் உண்டு. குடும்பத்தில் மங்கள நிகழ்வு ஏற்படும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமெரிக்காவில் இருந்து தமிழர்களுக்கு....

மக்கள் முரசு

உலகமே அதிர்ந்தது. பூகோளமே பிளவுபட்டது. செயற்கை எரிமலைகள் திடீர் திடீர் என்று உலகெங்கும் வெடித்தன. பல நாடுகள் நட்பாகின, இன்னும் சில நாடுகள் பகை போல நடித்தன. எதிரிக்கு எதிரி நண்பனாகின. பழி வாங்கின. பலி கொண்டன. யுத்த களத்தில் ஆய்வுகள் செய்தன. மனிதர்களையும் மனித நேயங்களையும் கொன்று குவித்தன. நரகங்களை பூமியிலேயே உருவாக்கின. இப்படி சொல்லிக் கொண்டே போகலாம் அதுதான் 2ம் உலக யுத்தம். நாம் அந்த யுத்தத்திற்குள் செல்ல தேவையில்லை. ஏனென்றால் அதன் சிறு பகுதியையாவது நாம் நவீன வடிவில் எம்மண்ணில் கண்டுதான் இருக்கிறோம்.

1939 தொடங்கி 1945 வரை 6 வருடங்கள் தொடர்ந்த இந்த யுத்தத்தில் மட்டும் சுமார் 30 நாடுகளுக்கு மேற்பட்ட 100 மில்லியன் மக்கள் சம்பந்தப்பட்டிருக்கிறார்கள். ஏறக்குறைய 11 மில்லியன் மக்கள் உலகெங்கிலும் கொலை செய்யப் பட்டிருக்கிறார்கள். 50 முதல் 85 மில்லியன் மக்கள் உலகெங்கிலும் மாண்டு போயிருக்கிறார்கள். அம்மாடியோவ்! இவ்வளவு பேரா? தலை சுற்றுகிறதல்லவா? அதற்குப் பின்னாவது இந்த உலக நாடுகள் திருந்தியதா என்றால் இல்லை. போர் செய்து கொண்டே இருக்கின்றன. மக்களும் செத்துப் போய்க் கொண்டே இருக்கிறார்கள்.

இந்த 2ம் உலக யுத்தமும் ஐரோப்பாவிலேயே மையம் கொண்டு இருந்தது. அதுவும் ஜெர்மனிதான் முக்கிய பங்கும் வகித்திருந்தது. அகண்ட பெரும் ஜேர்மன் ராச்சியக் கனவுடன் வந்த ஹிட்லரின் கைங்கரியத்தால்தான் அந்த போரே நடந்தது. ஹிட்லர் உலக மக்களால் வெறுக்கப்பட்டாலும், அவரை கதாநாயகனாகப் பார்ப்பவர்களும் அதிகமே. ஹிட்லரை விரும்பாதவர் கூட ஹிட்லர் மீசையுடன் திரியும் டீஆறு காரை அன்றும் இன்றும் என்றும் விரும்பி ஓடிக் கொண்டுதான் இருக்கிறார்கள். முன் முகப்பு ஹிட்லர் மீசை போல இருக்கும். ஒருபோதும் அந்த ஸ்டைல் மாற்றவே மாட்டார்கள்- அதனால் ஹிட்லர் உலகம் முழுக்க இப்பொழுதும் வாழ்ந்து கொண்டுதான் இருக்கிறார்.

அவை நிற்க ... 1 ம் உலகப் போர் தொடங்கி 2ம் உலகப் போர் வரையான காலப்பகுதியில் அமெரிக்காவிற்குள் நடந்த சில வரலாற்று சம்பவங்களை தொட்டுக் கொண்டு வருவோம். ரசிய உள்நாட்டு போருக்குள்ளும் மூக்கை நுழைத்து இருக்கிறது. அதனை விட அமெரிக்க மாநிலங்களான யுட்டஹா, கொலராடோ பகுதிகளில் வசித்த அமெரிக்க பழங்குடியினருடன் இரத்த வெறி பிடித்தது போலவும் போர் செய்துதான் இருக்கிறார்கள். மேலும் அமெரிக்க வரலாற்றில் எங்குமே நிகழ்ந்திராத, என்றுமே நிகழாத ஒரு மிகப்பெரிய ஊழல் ஒன்று அதாவது "Teapot Dome Scandal" என வர்ணிக்கப்படும். 1923 இல் பெட்ரோலியத் துறையில் நிகழ்ந்த ஊழல். அடுத்தது 1929 இல் நிகழ்ந்த மாபெரும் அமெரிக்க பங்குச் சந்தை சரிவு. அதனால் ஒரு வல்லரசு நிலைக்குள் வந்ததாக பெருமைகொண்ட அமேரிக்கா நினைத்துப் பார்க்க முடியாத பொருளாதார நெருக்கடியையும் சுமார் பத்து வருடங்கள் கண்டுதான் வந்தது. "Great Depression" என்று உலகம் வர்ணிக்கும் அளவுக்கு அந்த நெருக்கடி அமெரிக்காவை துவள வைத்தது. அத்துடன் காலநிலை பிழைத்து நீண்ட வரட்சியையும் கூடவே பஞ்சம், பட்டினி வறுமை, வேலையின்மை, பணவீக்கம் என்று நெருக்கடிகள் ஏராளம். அதனால்தான் இன்று கூட பொருளாதார நெருக்கடிகள், தாழ்வுகள் வந்தால் கூட எதனையும் சமாளிக்கும் திறனை அந்த வரலாறு அவர்களுக்கு சொல்லிக் கொடுத்தது என்றால் பொய்யில்லை.

1920இல் அமெரிக்க குடியுரிமை உள்ளவர்கள் பால் வேறுபாடு இன்றி அனைவருக்கும் வாக்களிக்கும் சட்டம் கொண்டுவரப்பட்டதால் முதன் முதல் அமெரிக்க பெண்களும் தேர்தல்களில் வாக்களித்த சம்பவம் குறிப்பிடத்தக்கது. அதனை விட பலரது கனவு வாகனம் கார் தொழிற்துறையில் அமெரிக்காவின் புரட்சியும் அந்த காலப்பகுதியில்தான் நடந்தது. மேலும் ஆயுத தொழில்நுட்ப வளர்ச்சி, இராணுவ வளர்ச்சி, அணுஆயுத ஆய்வுகள், விண்வெளி ஆய்வுகள், உலக வணிக மேலாண்மைகள் என்று அமெரிக்கா தன்னையும் புடம் போட்டுக் கொண்டதுதான் உண்மை. உள்நாட்டில் பொருளாதார சரிவு என்றாலும், உடன் அடுத்த யுத்தம் ஒன்றில் ஆதிக்கம் கொள்ளும் அளவிற்கு மிகவும் திட்டமிட்டு நுணுக்கமாக தன்னை வளர்த்துத்தான் இருக்கிறது. அது எங்கே புரியும் என்றால் பசுபிக் சமுத்திரத்தின் நடுவில் உள்ள சில தீவுக் கூட்டங்களில் 1941 இல் நடந்த சம்பவங்களில் இருந்து உணர்ந்து கொள்ளலாம்.

இந்த இடத்தில் ஒருவரை பற்றி பதிவிடாமல் விட்டுச் சென்றால் அமெரிக்கா எம்மை மன்னிக்காது. யார் ? என்றால் அவர்தான் 1933 இல் இருந்து 1945 வரை 32 வது அமெரிக்க ஜனாதிபதியாக இருந்த Franklin Delano Roosevelt. அமெரிக்க வரலாற்றில் என்றும் இல்லாத வகையில் 3 முறைகள் அமெரிக்க ஜனாதிபதி இருக்கையை அலங்கரித்தவர். நான்காவது முறையாகவும் வந்த சில நாட்களிலேயே இருதய நோயால் 63 வயதில் இறந்துபோனார். அதள பாதாளத்தில் இருந்த அமெரிக்க பொருளாதாரத்தினை தூக்கி நிறுத்துவார் என்று மக்கள் நம்பிக்கையாக எதிர்பார்த்து ஜனாதிபதியாக தெரிவு செய்தார்கள். அப்படியே அவரும் செய்தார். அமெரிக்கா உலகப்போரில் வெல்ல வேண்டும் என்று ஆணையிட்டார்கள். அதனையும் செய்து முடித்தார். நவீன அமெரிக்கர்கள் கதாநாயகனாகவே அவரைக் கொண்டாடினார்கள். இவர் மிகவும் ஒரு மனோதிடம் கொண்டவர். இவர் ஜனாதிபதியாக வரமுன்னர் கவர்னர் தேர்தலிலே நின்று தோற்றுப் போனார். அந்த சோகம் மறக்க எங்கோ ஒரு தீவிற்கு குடும்பத்துடன் சுற்றுலா சென்றார். போன இடத்தில் இவருக்கு போலியோ நோய் தாக்கி விட்டது. உடல் செயலிழந்தது. மருந்துகள் பெரியளவில் கண்டு பிடிக்காத அந்த காலத்தில் தனது விடா முயற்சியால் எழுந்து நடந்து தேர்தலில் வென்று கவர்னர் ஆகி பின்னர் 3 தடவைகள் ஜனாதிபதியாகி சாதித்தவர். 2ம் உலக யுத்தத்தில் இவரை விட வேறு யாரும் ஜனாதிபதியாக இருந்திருந்தால் அமெரிக்காவின் நிலை சிலவேளைகளில் வேறாகயிருக்கும்.

1ம் உலக யுத்தத்திலும் போர் தொடங்கி இரண்டு வருடம் கழித்தே நுழைந்தது. 2ம் உலக யுத்தத்திலும் அப்படித்தான். 1941 இல் அதாவது போர் தொடங்கி இரண்டு வருடம் கழித்தே உள்ளே வந்தது. மன்னிக்கவும். ஜப்பானால் வரவழைக்கப் பட்டது. இதற்குள் பல மர்மங்கள் இருக்கிறதாம். தேவை உள்ளவர்கள் அவர்களைக் கேளுங்கள்.

இந்த யுத்தத்தில் அமெரிக்காவின் நுழைவாசல் வடக்கு பசிபிக் கடலில் இருக்கின்ற அமெரிக்க சமஸ்தானமாக இருந்த எட்டு தீவுகள் சேர்ந்த ஹவாய் தீவுகளில் தான் இருந்தது. அதிலும் ஹொனொலுலு தீவில் மிகவும் பாதுகாப்பாக, உருமறைப்பாக, பிரமாண்டமாக, அமெரிக்க கடற்படையின் முதுகெலும்பாக இருந்த பேர்ல் துறைமுகம் பேரரசு ஜப்பான் அரசின் கடற்படை விமானப்படை ஆகியவற்றின் ஒருங்கிணைந்த இரகசிய நடவடிக்கையால் 1941 டிசம்பர் 07 அன்று அதிகாலையில் அமெரிக்க கடற்படையினரை நித்திரைப் பாயில் வைத்தே தாக்கி அழிக்கப் பட்டதுடன் ஆரம்பமானது. அடுத்தநாளே அமேரிக்கா ஜப்பான் பேரரசு மீது போர் அறிவித்தது. உடனேயே ஜப்பானைத் தாக்கினால் நாம் உதவிக்கு வருவோம் என்றும், அமெரிக்காவும் எமக்கு எதிரிதான் என்றும் ஜேர்மன் தேசாதிபதி ஹிட்லர் அறிக்கை விட்டார். அமேரிக்கா கோலாகலமாக போருக்குள் நுழைந்தது. அங்கே அவர்கள் ஆடிய ஆட்டங்களை அடுத்த பதிவில் பார்க்கலாம்.

இப்படி உலகபோருக்குள் அமேரிக்கா நுழைய காரணமான ஹவாய் அதுவும் 1959 இல் தான் அமெரிக்காவின் எட்டுத் தீவுகளின் நிர்வாகங்களும் ஒருங்கிணைக்கப்பட்டு, தனியொரு ஆட்சிப் பரப்பாக, 50வது மாநிலமாக மாறியது. இன்று உல்லாசப் பயணிகளின் சொர்க்க புரியாகவும், கல்வியியலாளர்களின் இராச்சியமாகவும் அது விளங்குகிறது. மிகப்பெரிய சிவன்கோயில் ஒன்றும் இருக்கிறது. அதனை திருத்தி பிரமாண்டமாக கட்டிக் கொண்டு இருக்கிறாகள். அதனைவிட தமிழர்கள் வாழ்ந்ததாக சான்றுகளும் அங்கே உண்டு. 30 வருடங்களுக்கு முன்னர் தமிழர் வாழ்ந்த தேசங்களில் ஹவாயும் அடக்கம் என்பதை மறக்க வேண்டாம். ஹவாய் பற்றியும் விரிவாக வேறு பதிவில் பார்க்கலாம்.

மேலும் சில பதிவுகளில் 2ம் உலக யுத்தம் தொடர்பில் பல சுவாரசியமான விடயங்களில் மூக்கை நுழைக்கலாம்.




வித்தியா சாகரன்

முகப்பக்கத்திலிருந்து---

## விநோதங்கள்

### நாய்கள் குரைத்தால் அபராதம்

**இத்தாலி**யில் உள்ள நகராட்சிக்கு உட்பட்ட பகுதியில் மக்கள் மதிய உணவு எடுத்துக்கொண்ட பின்னர், குட்டி தூக்கம் போடும்போது நாய்கள் குரைப்பதால் அவர்களின் தூக்கம் பறிபோகிறது என மேயருக்கு தொடர்ந்து புகார்கள் குவிந்ததால், கடந்த செவ்வாய் கிழமையிலிருந்து இந்நகருக்கு உட்பட்ட பகுதியில் வசிக்கும் குடிமக்களின் மதிய தூக்கத்தை கெடுக்காதவாறு பிற்பகல் 2 மணி முதல் 5 மணி வரை நாய்கள் குரைக்காமல் அவற்றின் உரிமையாளர்கள் எச்சரிக்கையாக கட்டுப்படுத்த வேண்டும். நாய்கள் குரைத்து நிரூபிக்கப்பட்டால், அவற்றின் உரிமையாளருக்கு 20 முதல் 500 யூரோ வரை அபராதம் விதிக்கப்படும்.

பிற்பகல் வேளை மட்டுமின்றி, இரவு நேரங்களில் கூட நாய்களை குரைக்க உரிமையாளர்கள் அனுமதிக்க கூடாது என மேயர் உத்தரவிட்டுள்ளார்.

## இப்படியும் நடக்கலாம்

### எயிட்சை மருந்தின்றி கட்டுப்படுத்தலாமா?

**பிரான்ஸ்** நாட்டு தலைநகரான பாரீஸில் வசித்து வரும் இளம்பெண் ஒருவர் பிறக்கும்போது எய்ட்ஸ் உயிர் கொல்லி நோயால் பாதிக்கப்பட்டுள்ளார். இந்த நோயிற்காக அவருக்கு 6 வயது முதல் தகுந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வந்துள்ளது. ஆனால், அதற்கு பின் சிகிச்சையை தொடராத அவர் தற்போது, 18 வயது நிறைவடையும் நிலையில் கடந்த 12 வருடங்களாக எய்ட்ஸ் நோயிற்கு எந்தவித சிகிச்சையும் எடுக்காத நிலையில், அவர் தன்னுடைய நோய் மேலும் பரவாமலும், அபாயமாக மாறாமல் கட்டுக்குள் வைத்திருப்பது மருத்துவர்களுக்கு தெரியவந்துள்ளது.

### திருமண வயது 14லிருந்து 16ஆக



ஐரோப்பிய நாடுகளிலேயே 14 வயதில் சட்டப்படி திருமணம் செய்யக்கூடிய வழக்கம் ஸ்பெயின் நாட்டில் மட்டுமே பல வருடங்களாக இருந்து வந்துள்ளது. ஏனைய நாடுகளில் ஆண், பெண் இருவரும் சட்டப்பூர்வமாக திருமணம் செய்யும் வயது 16 என நிர்ணயிக்கப்பட்டுளளது. ஸ்பெயினில் திருமண வாழ்க்கை பற்றிய போதிய அனுபவம் மற்றும் அறிவு இல்லாததால், 14 வயதில் செய்யப்படும் பெரும்பாலான திருமணங்கள் வெற்றிகரமாக நீடிக்கவில்லை என்பது அண்மையில் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது. எனவே இன்று முதல் அமலுக்கு வரும் புதிய சட்டத்தின் படி, ஆண், பெண் இருவரும் திருமணம் செய்ய-க்கூடிய வயதை 16 ஆக சட்ட-பூர்வமாக உயர்த்தியுள்ளதாக அந்நாட்டு அரசு தெரிவித்துள்ளது.

- அதிநவீன தொழில்நுட்பத்துடனும் சகல வசதிகளுடனும் கூடிய அமெரிக்காவின் ஜனாதிபதி பயணிக்கும் ஏர் போர்ஸ் ஒன் விமானம் பறக்கும் வெள்ளை மாளிகை என்றே அழைக்கப்படுகிறது. உலகில் எந்த நாட்டு விமானத்திலும் இல்லாத அளவிலான வசதிகளை உள்ளடக்கிய அமெரிக்க ஜனாதிபதி பயணிக்கும் விமானம் மனித முயற்சியில் அமைந்த பிரம்மாண்டமே. அந்த விமானத்தில்தான் ஒபாமா வெளிநாடுகளுக்கு செல்லவும் பிற நாட்டு தலைவர்களுடன் சந்திப்பு, பேச்சுவார்த்தை நடத்தவும் பயன்படுத்துகிறார்.

- பிரித்தானியாவின் லிவர்பூல் பகுதியை சேர்ந்தவர் லியானி சுலிவன். இவர் தனது கருவை ஸ்கேன் செய்வதற்காக அருகில் உள்ள மருத்துவமனைக்கு சென்றுள்ளார். பின்னர் ஸ்கேன் முடிவுகளை வீட்டிற்கு சென்று பார்த்த அவர் அதிர்ச்சியில் உறைந்து போனார். அதில் கருவில் குழந்தை உருவத்துடன் டைனோசர் உருவமும் இருப்பது போல் தோன்றியது.



- பிரித்தானியாவில் டோரிஸ். 100 வயதான இவருக்கு கடந்த மாதம் மருத்துவமனை நிர்வாகம் இவர் கர்ப்பமாக இருப்பதாகவும் பரிசோதனை குறித்து மருத்துவரை சந்திக்க வேண்டும் எனவும் கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்தது. இதைக் கண்டு தனது மகன்களிடம் தெரிவிக்க அவர்கள் விழுந்து சிரித்துள்ளனர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரசியல் அலசல்

# தேர்தலில் தாக்கத்தைச் செலுத்துமா முதலமைச்சரின் லண்டன் உரை!

திம்புக் கோட்பாடு வெளிவந்து கடந்த ஜூலை 13ஆம் திகதியோடு முப்பது வருடங்கள் பூர்த்தியடைந்துள்ளது. எதிர்வரும் ஜூலை 23ஆம் திகதி, தமிழின அழிப்பின் ஒரு முக்கிய அங்கமான கறுப்பு யூலையின் முப்பத்தியிரண்டாவது ஆண்டு நினைவு. ஜூலை 29ஆம் திகதி இந்திய – இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டு இருபத்தெட்டு வருடங்கள் நிறைவடைகிறது. இதேவேளை, ஆகஸ்ட் மாதம் 17ஆம் திகதி இலங்கைத் தீவில் நாடாளுமன்றத் தேர்தல் நடைபெறவுள்ளது.

இந்தத் தேர்தல் தமிழர் தேசத்துக்கும் தென்னிலங்கைக்கும் முக்கியமான ஒரு தேர்தலாக அமைந்துள்ளது. மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அரியணையேறுவாரா? இலங்கை சுதந்திரக் கட்சி பலவீனமடையுமா? ஐக்கிய தேசிய கட்சி மீண்டும் எழுச்சி பெறுமா? போன்ற பல்வேறு கேள்விகள் தென்னிலங்கையை மையப்படுத்தி நீள்கிறது. அதேவேளை, முள்ளிவாய்க்காலில் இடம்பெற்ற தமிழின அழிப்புக்குப் பின்னர் ஒப்பீட்டளவில் போதிய தயார்ப்படுத்தல்களுடன் தமிழர் தேசம் இந்த தேர்தலை சந்திக்கவிருக்கிறது.

தமிழர் தேசத்தை பொறுத்தவரை, "தமிழ் தேசிய" அடையாளத்தோடு தமிழரசுக் கட்சியின் வீட்டு சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய கூட்டமைப்பும், அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் கட்சியின் சைக்கிள் சின்னத்தில் போட்டியிடும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியும் முக்கிய போட்டியாளர்களாக தேர்தல் களத்தில் குதித்துள்ளன. ஆயினும், **தமிழ் தேசிய கூட்டமைப்பில் தீர்மானம் எடுக்கும் அதிகாரம் உடையோர், தமிழ் மக்கள் ஒரு சிறுபான்மையினம் மற்றும் இலங்கையர் என்ற நிலைப்பாட்டுடனுள்ளனர். அத்துடன், இனஅழிப்பு தொடர்பான உறுதியான தீர்மானங்களை கூட்டாக எடுப்பதற்கு தயங்கியும் தவிர்த்தும் வருகின்றனர். அதேவேளை, தமிழ் தேசிய மக்கள் முன்னணி, தமிழர்களாகிய நாம் ஒரு தேசம், தமிழ் மக்களுக்கு இடம்பெற்றது இன அழிப்பு என்பதை தொடர்ச்சியாகவும் உறுதியாகவும் வலியுறுத்தி வருகின்றனர்.**

இத்தகைய நிலையிலேயே, பிரித்தானியாவுக்கு பயணம் செய்துள்ள வட மாகாண சபை முதலமைச்சர் நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், சர்வதேச தமிழ் செய்தியாளர் ஒன்றியத்தின் நிகழ்வில் ஆற்றிய சிறப்புரை தமிழ் அரசியலில் முக்கியத்துவம் பெறுகிறது.

## திம்புக் கோட்பாடு

தேர்தல் விஞ்ஞாபனங்களை இதுவரை எந்த தமிழ் அரசியற் கட்சியும் வெளியிடவில்லை. ஆயினும், தேர்தல் விஞ்ஞாபன தயாரிப்பில் இக்கட்சிகள் ஈடுபட்டுள்ளதாக அறிய முடிகிறது. இத்தகைய சூழலிலேயே, "அரசியல் தீர்வுத் திட்டங்களைத் தயாரிப்போர் திம்புக் கோடுபாடுகளை மனதிற் கொண்டு செயலாற்ற வேண்டும். சர்வதேச சட்டங்களுக்கு அமைவாக, சுயநிர்ணய உரிமைக்கு உரித்துடையவர்கள் தமிழ் பேசும் மக்கள் என்ற அடிப்படையில் அரசியல் தீர்வுக்கான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட வேண்டும்" என்று நீதியரசர் விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார். தாயகம், தேசியம், சுயநிர்ணய உரிமை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டது திம்புக் கோட்பாடு. திம்புக் கோட்பாட்டின் அடிப்படையில் தேர்தல் விஞ்ஞபனம் அமைவது தமிழர்களின் பேரம் பேசும் சக்தியை அதிகரிக்கும். தென்னிலங்கை எதனைத் தரத் தயாராக இருக்கின்றது என்ற அடிப்டையில் தமிழர்களுடைய செயற்திட்டங்களை வகுக்க முடியாது. மாறாக, தமிழர்களுக்கான உரிமையையும் நீதியையும் அடைவதற்கான உபாயங்களின் அடிப்படையிலான செயற்திட்டங்கள் முன்னெடுக்க வேண்டும். தோல்வி மனப்பான்மையுடையோருக்கு இது எட்டாக் கனியாகத் தெரியலாம். அரசியலென்பது சாத்தியமற்றதை சாத்தியமாக்குகின்ற சவாலான பயணம். தளராத தன்னம்பிக்கையுடன், அடிப்பணிவின்றி தொடர்ச்சியாக செயற்படுவதனாலேயே இதனை செயற்படுத்தமுடியும்.

## நாம் சிறுபான்மையினம் இல்லை

சிறுபான்மையினம் என்ற வாதம் தமிழர்களின் அரசியல் அடைவிலக்குகளை திசைதிருப்புவதற்காக அண்மைக்காலமாக தீவிரமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்ற சூழலில், தமிழர்கள் சிறுபான்மையினம் இல்லை என தனதுரையில் குறிப்பிட்டு அதற்கான வரலாற்று ஆதரங்களை முன்வைத்தார் நீதியரசர். "1921ஆம் ஆண்டில் சிங்கள மக்கட் தலைவர்கள் சேர் ஜேம்ஸ் பீரிசும், ஈ.சமரவிக்கிரம என்பவரும் வட கிழக்கு மாகாணங்களில் தமிழ்பேசும் மக்களே பெரும்பான்மையினர் என்றும், மற்றைய மாகாணங்களில்தான் சிங்களம் பேசும் மக்கள் பெரும்பான்மையினர் என்றும் ஏற்றுக் கொண்டிருந்தார்கள். இதை எதற்காகக் குறிப்பிடுகின்றேன் என்றால், நாங்கள் எங்கிருந்தோ வந்து சேர்ந்த சிறுபான்மையினர் அல்ல. அதாவது, வேறெங்கோ இருந்து விரட்டப்பட்டதால் இங்கு வந்து குடியேறிய சிறுபான்மையினர் அல்ல. எமக்குரித்தான தனித்துவ தேசிய அந்தஸ்து, சுயநிர்ணய உரிமை போன்ற கோட்பாடுகளை விடுத்து இலங்கைத்தமிழர் வெறும் சிறுபான்மையினம் என்ற வாதத்தைப் பயன்படுத்தும் எம்மவர் யாராக இருந்தாலும் அதனை அவர்கள் தவிர்க்க வேண்டும். தமிழ் மக்களுக்கு உரிமைகளையும் நீதியையும் பெற்றுத்தர அர்ப்பணிப்போடு அவர்கள் செயற்பட முன்வரவேண்டும்" என முதலமைச்சர் தனதுரையில் குறிப்பிட்டார்.

## நடந்தது தமிழின அழிப்பே

கடந்த பெப்ரவரி மாதம் 10ஆம் திகதி வட மாகாண சபையில் இனஅழிப்பு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதனைத் தொடர்ந்து உள்ளக வெளியக சவால்களை முதலமைச்சர் விக்னேஸ்வரன் எதிர்கொண்டார். இனஅழிப்பு தொடர்பாக கதைப்பதை அடக்கி வாசிக்கும் படி, தெற்கு மற்றும் மத்திய ஆசியாவுக்கான அமெரிக்காவின் உதவி இராஜங்க செயலாளர் நிஸா பிஸ்வல், முதலமைச்சர் விக்னேஸ்வரனுக்கு அழுத்தம் கொடுத்ததாக அண்மையில் கொழும்பிலிருந்து வெளிவரும் "சண்டே ரைம்ஸ்" பத்திரிகை செய்தி வெளியிட்டி-ருந்தது. அது முற்றிலும் தவறான செய்தி என குறிப்பிட்ட முதலமைச்சர், "உண்மையில் தமிழ் மக்களின் பிரச்சினைகளையும், எதிர்பார்ப்புகளையும் நாங்கள் உதாசீனம் செய்யமாட்டோம். அவர்களின் நல்வாழ்விற்காக நாங்கள் தொடர்ந்து உழைத்து வருவோம்" என்றே நிஸா பிஸ்வல் கூறினார் எனத் தெளிவுபடுத்தினார். அத்துடன், தமிழினத்துக்கு எதிரான இனஅழிப்பு நிறுத்தப்படவில்லை என்பதை குறிப்பிட்ட முதலமைச்சர், "தமிழினத்துக்கு நடந்த இனஅழிப்பை வெளிப்படுத்தத் தயங்கும் அல்லது தடுக்கும் தமிழர்கள் தொடர்பாக அவர்களின் அரசியல் நெறி தொடர்பாக எமது மக்கள் கேள்வி எழுப்ப வேண்டும். சட்டத்தால் சகித்துக் கொள்ளப்பட்டால்த் தான் இன அழிப்பை ஏற்கலாம் என்ற இன்றைய சில சாராரின் கருத்தை ஏற்பது சற்றுக் கடினமாகத்தான் இருக்கின்றது. எனினும், சட்டம் சரியென்று ஏற்கும் என்ற திடமான நம்பிக்கையுடன் தான் நாங்கள் இனஅழிப்புப் பிரேரணையைக் கொண்டு வந்தோம்" எனவும் தெரிவித்தார்.

## ஆட்சி மாற்றத்தால் பயனில்லை

தங்களுடைய பாதுகாப்புக்-காகவே தமிழ் அரசியல் கட்சிகளுடனான உறவை சிங்கள அரசியல் கட்சிகள் பாவிக்கின்றன எனக் தெரிவித்த விக்னேஸ்வரன், ஜனவரி 8இல் நடந்த ஆட்சிமாற்றமும் அத்தகைய ஒன்றே எனக் குறிப்பிட்டார். அவர் மேலும் கூறுகையில், "ஏமாற்று வித்தைகளுக்கு நாம் முற்றுப்புள்ளி வைக்க வேண்டும். நாம் இனியும் ஏமாறும் இனமாக இருக்க முடியாது. எமது மக்களின் இயல்பு வாழ்க்கையைச் சிதைக்கும் இராணுவ ஆக்கிரமிப்பை விலக்குவதற்குப் புதிய ஆட்சியாளர்களும் இதயசுத்தியுடன் செயற்படவில்லை. எமது மக்களுக்குச் சர்வதேச விசாரணை ஒன்றின் மூலம் நீதி கிடைப்பதற்கு ஒரு கால்வாயாக அமையவிருந்த ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை அறிக்கையைப் பிற்போடுவதற்காக புதிய அரசு பாடுபட்டது. இறுதியில் தங்கள் முயற்சியில் வெற்றியுங் கண்டுள்ளார்கள். இதனைத் தங்களது வெற்றியாகவும் கொண்டாடினார்கள்" எனவும் தெரிவித்த முதலமைச்சர், சுயாதீனமான சர்வதேச விசாரணை ஒன்றின் ஊடாகவே தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் என்ற தொனியில் உரையாற்றினார். இது, உள்நாட்டு பொறிமுறைக்கு அமைவாக நீதி கிடைக்கும் என கூறும் தமிழ் அரசியல்வாதிகளின் நிலைப்பாட்டுக்கு முற்றுமுழுதாக மாறுபாடான நிலைப்பாடு. இதேவேளை, வட கிழக்கில் கடந்த பெப்ரவரி மாதம் சர்வதேச விசாரணையை வலியுறுத்தி போராட்டங்களை முன்னெடுத்த மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கு ஆதரவான கருத்து.

## எமக்கான அரசியல் – பொதுத் தேர்தல்

எதிர்வரும் பொதுத் தேர்தலில் தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டும் என்பதை நேரடியாக வெளிப்படுத்தாத விக்கினேஸ்வரன், "நேர்மையான அரசியல், கொள்கையில் உறுதி, மக்களுக்காக அர்ப்பணிப்புடன் பணியாற்றக்கூடிய மனோபாவம், தூரநோக்குப் பார்வை, எந்தக் கட்டத்திலும் எந்தக் காரணத்திற்காகவும் விலைபோகாத மனோதிடம் கொண்ட அரசியல்வாதிகளே எமக்குத் தேவைப்படுகிறார்கள் எனத் தெரிவித்தார். அத்துடன், தமிழர்களின் தனித்துவத்தை உறுதிப்படுத்தி, அவர்களின் சுயநிர்ணய உரிமையை உறுதிப்படுத்தி, எமது மக்களுக்கான உரிமையையும் நீதியையும் பெற்றுக்கொள்ளக் கூடியவர்களே எமது மண்ணுக்கும் மக்களுக்குமாக இன்றைய காலத்தில் தேவையாக இருக்கின்றார்கள். அதனை உணர்ந்து அவர்கள் தமக்குள்ள வரலாற்றுப் பொறுப்பை, தார்மீகக் கடமையைச் சரிவரச் செய்வதற்கு நான் துணையாக நிற்பேன்" எனவும் தெரிவித்தார்.

## இளைஞர்கள் புரிந்த உயிர்த் தியாகங்களுக்கு மதிப்பளிக்க வேண்டும்

கடந்த காலங்களில் மேற்கொள்ளப்பட்ட தியாகங்களை பேசி வாக்கு கேட்கும் அரசியல் தொடர்கின்ற நிலையில், "உரிமை மறுக்கப்பட்டதாலும், அநீதி தொடர்ந்ததாலுமே எமது இளைஞர்கள் ஆயுதமேந்திப் போராட நிர்ப்பந்திக்கப்பட்டார்கள். அத்தகையவர்களின் தியாகத்தை நாம் வீணடிக்கக் கூடாது, கொச்சைப்படுத்தக் கூடாது. அவர்களின் உற்றார் உறவினர்கள் இன்றும் எம்முன் வந்து கண்ணீர் சிந்துவதைக் காண்கின்றேன். எனவேதான், தேர்தல் காலங்களில் வாக்குகளை அள்ளுவதற்காக மட்டும் அவர்களைப் பயன்படுத்தி விட்டு மற்றைய காலங்களில் அவர்களின் அர்ப்பணிப்புக்கு அபகீர்த்தியையும் அவமானத்தையும் ஏற்படுத்துவதை நாங்கள் தவிர்க்க வேண்டும்" என்ற கோரிக்கையையும் முதலமைச்சர் விக்னேஸ்வரன் அவர்கள் முன்வைத்தார்.

## இளைய சந்ததிக்கான செய்தி

தாயகத்தில் வாழும் மக்களுக்கும் புலம்பெயர்ந்து வாழும் ஈழத்தமிழர்களுக்கும் இடையில் இடைவெளியையும், பிளவுகளையும் ஏற்படுத்தும் நோக்கில் தீயசக்திகள் தீவிரமாகவும் தொடர்ச்சியாகவும் செயற்பட்டு வருகின்றன. இத்தகைய சூழலில், "எமது தேசத்தில் வாழும் இன்றைய சந்ததிக்கும், இலங்கைத் தீவுக்கு வெளியே வாழும் இன்றைய சந்ததிக்கும் இடையிலான தொடர்பு மலர்ச்சி அடையவேண்டும். அது இன்னும் ஆழமாக வேரூன்ற வேண்டும் என்பது எனது அவா. எமது தேசத்திலும் வெளிநாடுகளிலுமுள்ள அடுத்தடுத்து வருஞ் சந்ததிகளுக்கிடையிலான தொடர்புகள் மிக நெருக்கமாக கட்டியெழுப்பப்பட வேண்டும் என்ற எனது கருத்தையும் மிக ஆணித்தரமாக இங்கு வெளியிடுகின்றேன்" எனவும் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில், "எமது மக்களுக்கான உரிமையோ நீதியோ உள்நாட்டில் கிடைக்காது என்பதனை தென்னிலங்-கையில் தொடர்ச்சியாக ஆட்சிக்கு வரும் அரசுகள் புலப்படுத்திக் கொண்டு வந்துள்ளன. ஆதலால்தான், எமது காலத்தில் உறுதியான ஜனநாயக அத்திவாரத்தை இட்டு, எமது எதிர்கால சந்ததியிடம் இந்தப் பணியைத் தொடர்வதற்கு அவர்களிடம் கையளிக்கும் வண்ணம் நாம் விரைந்து பணியாற்ற வேண்டியிருக்கின்றது".

உள்நாட்டு பொறிமுறை என்ற பொறிக்குள் இனஅழிப்புக்குள்ளான மக்களுக்கான நீதியை முடக்குவதற்கு கூட்டுச்சதியொன்று உடன்பட்டுக் கொண்டிருக்கின்ற தருணத்திலே, "எமது மக்கள் தமது உரிமையையும் நீதியையும் பெறுவதற்குச் சர்வதேச ரீதியான ஆதரவு இன்றியமையாதது. அந்த ஆதரவை பெற்றுக் கொள்வதற்கும் பெருக்கிக் கொள்வதற்கும் உலகெங்கும் பரந்து வாழும் இளைய தமிழ் சமுதாயம் தம்மை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்த முன்வர வேண்டும். இதற்கான, அடித்தளத்தை அமைக்க அவர்தம் பெற்றோர்கள் முன் வரவேண்டும். இங்கே வாழும் இளைய சமுதாயத்தினர் தாம் வாழும் நாடுகளின் சட்டதிட்டங்களுக்கு அமைவாக, ஜனநாயக ரீதியில், இலங்கைத் திருநாட்டில் வாழ்கின்ற தமது சொந்தங்களின் உரிமைக்காகவும் நீதிக்காகவும் போராட முடியுமென்று நான் நம்புகின்றேன்" என தனதுரையில் குறிப்பிட்டார். இது, ஈழத்தமிழர்களின் மறுக்கப்பட்ட உரிமைக்காகவும், நீதிக்காகவும் சர்வதேச ரீதியாக போராடி வருகின்ற இளைய சந்ததிக்கு உற்சாகமூட்டும் ஒரு பேச்சு மட்டுமல்ல, மாறாக, சர்வதேச மயப்படுத்தப்பட்ட தமிழர்களின் போராட்டத்தை முன்னகர்த்தி செல்வதில் இளைய சந்ததிக்குள்ள முக்கிய வகிபாகத்தையும் எடுத்துக் காட்டுகிறது.

"இலங்கையர்" என்றும், தமிழர் ஒரு சிறுபான்மையினம் என்றும் அடையாளத்தை பேண விரும்புகின்ற தரப்புகள், புலம்பெயர் மக்களை பிரச்சினைக்குரிய தரப்பாக அடையாளப்படுத்தும் முயற்சியில் தொடர்ச்சியாக ஈடுபட்டு வருகின்றனர். அதேவேளை, தாயகத்திலுள்ள மக்கள் நாடாளுமன்றத் தேர்தலை சந்திக்கவுள்ள தருணத்தில், தமிழ் மக்களுக்கான அடிப்படைக் கோட்பாடுகளையும், அது சார்ந்து அவர்கள் எடுக்க வேண்டிய நிலைப்பாடுகளையும் முதலமைச்சர் லண்டனில் ஆற்றிய உரை தொட்டுக்காட்டியது எனலாம்.

**நிர்மானுசன் பாலசுந்தரம்**

**- www.maatram.org -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# க.பொ.த சாதாரண தர மாணவர்களுக்கான பரீட்சை வழிகாட்டி

## பாடம் : கணிதம்

01. ஒரு வட்டத்தின் ஆரை எவ்வளவாக இருக்கும் போது அவ்வட்டத்தின் பரிதியின் எண் பெறுமானம் அதன் பரப்பளவின் எண் பெறுமானத்திற்குச் சமமாக இருக்குமெனக் காண்க.

02. a + b ஒரு நிறை வர்க்கமாகவும் b + c ஒரு நிறை கனமாகவும் உள்ள a, b, c என்னும் மூன்று அடுத்துள்ள நேர் நிறைவெண்களைக் காண்க

03. ஒரு பெருக்கல் விருத்தியின் ஐந்தாம் உறுப்பின் வர்க்கம் இரண்டாம் உறுப்பிற்குச் சமனாகும். அதன் நான்காம் உறுப்பு 16 எனின்,
   1. 7ம் உறுப்பைக் காண்க.
   2. முதல் ஐந்து உறுப்புக்களின் கூட்டுத்தொகையைக் காண்க.

04. இரு சம பக்க முக்கோணி ABC யில் AB = AC ஆகம். P ஆனது BC யில் அமைந்துள்ள யாதாயினும் ஒரு புள்ளியாகு மெனின், $AB^2-AP^2=BP.PC$ என நிறுவுக

05. $x^2-bx-5=0$ எனும் சமன்பாட்டின் ஒரு மூலகம் -2 எனின்,
   1. மற்றைய மூலகம் யாது?
   2. b இன் பெறுமானம் காண்க.

**பகுதி 02**

01. நிலையான வைப்புகளுக்கு ஆண்டுதோறும் 12சதவீத எளிய வட்டி கொடுக்கப்படும்.
   1. ரூ60,000த்தை ஓர் ஆண்டிற்கு மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யும் போது ஆண்டின் இறுதியில் கிடைக்கும் வட்டியையும், மொத்தப் பணத்தையும் காண்க.
   2. ரூபா 60,000த்தை மேற்குறித்த கணக்கில் வைப்புச் செய்யாமல் ஆண்டுதோறும் பங்குலாபமாக 18சதவீதத்தைக் கொடுக்கும் கம்பனி ஒன்றின் ரூ10 பங்குகளை ரூபா 15வீதம் கொள்வனவு செய்ய பயன்படுத்தலாம். அப்போது கம்பனியில் இருந்து கிடைக்கும் ஆண்டு வட்டியைக் காண்க.

## பாடம் : வரலாறு

01. இங்கிலாந்தில் முதன் முதலில் கைத்தொழில் புரட்சி உருவானது எந்நூற்றாண்டில் ஆகும்?
   1. 19ம் நூற்றாண்டில் 2. 17ம் நூற்றாண்டில்
   3. 20ம் நூற்றாண்டில் 4. 21ம் நூற்றாண்டில்

02. புராதன காலத்தில் இசிகிர என அழைக்கப்பட்டது யாரை என பின்ரும் கூற்றுக்களில் இருந்து தெரிவு செய்க.
   1. அநுராதபுர கால அமைச்சர்களின் செயலாளரை
   2. பொலன்னருவை கால சேனாதிபதியை
   3. யாழ்ப்பாண தீபகற்பத்திற்கு மன்னனின் பிரதிநிதியாக இருந்தவரை
   4. கம்பளை இராசதானியின் பண்டக சாலை பொறுப்பாளரை

03. இலங்கையில் அமைந்துள்ள பொலநறுவை இராசதானிக்கு ஜனநாபுரம் எனப் பெயர் சூட்டியோர் யார்?
   1. சோழர் 2. சேரர் 3. பாண்டியர் 4. நாயக்கர்

04. அமெரிக்காவின் இரு கண்டங்களிலும் 16ம் நூற்றாண்டில் மிகக் கூடிய குடியேற்றங்களை அமைத்த ஐரோப்பிய தேசம்?
   1. ஸ்பானியா 2. பிரான்ஸ் 3. போர்த்துக்கல் 4. ஒல்லாந்து

05. கலாசாரப் பத்தெழுச்சி போன்று அரசியலமைப்பு சீர்திருத்த இயக்கத்திற்கும் மிகப் பெரிய பங்களிப்பைச் செய்த அமையம்
   1. இலங்கை தேசிய சங்கம் 2. சைவ பரிபாலன சபை
   3. அமதியப இயக்கம் 4. மகாபோதி சங்கம்

06. கீழ்வரும் எல்லா நிகழ்ச்சிகளும் பின்வரும் எதன் விளைவாகக் கருதப்படலாம்?
- மனித உரிமைகள் பற்றிய பிரகடனத்தை வெளியிடுதல்
- பிரபுக்களினதும் உயர் வகுப்பின் மதகுருக்களினதும் அதிகாரங்களை நீக்கல்
- சட்டவாக்கத்திற்கு 750 பேர்களைக் கொண்ட ஒரு குழுவை அமைத்த அரசனின் அதிகாரங்களை மட்டுப்படுத்தல்
- அரசனின் விருப்பத்தின் பேரில் மக்களைச் சிறைச்சாலைக்கு அனுப்புவதைத் தடை செய்தல்

   1. ரூசியப் புரட்சி 2. வியென்னா மாநாடு
   3. பிரெஞ்சு புரட்சி 4. காபனாரி இயக்கம்

## பாடம் : விஞ்ஞானம்

01. தேசிய சுண்ணாம்பு உற்பத்திக்கு பயன்படுத்தப்படும் சுண்ணாம்பு கல்லில் அடங்கும் பொருள் எது?
   1. கல்சியம் ஒட்சைட்டு 2. கல்சியம் காபனேற்று
   3. கல்சியம் பொசுபேற்று 4. கல்சியம் சல்பேற்று

02. டெங்கு நுளம்பைக் கட்டுப்படுத்த பிரயோகிக்கப்படும் B.T.I பக்டீரியா விலை மிக்கது. ஆகவே அதனைப் பயனுறுதி வாய்ந்த விதத்தில் பயன்படுத்துவதற்கு பின்வரும் எந்த யோசனை மிகவும் உகந்தது?
   1. நுளம்புகள் பரவத்தக்க எல்லா நீர்த்தேக்கங்களிலும் தெளிக்க வேண்டும்
   2. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் துப்பரவற்ற நீர் சேர்ந்திருக்கும் நீர்த்தேக்கங்களில் தெளிக்க வேண்டும்
   3. டெங்கு நுளம்புத் தொல்லை உள்ள பிரதேசங்களில் தூயநீர் தேங்கியுள்ள சிறிய இடங்களில் தெளிக்க வேண்டும்.
   4. குபபை கூலங்கள் சேரும் எல்லா இடங்களிலும் தெளிக்க வேண்டும்

03. முட்புதர் உள்ள காட்டில் வாழும் நீண்ட கொம்புகளை உடைய விலங்குக் கூட்டம் ஒன்று விரைவாக ஓட முடியாமையினால் இரைகொன்றுண்ணிகளுக்கு இரையாகி படிப்படியாக அழிந்து போயிற்று. இதன் மூலம் வெளிப்படுத்தப்படுவது
   1. வாழ்க்கைப் போர் 2. மிகையான குடித்தொகை
   3. தக்கனபிழைத்து வாழ்தல் 4. தேர்வு

04. பாரம்பரிய இயல்புகளை அடுத்த சந்ததிக்குத் தலைமுறையுரிமை பெறச் செய்வதற்கு ஒரு வகையான கலத்தில் இருக்க வேண்டிய அத்தியவசிய புன்னங்களம்?
   1. கலமென்சவ்வு 2. கொல்கிய உபகரணம்
   3. கரு 4. இழைமணி

05. ஒடுக்கற்பிரிவு பின்வரும் எந்நிலைமையில் ஏற்படும்?
   1. நுகம் முளையமாக மாறும் போது
   2. முளையம் முதிர்மூலவுருவாக மாறும் போது
   3. எல்லா உடற் கலங்களும் வளரும் போது
   4. சூல்களினதும் விந்துகளினதும் உற்பத்தியின் போது

06. ஒரு குறித்த வாயு பயன்படுத்தப்படும் சில சந்தர்ப்பங்கள் கீழே காணப்படுகின்றன.
- ரொக்கெற்றுகளில் எரிபொருள் தகனத்திற்குப் பயன்படுத்தப்படுகின்றது
- உருக்குக் கைத்தொழிலில் திரவ இரும்பைச் சுத்திகரிக்கப் பயன்படுத்தப்படுகின்றது.
- ஒட்சி அசற்றலீன் சுவாலையை உற்பத்தி செய்யப் பயன்படுத்தப்படுகின்றது.

பின்வரும் எவ்வாயு பற்றி மேற்குறித்த தகவல்கள் கூறப்பட்டுள்ளன?
   1. ஐதரசன் 2. நைதரசன் 3. ஒட்சிசன் 4. அசற்றலீன்

07. காரீயம், வைரம் ஆகிய காபன்கள்
   1. சமதானிகளாகும் 2. பிறதிருப்ப வடிவங்களாகும்
   3. சேர்வைகளாகும் 4. வேறுபட்ட பௌதீக நிலைகளாகும்

08. ஓசோன் படை வறிதாக்கத்திற்கு (சிதைவடைதலுக்கு) உயர்ந்தபட்சம் பின்வரும் எக்கூறு பங்களிப்புச் செய்கின்றது?
   1. அமோனியா 2. காபனீரொட்சைட்டு
   3. குளோரபோம் 4. மெதேன்

## பாடம் : தமிழ்மொழியும் இலக்கியமும்

தமிழ் இலக்கணம்

### இலக்கணத் தொடர்கள்

மரபுத்தொடர்கள்.

சொற்கள் சேர்ந்து நின்று தமக்குரிய நேர்பொருளை உணர்த்தாமல் குறிப்பான வேறு ஒரு பொருளை உணர்த்திவருவது இலக்கணத்தொடர் எனப்படும். அத்தகைய குறிப்புப் பொருள் பரம்பரை பரம்பரையாக மக்கள் மத்தியில் வழங்கி வருவதலால் அதனை மரபுத்தொடர் என்றும் கூறுவதும் வழக்கம்.

23.காலூன்றுதல் - நிலைபெறுதல்.
24.காலைச்சுற்றுதல் - பற்றித்தொடர்தல், தொடர்ந்து பற்றுதல்
25.கை கழுவுதல் - முற்றாய் விலகல்
26.கை கூடல் - அநுகூலமாதல்
27.கையிடல் - ஆரம்பித்தல்
28.கைதளர்தல் - வறுமையுறல்
29.கைகொடுத்தல் - உதவி செய்தல்
30.கை மிகுதல் - அளவு கடத்தல்
31.செவிக் கேறுதல் - கேட்பதற்கு இனிமையாக இருத்தல்
32.செவிக் கொடுத்தல் - கவனித்துக் கேட்டல்
33.தலை காட்டுதல் - வெளிவருதல்
34.தலைப்படுதல் - மேற்கொள்ளுதல்
35.தலைகீழாய் நிற்றல் - பிடிவாதம் கொள்ளல்
36.தலைக் கொழுப்பு
37.தலைப்பாரம்
38.தலைவீக்கம்
39.தலைக்கனம்
(36–39) தான் என்ற அகந்தை
40.தலைகீழாய் நடத்தல் - முறை தவறி நடத்தல்
41.தலை மறைதல் - ஒளிந்திருத்தல்
42.தோளிலிருந்து செவி கடித்தல் - ஆதரிப்பவரை வஞ்சித்தல்
43.தோள் மாற்றுதல் - பிறர் சுமையைத் தான் சுமத்தல்
45.தோள் கொடுத்தல் -துணை செய்தல்
46.நாக்கு வளைத்தல் - பழித்தல்



தமிழ் இலக்கியத் தொகுப்பு
ஆசிரியர் : A. ரவீந்திரன் B.A.(Hons)Tamil Special Dip.In.Education
மாணவர் ஒளி கல்வி வளாகம்,
திருஞானசம்பந்தர் வீதி, திருகோணமலை

## Grammar

Fill in he blanks in the following short exchanges using words from th given box. Write the correct letters in he blanks.

1. This is my album. Look at all these (1) ......................................
2. I like this table bu I don't like the (2) ........................................ on it.
3. Isn't this park lovely. Look at those beautiful (3) ........................
4. That dog looks hungry. Lets give it some (4) ..........................
5. I like these (5) ........................... Blue is my (6) ........................... colour.

| | | |
|---|---|---|
| (a) butterflies | (b) favourite | (c) skirts |
| (d) vase | (e) photos | (f) biscuits |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐந்தாம் ஆண்டு புலமைப் பரிசில் பரீட்சைக்கான வழிகாட்டி - 30

01. பற்கள் இல்லாத பாலூட்டி
I. அழுங்கு ii. மாடு iii. எலி iv. வௌவால்

02. பொதுச்சுகாதாரப் பரிசோதகரைக் குறிக்கும் எழுத்துக்கள்?
i. D.M.O ii. P.H.I iii. A.G.E iv. A.S.P

03. கந்தளாய்க்குளத்தை கட்டியவர் யார்?
I. வசபன் ii. தேவநம்பியதீசன்
iii. மகாசேனன் iv. 2ம் அக்போ

04. ஆணி வேர்த்தாவரம்
i. தென்னை ii. கித்துள் iii. வேம்பு iv. பனை

05. தெறியோட்டை தைக்க பயன்படுத்தப்படும் தையல் முறை யாது?
i. கம்பளி ii. நரம்பு iii. மீன்முள்ளு iv. நிரப்பு

06. சூரியனுக்கு அண்மையில் உள்ள கோள்
i. புதன் ii. சுக்கிரன் iii. செவ்வாய் iv. வியாழன்

07. மரணித்தவர்களின் உடலை நீரினால் கழுவி சுத்தம் செய்வோர்
i. பௌத்த சமயத்தினர் ii. இந்துசமயத்தினர்
iii. கத்தோலிக்க சமயத்தினர் iv. இஸ்லாம் சமயத்தினர்

### பகுதி - 02

01. அண்ணா வீட்டுக்கு வந்தது அப்பா வீட்டுக்கு வருவதற்கு 35 நிமிடங்களுக்கு முன்பாகும். அம்மா வீட்டுக்கு வந்தது அப்பா வீட்டுக்கு வந்து 45நிமிடங்களுக்குப் பின்பாகும் .அதன் படி, அம்மாவீட்டுக்கு வந்தது பி.ப 4.00 மணிக்கு எனின், அண்ணா வீட்டுக்கு வந்த நேரம்?

..........................................

02. சதுரவடிவக்காணியொன்றின் ஒருபக்க நீளம் 40அ ஆகும். அதன்படி, அச்சதுரவடிவக் காணியைச் சுற்றி ஐந்து நிரைக்கம்பி அடிக்கத் தேவைப்படும் கம்பியின் மொத்த நீளம்?

..........................................

03. உருவில் நிழற்றப்பட்ட பகுதியை தசம எண்ணாகக் தருக?

..........................................



04. கமலி பிறந்த திகதி 2001.11.28 ஆகும் 2015.12.28 திகதி கமலிக்கு எத்தனை வயது?

..........................................

05. நான்முகி ஒன்றின் 3 முகங்கள் மாத்திரம் நிறந்தீட்டப்பட்டுள்ளன, அதன்படி, அந்த நான்முகியின் நிறந்தீட்டிய முகங்களின் எண்ணிக்கை அந்த நான்முகியின் மொத்தமுகங்களின் என்ன பங்காகும்?

..........................................

06. ஷாருக் தன்னிடமிருந்த பணத்திதில் 1/5 பங்கை செலவு செய்தான் மீதியாக அவனிடம் ரூ.30.00 இருந்தது எனின் ஆரம்பத்தில் அவனிடம் இருந்த மொத்தப்பணம்?

..........................................

07. 45 நிமிடங்களில் 15Km தூரம் செல்லக்கூடிய ஒரு வாகனம் அரைமணித்தியாலத்தில் எத்தனை Km தூரம் செல்லும்?

..........................................

### சென்றவார விடைகள்

01. 2 02. 3 03. 2 04. 2 05. 3 06. 2 07. 1
01. 5/8 02. ரூ 342 03. 7.30 04. 1. கைதி 2. அடிமை
04. 1. ஆதிகாலத்தில் தரைமார்கமாகச் செல்வதற்கு மாட்டுவண்டி, குதிரைவண்டி ஆகியவற்றைப் பயன்படுத்தினர்.
2. தலைவா, வருக! வருக!
05. 1. கிளை 2. இனிப்பு 3. மரம்



**புலமைப் பரிசில் வழிகாட்டல்**
**ஆசிரியர் திரு.ந.மனோகரன்**

---

# சிறுவர் முரசு






## நல்ல யோசனை



அரசனுக்கு வயதாகிக் கொண்டிருந்தது. தலைமுடி கொட்டிவழுக்கை அதிகமாகிக் கொண்டிருந்தது. அரசனுக்கு தன் கம்பீரம் குறைந்து விடும் என்ற கவலை அதிகமாகிப் போய் ஒரு நாள் அரசவைத் தலைமை மருத்துவனிடம் நிவாரணம் கேட்டான்.

தலைமை மருத்துவன் "மன்னா! இதற்கு மருந்தே கிடையாது" என்று உண்மையைச் சொன்னான். அரசனுக்கு அந்த பதில் பிடிக்கவில்லை. ஆத்திரம் தலைக்கேறி தலைமை மருத்துவனை சிறையில் அடைக்குமாறு உத்தரவிட்டான். ஊரில் இருக்கும் அனைத்து சிறந்த மருத்துவர்களையும் வரவழைத்தான். ஒரே வாரத்தில் தன் பிரச்சனைக்குத் தீர்வு கண்டு பிடிக்குமாறு பணித்தான்.

மருத்துவர்கள் அனைவரும் கூடி விவாதித்தனர். அரசனிடமிருந்து எப்படித் தப்பிப்பது என்றுதான் தீவிரமாக யோசித்துக் கொண்டிருந்தார்கள். அப்போது இளைய மருத்துவன் திரும்பவும் "என்னை நம்பினால் நம் எல்லோருக்கும் விடிவு நிச்சயம்" என்று கூறினான். வேறு வழியில்லாமல் அனைவரும் ஒத்துக் கொண்டார்கள். அவனோ, மருந்தை நேரடியாக அரசனிடம்தான் தருவேன், என்று கண்டிப்பாகச் சொல்லி விட்டான்.

அடுத்த நாள் சபை கூடியது. மருத்துவர்கள் இளைய மருத்துவனைக் கூட்டிக் கொண்டு அரசவைக்கு வந்தார்கள். அவன் அரசனிடம் ஒரு குடுவையைக் கொடுத்தான். "மன்னா இதில் இருக்கும் மருந்தை தினமும் சிரசில் தேய்த்துக் கொண்டு வந்தால், ஒரே மாதத்தில் முடி கொட்டுவது நின்று போகும். இரண்டே மாதத்தில் முடியில்லாத இடத்திலெல்லாம் முடி வளர ஆரம்பிக்கும், ஆறே மாதத்தில் கருகருவென தலையெங்கும் தலைமுடி அழகாக வளர்ந்திருக்கும்" என்றான். மன்னனுக்கு மட்டற்ற மகிழ்ச்சி. "இப்போதே அந்தப்புரத்திற்குப் போய் தலையில் மருந்தைத் தடவிக் கொள்கிறேன்" என்று கிளம்பினான்.

அப்போது மருத்துவன் "மன்னா. இந்த மருந்து வேலை செய்ய வேண்டுமென்றால், அதைத் தலையில் தடவிக் கொள்ளும் போது மட்டும் நீங்கள் குரங்கை நினைக்கக் கூடாது!" என்றான்.

முட்டாள் மன்னன் சரியென்று சொன்னான். மருத்துவர்களும் தப்பித்தோம் பிழைத்தோம் என்று ஊரை விட்டே ஓடி விட்டார்கள். அந்தப்புரத்திற்குச் சென்ற அரசன், அங்கு குடுவையைக் கையில் எடுத்து அதிலிருந்த மருந்தைத் தலையில் தேய்க்கப் போனான். அப்போது அவனுக்கு மருத்துவன் சொல்லிய பக்குவம் கவனத்திற்கு வந்தது. "குரங்கை நினைக்கக் கூடாது" என்று நினைத்தவுடன் குரங்கைப் பற்றி நினைக்க ஆரம்பித்து விட்டான். என்ன முயற்சித்தும் அவன் நினைவிலிருந்து குரங்கை அகற்ற இயலவில்லை. ஒவ்வொரு முறை அவன் மருந்தைக் கையில் எடுத்த போதும் மருத்துவனின் அறிவுரை மனதில் தோன்றி அவனுக்குக் குரங்கு பற்றிய யோசனை வந்து கொண்டே இருந்தது.

பல நாள் திரும்பத் திரும்ப முயற்சித்து விட்டு, இந்தச் சிரமத்திற்குப் போகாமல் வழுக்கையாகவே இருந்து விடலாம் என்று தீர்மானித்து விட்டான்.

பொ.ஹிலன் அன்ட்ரூ,
தரம் - 06B



ம.ஐஸ்வர்யா,
தரம் - 07



**சிந்திக்க .. ..**
நம்மிடம் எதுவும் இல்லை என்று நினைப்பது : ஞானம்
நம்மைத் தவிர ஏதும் இல்லை என்று நினைப்பது : ஆணவம்!!!

திருமதி. ஸ்ரீமதி, திருகோணமலை



### பொது அறிவு - 32

இப்போது அறிவு வினா விடை ஓர் போட்டியை நோக்காகக் கொண்டு தரப்படுகின்றது. போட்டிப் பரீட்சை தொடர்பான விபரம் பின்னர் அறிவிக்கப்படும்.

01. புவி சூரியனை வலம் வருவதால் ஏற்படும் விளைவு?
பருவ காலங்கள்

02. உமிழ்நீரில் காணப்படும் நொதியம் எது? டயலின்

03. புத்தர் எங்கு முதன் முதலில் போதித்தார்? சாரநாத்

04. கண்ணின் விம்பம் விழும் பகுதி எது? விழித்திரை

05. கண்ணின் கிட்டப் பார்வையை திருத்த உதவுவது எது?
குழிவில்லை (லென்ஸ்)

06. வாயு நிரப்பப்பட்ட மின்சார விளக்கில் காணப்படும் மின்இழை எதனால் செய்யப்பட்டுள்ளது?
டங்ஸ்டன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பால்நிலை வன்முறைகளைக் குறைக்கும் கலந்துரையாடல்

வவுணதீவு பிரதேச செயலகமும், இளைஞர் அபிவிருத்தி "அகம்" நிறுவனமும் இணைந்து மேற்கொண்ட "பால்நிலை வன்முறைகளை குறைத்தலுக்கான முன்மாதிரி கிராம ஆய்வுக் கலந்துரையாடல்" கடந்த 23.07.2015 மட்டக்களப்பு வவுணதீவு பிரதேசத்திலுள்ள உண்ணிச்சை கிராமத்தில் நடைபெற்றது. உண்ணிச்சை கிராம மீனவர் சங்க கட்டிடத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வவுணதீவு பிரதேச உதவி பிரதேச செயலாளர் திரு.எஸ்.இராஜ்பாபு அவர்கள் கலந்து கொண்டிருந்தார்கள்.

கிராம பொது மக்கள் மத்தியில் நடைபெற்ற இந் நிகழ்வில் விசேடமாக வலயக்கல்வி அலுவலக தொழில் வழிகாட்டல் ஆலோசனை உத்தியோகத்தர், தாதியர் சேவை உத்தியோகத்தர் மற்றும் காவல்துறை உத்தியோகத்தர் ஆகியோருடன் சிறுவர் பாதுகாப்பு, வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம், மகளீர் அபிவிருத்தி, முன்பள்ளி அபிவிருத்திசார் உத்தியோகத்தர்களும் கலந்து கொண்டுள்ளனர்.




- கலாரதன் -



## கல்வியில் வளர்ச்சி தேவை

ஒரு சமூகம், கல்வியிலும் பொருளாதாரத்திலும் வளர்ச்சியடையும் போதே அந்த சமூகம் முன்னேற்றமடையும் என கிழக்கு மாகாண விஸ்வகர்ம பொற்றொழிலாளர் சம்மேளனத்தின் தலைவர் சிவம் பாக்கியநாதன், கடந்த ஞாயிற்றுக்கிழமை தெரிவித்தார். ஆளுமை மிக்க தலைவர்களை உருவாக்க மாணவர் சமூகத்தை கல்வியில் முன்னேற்ற வேண்டும். அந்த வகையில் நாட்டுக்கு ஆளுமை மிக்க தலைவர்களை உருவாக்க மாணவர் சமூகத்தை கல்வியில் முன்னேற்றுவதற்காக எமது சம்மேளனம் மாணவர்களின் கல்விக்குதவுவதுடன் அவர்களை பாராட்டுவதற்கான நடவடிக்கையையும் எடுத்துள்ளது.





## அலங்காரரூபன் தென்மோடிக் கூத்து

திறந்த வெளிக்குரிய கூத்தரங்கு மனிதரின் வாழ்தலைத் தன்னகத்தே கொண்ட கலைவடிவமாகும். நுண்கலைத்துறையில் 2012களின் பின்னர் அதன் இயல்பான வெளியில் நின்றே கூத்து கற்பிக்கப்பட்டு வருகின்றது. இவ்வாறு கற்றல், கற்பித்தல் மூலம் திறந்த வெளியில் உருவானதே அலங்காரரூபன் தென்மோடிக் கூத்தாகும். இதில் நுண்கலைத்துறை மாணவர்களும் விரிவுரையாளர்களும் ஆடி தமது ஆற்றல், திறன், நிபுணத்துவங்களை வெளிப்படுத்தினர். இக்கூத்து உருவாக்கத்திற்கு நுண்கலைத்துறை விரிவுரையாளர் திரு சு.சந்திரகுமார் செயற்பட்டுள்ளார்.



# திருமலை மண்ணில் மலர்ந்த முதல் ஆயர்

குருத்துவம் ஓர் அழைத்தல், இறைவனின் கொடை ஓர் அர்ப்பணம், தியாக வாழ்வு.

இயேசுவை மையப்படுத்தி இதயத்தில் சாந்தமும் தாழ்ச்சியுமுள்ளவராக குருத்துவ பயணத்தை பயணித்தமையால் இன்று அருட்பணி நோயல் இமானுவேல் அடிகளார் ஆயராக உயர்த்தப்பட்டுள்ளார்.

ஒரு மறை மாவட்டத்தில் ஆயர்கள் தேர்ந்தெடுக்கப்படுவதில்லை. ஆயர்கள் பரிசுத்த பாப்பரசரால் நியமிக்கப்படு-வார்கள். பாப்பரசரின் தூதுவர் பேராயத்தின் தலைவரையும், ஆயர் பேரவைத் தலைவரையும், மறை மாவட்ட ஆலோசனைக் குழு உறுப்பினர்களையும் கலந்து ஆலோசித்த பின் அனுப்பப்படும் தகுதியான குருக்களில் ஒருவரையே பாப்பரசர் நியமிப்பார்.

ஆயர் ஆவதற்கான தகுதிகள் என்ன?

உறுதியான விசுவாசம், நல்லொழுக்கம், அருள் வாழ்வு சார்ந்த தாகம், அறிவு நுட்பம் மற்றும் மனித பண்புகள் இருத்தல் வேண்டும். அத்துடன் முப்பத்தைந்து வயதடைந்திருக்க வேண்டும். குருப்பட்டம் பெற்று குறைந்த அளவு ஐந்து ஆண்டு நிறைவு செய்திருக்க வேண்டும். இறையியல் அல்லது திருச்சபை சட்டம் ஆகியவற்றில் முனைவர் பட்டம் அல்லது முது நிலை பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது குறைந்தளவு இப்பாடங்களின் வல்லுனராய் இருத்தல் வேண்டும். இவ்வாறு தகுதிகளைக் கொண்ட ஒருவருக்கு பரிசுத்த பாப்பரசரிடமிருந்து நியமனக் கடிதம் வரும் கடிதம் பெற்று மூன்று மாதங்களுக்குள் அவர் ஆயராக திருநிலைப் படுத்தப்பட்டு தமது பணிப் பொறுப்பை ஏற்க வேண்டும். மூன்று ஆயர்கள் சேர்ந்தே ஒரு குருவை ஆயராக திருநிலைப்படுத்துவார்கள். அதுவும் முறையான ஆவணம் பாப்பரசரிடமிருந்து அவர்கள் பெற்றிருக்க வேண்டும்.

திருகோணமலை மண்ணின் மைந்தனாக மலரும் முதல் ஆயர் கிறிஸ்டியன் நோயல் இமானுவேல் ஆண்டகையின் திருநிலைப்படுத்தும் சடங்கு 25.07.2015ஆம் திகதி சனிக்கிழமை திருகோணமலை புனித சூசையப்பர் கல்லூரி மைதானத்தில் காலை 8.30 மணிக்கு ஆரம்பமாகும். பாப்பரசரின் பிரதிநிதியின் தலைமையில் கொழும்பு கர்தினால் உட்பட ஏனைய அனைத்து ஆயர்களும் புடைசூழ ஆயத்துவம் திருநிலைப்-படுத்தும் சடங்கு இடம்பெறும்.

திருகோணமலை மறை மாவட்டத்தில் பெரிய கடைப் பகுதியில் திரு.ஜோக்கின் இம்மானுவேலுக்கும் திருமதி.டொனேட்டா மேரி இம்மானுவேலுக்கும் நான்காவது பிள்ளையாக அவதரித்தார் கிறிஸ்டியன் நோயல் இமானுவேல். இவரது தந்தையார் நில அளவை திணைக்களத்தில் கடமையாற்றியவர். 1993ஆம் ஆண்டில் இவர் காலமானார். இவருக்கு 5 சகோதரர்களும், 4 சகோதரிகளும் இருக்கின்றனர். இவரது கடைசி சகோதரியான அருட் சகோதரி தர்ஷினி தற்போது குவைத் நாட்டில் காமல் துறவற சபையில் இணைந்து தொண்டாற்றி வருவதும் குறிப்பிடத்-தக்கது.

அதிமேதகு ஆயர் நோயல் இமானுவேல் ஆண்டகை திருகோணமலையில் பிறந்து புனித சூசையப்பர் கல்லூரியில் கல்வி பயின்றவர். 1975ஆம் ஆண்டில் திருகோணமலை சிறிய குருமடத்தில் இணைந்தார். பின் 1978 - 1983 வரை கண்டி தேசிய குருமடத்தில் இணைந்து மெய்யியல் கல்வி பயின்று 1983 - 1986 வரை இந்தியாவில் திருச்சி தூய பவுல் குருமடத்தில் இறையியல் கல்வியை நிறைவு செய்தார். 21.05.1986ஆம் திகதி திருகோணமலை தூய மரியாள் பேராலயத்தில் மேதகு கிங்ஸ்லி சுவாம்பிள்ளை ஆண்டகையினால் குருவாக திருநிலைப்படுத்தப்பட்டார். பின் 1986ஆம் ஆண்டில் மட்டக்களப்பு தூய மரியாள் இணைப் பேராலயத்தில் உதவி பங்குத் தந்தையாக குருத்துவ வாழ்வை ஆரம்பித்தார். தொடர்ந்து மட்டக்களப்பு மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளிலும் கடமையாற்றி 1999 -2001 காலப்பகுதியில் இத்தாலியில் அமைந்துள்ள ரோம் நகரம் சென்று B.Ph, B.Th, SLT (ஒழுக்கவியல்) போன்ற உயர் கல்வியும் கற்று வந்தார். 2001 - 2011 ஆம் காலப்பகுதியில் கண்டி தேசிய குரு மடத்தில் விரிவுரையாளராகவும் பணியாற்றியுள்ளார். இதே கால கட்டத்தில் அவர் பல வெளியீடுகளையும் வெளியிட்டுள்ளார். இத்தனைக்கும் மத்தியில் உள்நாட்டிலும், வெளிநாட்டி-லும் பல்வேறு கருத்தரங்குகளில் பங்குபற்றியும், நடாத்தியும் உள்ளார். அயராத இப்பணிகளுக்கு மத்தியிலும் தான் கற்ற கல்லூரியையும் மறக்காமல் கல்லூரியின் பழைய மாணவர் சங்க பொதுச் செயலாளராக 2012 ஆம் ஆண்டு தொடக்கம் இன்று வரை கடமையாற்றியும் வருகிறார். அத்துடன் திருகோணமலை தமிழர் அபிவிருத்தி ஒன்றியத்தின் (TTDF) தலைவராக 2015ஆம் ஆண்டு மாசி மாதம் முதல் இன்று வரை கடமையாற்றி வருகிறார்.

ஆயர் நோயல் இமானுவேல் ஆண்டகை சிறு. வயதிலிருந்தே அமைதியான சுபாவம் உடையவர். இவர் குருவாக வரக்காரணம் என்னவென்று சாந்தமே அணிகல-னாகப் பூண்ட அவரின் தாயாரிடம் கேட்டேன், செபம்தான் என்றார்.

திருகோணலை மறை மாவட்ட பெரிய கடைப் பகுதியில் உருவான முதலாவது குருவானவரும், திருகோணமலை மண்ணில் மலர்ந்த முதலாவது ஆயரும் இவரே என்பதில் திருகோணமலை மக்கள் என்றும் பெருமைப்படலாம். கலாநிதி கிறிஸ்டியன் நோயல் இமானுவேல் ஆண்டகையை திருகோணமலை சகல மக்கள் சார்பாக வாழ்த்துவதோடு அவரது பணி சிறக்க பிரார்த்திப்போம்.



- திரு. ஜோ. நோமன் பல்தஸார் -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தமிழ் சிவில்...

ஆதரவு வழங்கும் எந்தவொரு கட்சிக்கோ தமிழ் மக்கள் ஆதரவளிக்க முடியாது. அப்படி ஆதரவளிப்பது எமது இனத்தின் ஒட்டுமொத்த அரசியற் தற்கொலைக்குச் சமனாகும். அப்படியாயின் நாங்கள், அதாவது தமிழ் மக்கள் எந்தக் கட்சிக்கு, அவற்றில் யாருக்கு ஆதரவளிப்பது? என்பது பற்றிச் சிந்திக்க வேண்டும்." எனத் தமிழச் சிவில் சமூக அமைப்பானது தனது அறிக்கையை விடுத்துள்ளது.

மன்னார் மறை மாவட்வட ஆயர் இராயப்பு ஜோசப் தலைமையில் இயங்கும் தமிழ் சிவில் சமூக அமைப்பானது தமிழர்களின் விடுதலையை இலக்காகக் கொண்டு இயங்கிவரும் அறிவுக் கழகம் என்பது குறிப்பிடத்தக்கது.

தமிழர்கள் எதிர்நோக்கும் பல்வேறு சந்தாப்பங்களில் அவர்கள் எவ்வாறு முடிவுகளை எடுக்கலாம் என்பது பற்றிய ஆய்வுகளை வெளியிடும் இவ்வமைப்பானது அரசியல் சாராத அமைப்பாக இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## தேசத்தை....

கடந்த 18ம் திகதி திருகோணமலை மாவட்டத்தில் தமிழ்க் காங்கிரஸ் கட்சியின் நடுவப் பணியகத் திறப்பு விழாவின் பின்னர் கடற்கரையில் நடைபெற்ற பொதுக் கூட்டத்தின்போது உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

தமிழருக்கான நிரந்தரத் தீர்வாக தனித் தமிழ்த் தேசமே இருக்க முடியும் எனத் தெரிவித்த அவர் அத் தேசத்தைப் பெற்றுக்கொள்ளக் கூடிய ஒருவர் தமிழ் காங்கிரஸ்சில் இருந்து நாடாளுமன்றத்துக்குச் சென்றாலே போதுமானது எனத் தெரிவித்தார்.

"எத்தனை பேர் நாடாளுமன்றத்திற்குச் செல்கின்றார்கள் என்பது முக்கியமல்ல. யார் நாடாளுமன்றத்திற்குச் செல்கின்றார்கள் என்பதும் அவர்கள் எந்தத் தீர்வைப் பற்றிப் பேசப் போகின்றார்கள் என்பதுமே முக்கியமானது.

எனவே தமிழர்களுக்கான நிரந்தரத் தீர்வைப் பெற்றுத் தரக்கூடியவர்களை தேர்வு செய்யுங்கள" என அவர் தெரிவித்தார்.











தமிழ்த் தேசிய மக்கள் முண்ணனியின் அலுவலகத் திறப்புவிழாவில் கலந்து - கொண்ட கட்சியின் பொதுச் செயலாளர் கஜேந்திரன் கட்சியின் ஆதரவாளர் திரு. இராதாகிருஸ்னண் மற்றும் தலைமை வேட்பாளர் இரா.ஶ்ரீஞானேஸ்வரன் ஆகியோர் நாடாவை வெட்டுவதையும், பெயர்ப்பலகையைத் திறந்து வைப்பதையும், கூட்டத்தில் கலந்து கொண்ட வேட்பாளர்களையும், ஈகைச் சுடரேற்றிய முன்னாள் போராளி திரு.விஜயபாகு அவர்களையும் காணலாம்

## திருமலை....

இணைந்த சமூகமும் படும் பாட்டினை கருத்திற் கொண்டு "போதைப்பொருள் பாவனையும் சமுதாய சீரழிவும்" என்ற தலைப்பில் ஒரு நாடகமும், அதிகளவிலான முகப்புத்தகப் பாவனையினால் பெண்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள், பணத்துக்காக மனிதாபிமானத்தினை விற்று வாழும் தற்கால சமூகம், பெண்கள் சிறுவர்களுக்கு எதிரான பாலியல் துஸ்பிரயோகம், பொருத்தமற்ற ஒருவரை முன்மாதிரியாக கொண்டு வாழ்வதானால் ஏற்படும் பிரச்சினைகள் எனும் ஐந்து தலைப்புக்களின் கீழ் வீதிநாடகங்கள் இடம்பெற்றன.

திருகோணமலை வளாக தொடர்பாடல் கற்கை நெறியின் சிரேஸ்ட விரிவுரையாளர் கலாநிதி எஸ் ரகுராம் அவர்களின் வழிகாட்டலில் இவை அரங்கேறின.

## சூரங்கல்....

பிரத்தியேகச் செயலாளர், கூட்டுறவுத் திணைக்களத்தின் முக்கிய நிர்வாகிகள் கால் நடை வளர்ப்பாளர்கள் கூட்டுறவுச் சங்கத்தின் உறுப்பினர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

மக்களின் வேண்டுகோளினை ஏற்றுக் கொண்ட அமைச்சர் விரைவில் இதற்கான தீர்வினை உரிய திணைக்களத்தின் அதிகாரிகளுடன் கலந்துரை - யாடி பொது முகமையாளரை நியமிப்பதுடன் இச்சங்கத்திற்கென புதிய நிர்வாகக் கட்டமைப்பினையும் ஏற்படுத்துவதாகவும் தெரிவித்தார்.

## சிசிறிவி...

வெளியிட்டுள்ள அறிக்கையில் ''சம்பூர் மக்களுக்கும், இளைஞர்களுக்கும் , அரசியல் வாதிகளுக்கும் ஒரு அன்பான அவசர வேண்டுகோள்!

சம்பூர் மண்ணை மீட்பதற்கான ஒன்பது ஆண்டுகால போராட்டத்தில் நாம் வெற்றி பெற்று போல் தோன்றினாலும் சம்பூர் மண்ணை சூழ்ந்துள்ள ஆபத்து இன்னும் அகலவில்லை என்பதை நீங்கள் உணர மறுக்கின்றீர்கள். இவ்வளவு காலமும் மெத்தனப்போக்காக இருந்து சம்பூர் மக்கள் தொடர்ந்தும் அகதி முகாம்களில் அல்லற்படுவதற்கு வழிவகுத்த அரசியல் வாதிகள் மீது அழுத்தம் கொடுத்து சம்பூர் மண்ணை மீட்பதற்காக எம்மில் பலர் போராடிக் கொண்டிருந்த வேளையில் இன்று சம்பூர் மக்களின் கவனத்தினை மண்ணை மீட்பதிலிருந்து திசை திருப்பி தேர்தலை நோக்கி சிலர் தெரிந்தோ தெரியாமலோ திருப்பி விட்டுள்ளனர்.

உச்சநீதிமன்றம் கேற்வே கம்பனியின் சம்பூர் காணி தொடர்பான வழக்கினை தள்ளுபடி செய்த போதும் கம்பனிக்காரர்கள் சம்பூரிலுள்ள அவர்களின் இரண்டு கொள்கலன்களை அகற்றுவதற்குப் பதிலாக அவற்றில் சீ சீ ரிவி கமராக்களை நேற்று பொருத்தியுள்ளமை . பலத்த சந்தேகத்தினை ஏற்படுத்துகின்றது.

தேர்தலுக்குப் பின்னர் அவர்கள் மீண்டும் சம்பூர் மக்களுக்கு பிரச்சினைகளை ஏற்படுத்தலாம்.

நேற்று அரசடிப்பிள்ளயைார் ஆலயச் சூழலில் அளவீட்டுத் திணைக்களத்தினை சேர்ந்த சிலர் அனல் மின்நிலையத்திற்கான காணிகளை அளந்து எல்லையிடும் வேலைகளை ஆரம்பித்துள்ளனர்.

சம்பந்தரும் மாவை சேனாதிராசா அவர்களும் சம்பூர் மக்களின் எதிர்கால வாழ்வாதாரத்தினை விட இந்தியாவின் உறவு எங்களுக்கு முக்கியம் என்று கூறி சம்பூர் அனல் மின்நிலையத்தினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஆதரிக்கும் ஒரு சூழ்நிலையில் சம்பூர் மக்களும் வாக்களித்து சம்பந்தரின் வெற்றிவாய்ப்பினை இலகுபடுத்தி சம்பூர் மண்ணில் அனல் மின்நிலையம் அமைப்பதற்கு சம்பூர் மக்களே ஒத்துழைக்க வேண்டிய நிலைமை இன்று உருவாக்கப்பட்டுள்ளது.

சம்பூர் மக்களே, நீங்கள் உடனடியாக உங்கள் காணிகளுக்கு சென்று தற்காலிக கொட்டில்களை அமைத்து குடியேறா விட்டால் ஆகஸ்ட் 17 ஆந் திகதிக்குப் பின்னர் சிலவேளை நிரந்தரமாக வருந்த வேண்டி வரும்.

சம்பூர் இளைஞர்களே! இந்த கடைசி வாய்ப்பினை பயன்படுத்த வேண்டிய பொறுப்பு உங்களுக்குள்ளது.

சம்பூர் விடயத்தினை அரசியலுக்கு அப்பால் எடுத்து உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் நாம் போராடியபடியால் தான் சம்பூர் மண்

## சுகாதாரத் தொண்....

வழங்கியுள்ளதாகத் தெரிவித்து கிழக்கு மாகாண சபைக்கு முன்னால் கடந்த ஜூலை ஆறாம் திகதியில் இருந்து சுகாதார தொண்டர்கள் தமக்கு நிரந்தர நியமனம் வழங்கும் வரை காலவரையறையற்ற போராட்டம் நடத்துவோம் என்றும் தொடர்ந்து 16 நாட்கள் நடாத்தப்பட்டுவந்த போராட்டம் முதலமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர் பிற்போடப் பட்டது.

போராட்டம் நடைபெறும் இடத்துக்குச் சென்ற முதலமைச்சர் ஹாபிஸ் நஸீர் அஹமட், அவர்களின் பிரச்சனைகளைக் கேட்டறிந்ததுடன் தேர்தலின் பின்னர் நியமனம் வழங்கும் விபரம் பேசப்படும் அதன்போது உங்கள் கோரிக்கை எடுத்துக்கொள்ளப்பட்டு நியமனம் வழங்குவதற்கான தீர்மானம் எடுக்கப்படும் அதன்போது அனைவரையும் அழைக்கிறேன் கலைந்து செல்லுங்கள் என்று கேட்டுக்கொண்டதற்கமைவாக அனைவரும் கலைந்து சென்றனர்.




(விளம்பரம்)


எமக்குக் கிடைத்தது.

வலிகாமம் மக்களும் முள்ளிக்குளம் மக்களும் அரசியல் வாதிகள் எல்லாவற்றையும் பார்த்துக் கொள்வார்கள் என்று நினைத்து அழுத்தக் குழுவாக செயற்படாத காரணத்தினால் தான் இன்றும் காணிகளை இழந்து துன்பப் பட்டுக் கொண்டிருக்கின்றனர்.

ஆகவே நிலைமையின் தீவிரத்தினை சம்பூர் மக்களுக்கு எடுத்துரைத்து மிகக் குறுகிய காலத்திற்கு அடிப்படைத்தேவைகளைச் சமாளிக்குமாறு அவர்களை அறிவுறுத்த வேண்டியது உங்களது வரலாற்றுக் கடமையாகும்.

அரசியல் வாதிகளே!

வரப்போகும் தேர்தல் முடிவுகள் சம்பூர் விடயத்தில் அரசியல் ரீதியான பாதகமான தாக்கத்தினை செலுத்துவதற்கிடையில் மக்களை முன்னின்று குடியேற்ற வேண்டியது உங்கள் கடமையாகும்.

தேர்தல் கடமைகளில் முழுமூச்சாக ஈடுபடும் நீங்கள் சம்பூர் குடியேற்றத்தினை நடத்திவிட்டு மக்களிடம் வாக்குக் கேளுங்கள். இதற்காக ஒருசில நாட்கள் நீங்கள் செலவிட்டாலே போதுமானது.

சம்பூரை நாங்கள் தான் மீட்டோம் என்று கூறி சம்பூர் பத்திரகாளி கோயிலில் பூசை வழிபாடுகள் செய்து தனது தேர்தல் பிரச்சாரத்தினை தொடங்கிய சம்மந்தர் ஆளுனர், அரசாங்க அதிபர் ஆகியோருடன் கதைத்து தேர்தலுக்கு முன்னர் சம்பூர் மக்களை குடியேற்ற வேண்டும் என்று இன்னும் ஏன் நினைக்கவில்லை.

ஆகவே, தேர்தல் முடிந்தவுடன் சம்பூர் தொடர்பான நிலைமை தலைகீழாக மாறுவதற்கு முன்னர் துரிதமாகச் செயற்பட்டு மக்களை மீள்குடியேற்றுங்கள். தேர்தலுக்குப் பின்னர் நிலைமை மாற்றமடைந்து சம்பூர் மக்கள் ஊரை இழந்து தொடர்ந்தும் அகதிமுகாம்களில் இருக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டால் வரலாறு உங்களை மன்னிக்காது என எழுதப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# உள்ளூர் விளையாட்டு செய்திகள்

# விளையாட்டு முரசு

## கூடைப்பந்தாட்ட மைதான திறப்பு விழா

தன்யா

புனித சூசையப்பர் கல்லூரியின் கூடைப்பந்தாட்ட மைதான திறப்புவிழாவும், நுழைவாயில் திறப்பு விழாவும் நேற்று வெள்ளிக்கிழமை திருமலை ஆயர் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை அவர்களின் தலைமையில் பாடசாலை அதிபராகிய வணக்கத்திற்குரிய அன்டனி பொன்சியன் அவர்களின் ஏற்பாட்டில் வெகு விமர்சையாக இடம்பெற்றது.

இந்நிகழ்விற்கு பிரதம அதிதியாக கல்வி அமைச்சர் திரு.எஸ்.தண்டாயுதபாணி அவர்களும் மற்றும் பல அதிதிகளும் கலந்து சிறப்பித்தமை குறிப்பிடத்தக்கது.

அதிபர் அவர்கள் தனது நீண்டகால கனவு நனவாகியதாக தனது உரையின் போது தெரிவித்தார். அத்துடன் தொடர்ந்து இரு அணிகளுக்கிடையில் போட்டியும் இடம்பெற்றது.





## முஹம்மதியா வித்தியாலய மாணவன் சாதனை

திருகோணமலை வலயம் குச்சவெளிக் கோட்டம் தி.முஹம்மதியா முஸ்லிம் வித்தியாலய மாணவன் முபாரக் முஸ்த்தாக் அண்மையில் நடைபெற்ற கிழக்கு மாகாண மட்ட மெய்வல்லுனர் விளையாட்டுப் போட்டியில் 1500 மீற்றர் 17 வயதுக்குட்பட்ட தெரிவில் முதலாம் இடத்தைப் பெற்று தங்கப் பதக்கத்தைப் பெற்று பாடசாலைக்கு பெருமையை ஈட்டிக் கொடுத்துள்ளார்.

இவரை கௌரவித்து பாராட்டி பரசில்கள் வழங்கும் நிகழ்வு 15.07.2015 அன்று அல்ஹம்ரா மகாவித்தியாலயத்தில் நடைபெற்றது. இவருக்கான துவிச்சக்கர வண்டியை பரிசாக புல்மோட்டையைச் சேர்ந்த அதிபர் ஐ.ஏ.காதர் அவர்களின் அனுசரனையுடன் வலயக் கல்விப்பணிப்பாளர் திரு.என்.விஜேந்திரன் வழங்கி வைத்தார்.

கோட்டக்கல்விப்பணிப்பாளர் திரு.கே.செல்வநாயகம், அதிபர் என்.எம்.ஹிதாயத்துள்ளா நிருவாக உத்தியோகத்தர் எம்.அனிஸ் மற்றும் உதவிக்கல்விப் பணிப்பாளர். கணேசலிங்கம், சேவைக்கால ஆலேசகர்கள் என பலரும் கலந்து சிறப்பித்தனர்.

வலயக் கல்விப் பணிப்பாளர் அவர்கள் மாணவனை பாராட்டி மேலும் மேலும் பல சாதனைகளை தேசிய மட்டங்களில் நிகழ்த்த வேண்டும் என பாராட்டினார்



## பிரித்தானிய தேசிய கீதத்தை புறக்கணித்தார்!!



வடக்கு அயர்லாந்தை பிறப்பிடமாக கொண்ட வெஸ்ட் ப்ரோம்விச் கழக கால்பந்தாட்ட வீரர் ஜேம்ஸ் மக்கெலன், தனது கழகதுக்கும் சார்ல்ஸ்டன் கழகத்துக்கு-மிடையே தெற்கு கரோலினாவில் இடம்பெற்ற போட்டியில் பிரித்தானியாவின் தேசிய கீதம் இசைக்கப்படும் போது அதற்கு எதிர்ப்பு தெரிவிக்கும் முகமாக எதிர்புறம் திரும்பி நின்றுள்ளார். இவரது இச்செயலுக்கு முக்கியமாக அயர்லாந்தில் உள்ளவர்கள் உட்பட பலர் ஆதரவு தெரிவித்துள்ள வேளை இங்கிலாந்திலுள்ள ரசிகர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

இரண்டு உலகப்போர்களிலும் உயிர்நீத்த இராணுவ வீரர்களை நினைவுகூறும் பொருட்டு பிரித்தானியாவில் அடையாளப்படுத்தப்படும் பொப்பி மலரை அணிய கடந்த வருடம் மறுப்பு தெரிவித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## புதிய போட்டியாளர்கள் தெரிவிப்பு

பாகிஸ்தான் அணிக்கெதிராக இரு இருபதுக்கு 20 போட்டிகளில் விளையாடவுள்ள இலங்கை குழாம் அறிவிக்கப்பட்டுள்ளது. லசித் மலிங்க தலைமையிலான இந்த குழாமில் 5 புதுமுக வீரர்களுக்கு வாய்ப்பு வழங்கப்பட்டுள்ளது. இதேவேளை, திரிமான்னே மற்றும் சந்திமால் ஆகியோர் இக்குழாமில் இடம்பெற-வில்லை. சாமர ஹப்புகெதரவுக்கு மூன்று வருடங்களின் பின்னர் அணியில் வாய்ப்பளிக்கப்பட்டுளது. இதேவேளை, பாகிஸ்தான் அணிக்கெதிரான இரு இருபதுக்கு 20 போட்டிகளும் கொழும்பு ஆர். பிரேமதாச மைதானத்தில் இடம்பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## முதல் முறையாக தமிழர் பயிற்றுவிப்பாளராகிறார்

ஆஸ்திரேலிய பயிற்சியாளர்கள்தான் இந்திய கிரிக்கெட் அணிக்கு இதுவரை பயிற்சியாளர்களாக இருந்துள்ளனர். தற்போது முதல் முறையாக ஓர் இந்தியர் அதுவும் தமிழர் ஆஸ்திரேலிய "ஏ" அணிக்கு துடுப்பாட்டப் பயிற்சி அளிக்க தேர்வு செய்யப்பட்டுள்ளார். தமிழக அணியின் முன்னாள் வீரர் ஸ்ரீராம்தான் ஆஸ்திரேலிய துடுப்பாட்ட பயிற்சியாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

## வில்லியர்ஸின் வாரிசு – ஏலியன்ஸ்

தென்னாபிரிக்க கிரிக்கெட் அணியின் அணித் தலைவரும் "ஏலியன்ஸ்" என்று செல்லமாகவும் அழைக்கப்படும் டி வில்லியர்ஸ"க்கு ஆண் குழந்தை பிறந்துள்ளது. இதையடுத்து அவருக்கு உலகம் முழுவதும் இருந்து வாழ்த்து குவிந்து வருகிறன. தென்னாபிரிக்க அணி தற்போது வங்கதேசத்தில் சுற்றுப்பயணம் செய்து வருகிறது. அந்த அணியின் அணித் தலைவர் டி வில்லியர்ஸின் மனைவி டெனிலா நிறைமாத கர்ப்பிணியாக இருந்ததையடுத்து, அவருக்கு இந்தத் தொடரில் ஓய்வளிக்கப்பட்டுள்ளது.

## இங்கிலாந்து மகளிர் அணி வெற்றி

மகளிருக்கான ஆஷஷ் தொடரை இங்கிலாந்து மகளிர் அணி வெற்றியுடன் ஆரம்பித்துள்ளது. இந்த தொடரின் முதலாவது சர்வதேச ஒருநாள் போட்டியில் இங்கிலாந்து மகளிர் அணி 4 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடிய அவுஸ்திரேலிய மகளிர் அணி நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்களில் 9 விக்கெட் இழப்பிற்கு 238 ஓட்டங்களைப் பெற்றது. 239 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இங்கிலாந்து மகளிர் அணி 45.4 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை மாத்திரம் இழந்து 240 ஓட்டங்களைப் பெற்ற இங்கிலாந்து அணி போட்டியில் 4 விக்கெட்டுக்களால் வெற்றிபெற்றது.

## களமிறங்க முடியா நிலை

**சிம்பாப்வே மற்றும் தென்னாபிரிக்காவுக்கான** கிரிக்கெட் தொடர்களில் நியூசிலாந்து கிரிக்கெட் அணியின் சகலதுறை வீரர் மிட்செல் சன்ட்னெர் பங்கேற்கமாட்டார் என் அறிவிக்கப்பட்டுள்ளது. பயிற்சியின்போது அவரது விரலில் ஏற்பட்ட காயம் காரணமாகவே அவர் விலகவேண்டி நேரிட்டுள்ளதாகத் தெரியவருகிறது. அவருக்குப் பதிலாக இதுவரை சர்வதேசப் போட்டிகளில் விளையாடியிருக்காத ஜோர்ஜ் வோர்க்கர் அணியில் இணைக்கப்படுவார் என்று தெரிகிறது. இறுதியாக நடந்துமுடிந்த உள்ளூர் தொடரில் 538 ஓட்டங்களைப் பெற்று கவனத்தை ஈர்த்திருக்கிறார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உள்ளூர் செய்திகள்

### அஞ்சல் வாக்குகள் தயார்!!!



தபால் திணைக்களத்தின் ஊடாக உரிய திணைக்களங்களுக்கு விநியோகிக்கும் வகையில் அவற்றை வகைப்படுத்துகின்ற நடவடிக்கை தற்போது திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெற்று வருகின்றன.

இந் நடவடிக்கை பதினெட்டு அமர்வுகளில் நூற்றுக்கும் மேற்பட்ட அரச உத்தியோகத்தர்களின் பங்களிப்புடன் நடைபெறுவதாக மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரியும் மாவட்ட அரசாங்க அதிபருமான என்.ஏ.ஏ.புஸ்பகுமார தெரிவித்தார்.

மொத்தமாக 11,451 பேர் அஞ்சல் வாக்குகளுக்காக விண்ணப்பித்திருந்ததாகவும் அவற்றுள் 337 பேரது விண்ணப்பங்கள் நிராகரிக்கப்பட்டதாகவும் மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேலும் தெரிவித்தார்.

### சிசிரிவி புகைப்படக் கருவிகள் கொள்கலனில் பொருத்தப்பட்டுள்ளதை அடுத்து

# சம்பூர் மீள்குடியேற்றம் சம்பந்தமாக சந்தேகம்

சம்பூரில் விடுவிக்கப்பட்டதாகக் கூறப்படும் நிலப்பரப்பில் நிறுவப்பட்டிருந்த கேற்வே கம்பனிக்குச் சொந்தமான கொள்கலன்களில் சிசிரிவி கண்காணிப்புக் கமெராக்கள் பொருத்தப்பட்டுள்ளன.

கேற்வே கம்பனிக்கு வழங்கப்பட்ட சம்பூர்க்காணிகள் மக்களிடம் கையளிக்கப்பட்டதாக தமிழத் தேசியக் கூட்டமைப்பு கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தெரிவித்திருந்தது.

கேற்வே கம்பனியிடம் முதலீட்டுச் சபையூடாக வழங்கப்பட்ட காணிகளை மீளப் பெற சனாதிபதியால் வெளியிடப்பட்ட வர்த்தமானியினைத் தடைசெய்யக்கூறி குறித்த கம்பனியால் உயர் நீதிமன்றில் வழக்குத்தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

அவ்வழக்கினைத் தள்ளுபடி செய்து உயர் நீதிமன்றம் அறிவித்தல் விடுத்தல் பின்னர் அக்காணிகள் மக்களுக்குக் கையளிக்கப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டிருந்தது.

மக்கள் தமது காணிகளில் குடியேற்ற நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ள வேளையில் அங்கிருந்து அகன்று செல்ல வேண்டிய குறித்த கம்பனியானது தனது கொள்கலன்களில் நேற்று கண்காணிப்புக் கமெராக்களைப் பொருத்தியுள்ளதை அடுத்து மீள்குடியேற்ற நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த மக்களுக்கு சந்தேகங்கள் எழுந்துள்ளன.

இவ்விடயம் தொடர்பாக சம்பூர் மகாவித்தியாலயப் பழைய மாணவர்கள் என்ற அமைப்பினர் 21

# சுகாதாரத் தொண்டர்களின் தொடர் போராட்டம் ஒத்திவைக்கப்பட்டது




திருகோணமலையில் கடந்த பல நாட்களாகத் தொடர்ந்த சுகாதார தொண்டர்களின் போராட்டம் தற்காலிகமாகக் கைவிடப்பட்டுள்ளது.

கிழக்கு மாகாண முதலமைச்சருடனான கலந்துரையாடலின் பின்னர் இப்போராட்டம் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

தமக்குக் கிடைக்க வேண்டிய நியமனங்களை காசுக்கு விற்பனை செய்ததுடன் அவற்றை தகுதியுள்ள தமக்குத் தராமல் வேறுசிலருக்கு 21

# 4000 வாக்குகளுக்காக தேசியப் பட்டியலை விற்க முயற்சி!

நாடாளுமன்றத் தேர்தலில் திருகோணமலை மாவட்டத்தில் நான்காயிரம் வாக்குகளுக்கு ஒரு தேசியப் பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு முஸ்லிம்களுக்கு விலை பேசியுள்ளதாக அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர்.

நான்காயிரம் வாக்குகளைப் பெற்றால் தேசியப் பட்டியலில் கிடைக்கும் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை மூதூரின் திடீர் தௌபீக்கிற்கு வழங்கவுள்ளதாகச் செய்திகள் வெளியாகியுள்ளன.

இவ்விடயம் தொடர்பாக பலசுற்றுப் பேச்சுக்கள் நடாத்தப்பட்டுள்ளன. அப்பேச்சுக்கள் மூதூரிலும் திருகோணமலையிலும் தொடர்ந்ததாகத் தெரிகின்றது.

ஏனைய தமிழ்க்கட்சிகளில் தமிழ்த் தேசியக்



கொள்கையுடன் மக்களிடம் வந்துள்ள அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் கட்சியினர் கணிசமான அளவு வாக்குகளைப் பெறும் பட்சத்தில் தமக்கு ஏற்படப்போகும் இழப்பினை ஈடு செய்யவே இவ்வாறு பேரம் பேசப்பட்டுள்ளது என அவதானிகள் தெரிவித்துள்ளனர்.

# சூரங்கல் கால்நடை வளர்ப்பாளர்கள் சங்க கூட்டம்

திருகோணமலை கிண்ணியா சூரன்கல் கால் நடைவளர்ப்பாளர்கள் கூட்டுறவு அபிவிருத்திச் சங்கத்தின் பொது முகாமையாளர் நியமனம் ஒரு மாத காலம் கடந்தும் இன்னமும் தெரிவு செய்யப்படாமை குறித்து கால்நடை வளர்ப்பாளர்கள், சங்க உறுப்பினர்கள் திருகோணமலை விவசாய அமைச்சில் இடம்பெற்ற கலந்துரையாலின் போது மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங்கத்திடம் தெரிவித்தனர்.


கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கூட்டுறவு திணைக்களம் இச்சங்கத்தின் நிர்வாகக் கால எல்லை முடிவுற்றதாலும் பொது முகாமையாளர் வேறு தொழில் நிமித்தம் விலகியமையாலும் ஓர் இயக்குனர் சபையினை தற்காலிகமாக நிறுவியது ஆனால் அதன் செயற்பாடுகள் போதுமானதாக இல்லாமையாலும் தங்களுக்கு வழங்கப்படுகின்ற பால் விற்பனை நிதி மற்றும் ஏனைய கடன் வசதிகள் போன்றன காலதாமதம் பெறுவதாகவும் கூறி மக்கள் அமைச்சருடன் கலந்துரையாடலினை மேற்கொண்டனர்.

இந்நிகழ்வில் அமைச்சின் செயலாளர், அமைச்சரின் 21

## சலப்பைஆற்றில் கட்டப்படும் கட்டிடம்??

சலப்பையாற்றில் கட்டப்பட்டுக் கொண்டிருக்கும் கட்டிடமொன்று தொடர்பாகச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

குறித்த கடற்பிரதேசத்தில் நிர்மாணிக்கப்பட்டுள்ள கட்டமைப்பு புத்த கோயில் பண்பைக் கொண்டிருப்பதால் அங்கு புத்தர் கோயில் உருவாக்கப்படலாம் என்றே சந்தேகிக்கப்படுகின்றது.



# திருமலை வளாகத்தின் வீதி நாடகங்கள்

சமூக விழிப்புணர்வை நோக்காக போதைப்பொருள் பாவனையினால் கொண்டு, கிழக்கு பல்கலைக்கழக ஒருவனது குடும்பமும் அவனோடு 21

திருகோணமலை வளாக தொடர்பாடல் கற்கை நெறியின் மூன்றாம் வருட மாணவர்கள் அரங்கேற்றிய வீதி நாடக தொடர் ஒன்று கடந்த வாரம் திருகோணமலை நகர மத்தியில் இடம்பெற்றது.

தற்காலத்தில்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org